விகவாசமுடையவன் ஞானிசத்தியவான் சௌந்திர்ய முள்ளவன் திரவியமுடையவன் சுகந்த குணமுள்ளவன் செல்வம் இரக்கம் சத்தியமுள்ளவன் அழகன் குரு பக்திபீட முள்ளவன் உத்தியோகமுள்ளவன் சனி சுக்கிரன் சூரியன் புதன் பாபிகள் சந்திரன் செவ்வாய் சுபர்கள் குரு செவ்வாய் யோககாரர்கள் செவ்வாய் துதியாதிபதியாக இருந்தாலும் கொல்லான் கெண்டத்தை கொடுப்பான் சனி கொல்லுவான்.

### முக்கிய அறிவிப்பு

துர் ஸ்தானம் என்பது:-

2-3-6-7-8-12 இந்த ஸ்தானங்களில் பாபர்களானாலும் துதியாதிபதிகளானாலும் இருந்தால் மாரகத்துக்கு ஒப்பான கெண்டத்தை கொடுப்பார்கள் சுபகிரஹம் பார்வையாக இருந்தால் சுபத்தை செய்வார்கள்.

இலக்கினம் சர இராசியானால் 2-7 அதிபர்கள் மாரகாள்

இலக்கினம். "ஸ்திரம் ராசியானால் 2-8 அதிபர்கள் மாரகாள்

உபயராசியானால் 7 11 அதிபர்கள் மாரகாள் இலக்கினத்துக்கு 8ல் இராகு இருந்தால் பிதுர்மாரகம்

4 7 5 ல் இராகு இருந்தால் மாதுர்மாரகம் இலக்கினத்துக்கு 12ம் ஆதிபத்தியம் சுக்கிரன் அல்லது சனிக்கு இருந்தால் ஜாதகனுக்கு மாரகன்.

ஜனனம் 27 நக்ஷத்திரங்களின் பிறந்தவர்களின் பலன்கள்

### நக்ஷத்திர பலன்

அசுபதி:- தருமசிந்தனை சத்தியம் தவறாதவன் கீர்த்தி ஸ்திரீபோகன் தேசம் முதலிய குணமுடையவன்.

பரணி:- ஐஸ்வர்யம் கீர்த்தி நல்லறிவு ஸ்திரீவசியன்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கிருத்திகை : வாக்கு சாதுர்யமுள்ளவன் திரவியம் நிதி அற்ப நித்திரை உடையவன்.

ரோகிணி : கீர்த்தி-பகவிருத்தி-பெரியோர் சகவாசம்-அன்னதான சிந்தனையுள்ளவன் திடகாத்திரமுள்ளவன். மிருகசிரம் தாம்பூலப்பிரியன் விநோதபிரியன் நினைத்த காரியம் முடிப்பவன் நாடகபிரியமுள்ளவன் சுகந்த வாசனை பிரியன்.

திருவாதிரை : கீர்த்தி-சரீரபலம்-கடன்-ஆசாரமுள்ளவன்.

புனர்வசு : சரீரபலமுள்ளவன், நற்குணம் புத்தி ஜனவசியன் பொய் சொல்லாதவன், வலிமையுள்ளவன் பிதுர்வாக்கிய பரிபாலமுள்ளவன் (இராமர்)

பூசம் : பொறுமை ஒழுக்கம்-பாக்கியம்-கடவாக்கு அலங்கார பிரியன்-மாதா-பிரியன் சுகவான்

ஆயில்யம் : தெய்வபக்தி குருபக்தி மாதா பிதாவுக்கு இனியமாக இருப்பவன்-சிற்றுணவு பிரியன் சங்கீத பிரியன் தேச சஞ்சாரி:

மகம் : விநோதபிரியன்-நியாயம்-அறிந்தவன் சௌந்தர்ய ரூபம் உள்ளவன்.

பூரம் : அழகான தேகம் கடின வசனம் வியாபார நன்மை, கோபமுடையவன்.

உத்திரம் : சௌந்திர்யமுள்ளவன் தேவர்கன். பெரியோர்களிடம் அன்பு மெல்லிய திரேகமுடையவன்- முன்கோபி சிறுபசியுள்ளவன் கல்வியுள்ளவன்.

ஹஸ்தம் : கல்விஜனவசியன் குருபத்தி தருமசீலன் ஸ்நான விருப்பமுள்ளவன்- அற்ப பசி-அகன்ற மார்புடையவன் திரவியம்-சம்பாத்தியமுடையவன்.

சித்திரை : நற்குணம்- திடவாக்குமுன்கோபி போஜன பிரியன் சரீரபலம் லோபம் நன்னடத்தையுள்ளவன்-

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சுவாதி : கல்வி தேவதா பக்தி ஜனவசியன் இராஜ சன்மானம் ஆசாரம் ஒழுக்கம் தருமசிந்தனை போஜனபிரியன் திடகாத்திர முள்ளவன்

விசாகம் : தருமசிந்தி ஜனவசியன் அடக்கம் நல்வாக்கு பொறுமை ஸ்திரிநேசம் இரக்கம் ஐஸ்வரியமுள்ளவன்

அனுஷம் : நற்குணம் நீதி மாதா பிதா விசுவாச முள்ளவன் உல்லாசம் தாம்பூலபிரியன். அகன்ற மார்புடையவன் சௌந்தர்யம்.

கேட்டை : இரக்கம் தெய்வபக்தி முன்கோபி இராஜசன் மானம் கடினவசனம் பேசுபவன் துஷ்டசகவாசம் முள்ளவன்.

மூலம் : கல்வி காரியசித்தி ஆச்சாரபுத்தி மாதா பிதா பிரியன் உறவினர் வெறுப்பு முன்கோபி மெல்லியசரீரம்.

பூராடம் : இராஜ சிநேகிதர் மாதா விஸ்வாசம் உறவினர் சிநேகம் ஸ்திரி விலோசம் சிற்றுணவு பிரியன் விசாலபுத்தியுடையவன்.

உத்திராடம் : ஸ்னானபிரியன் தெய்வ பக்தி பந்து ஜன பிரியன் தருமசிந்தனையுள்ளவன், சரீர காந்தியுள்ளவன்.

திருவோணம் : கல்வியுடையவன் முன்கோபி ஸ்திரிநேசன் பரிமள பிரியன் அழகுள்ளவன்.

அவிட்டம் : அடக்க முடையவன் காரியசித்தி திரவிய சம்பாத்தியம் தருமசிந்தனை மாதா பிதா பிரியன் ஸ்திரிவசியன்.

சதயம் : கல்வி எல்லோருக்கும் இனிமையாக இருப்பவன் இராஜ சிநேகன் சத்துரு இல்லை இனியதாக பேசுபவன் நீதியுள்ளவன்.

பூரட்டாதி : வித்தை விநோதம் நியாயம் விசாரணை பால் [illegible]

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உத்திரட்டாதி : வித்தையுடையவன் நல்லபுத்தி விசுவாசம் தேசசஞ்சாரி திரவியம் சம்பாத்திய முடையவன் நல்லோர் உறவு சகவாசம் முள்ளவன்.

ரேவதி : செல்வம் நற்குணமுடையவன் வசனபிரியன் தருமசிந்தனை விசுவாசம் ஸ்திரிபோகம் கிலேசமுள்ளவன் நல்லோர் உறவு சகவாசமுடையவன்.

குறிப்பு:- 27 நக்ஷத்திரங்களில் பிறந்தவர்களின் குணாதிசயங்களை இதுவரையில் குறிக்கப்பட்டிருக்கிறது

## ஏழரை நாட்டு சனி என்பது

சந்திரல் இலக்கினத்துக்கு 8ம் இடத்துக்கு சனிவருங் காலத்தில் அஷ்டமத்து சனி என்பது இதில் அதிக கஷ்டத்தை சனி கொடுப்பார் சந்திர இலக்கினத்துக்கு 12ம் இடத்துக்கு சனி வருங்காலத்தில் ஏழரை நாட்டு சனி ஆரம்பம் 12-1-2 இந்த மூன்று ஸ்தானங்களில் இந்த சனி ($2\frac{1}{2} + 2\frac{1}{2} + 2\frac{1}{2} = 7\frac{1}{2}$) ஆக ஏழரை வருஷம் இருந்து இடைவிடாமல் கஷ்டபலனை கொடுப்பதினால் ஏழரை நாட்டு சனி என்பது இதில் முதல் 5 வருஷம் அதிக கொடூரமான பலனையும் தீங்கையும் கொடுப்பார் இந்த சனி மூன்றாம் ராசியில் பிரவேசிக்கும்போது கஷ்டங்கள் நீங்கி சுகம் ஏற்படும். முப்பது வருஷத்துக்கு ஒரு தடவையாக ஏழரை நாட்டு சனிவந்து கொண்டு இருப்பதில் முதல் தடவையில் பிதாவுக்கு சுக பலனும் ஜாதகருக்கு கஷ்டபலனும் கொடுப்பார். இரண்டாவது தடவையில் கொஞ்சம் கஷ்டபலனும் கொஞ்சம் சுகபலனும் நடக்கும். மூன்றாவது தடவையில் அல்லது தடவைக்குள் மரணம் ஏற்படும் இரண்டாவது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தடவையில் கொஞ்சம் சுகம் என்று. சொன்ன போதிலும் மேஷம் கடகம் சிம்மம் விருச்சிகம் கும்பம் மீனம் இந்த ஆறு இராசிகளில் ஏதாவது ஒன்று ஜன்ம இலக்கினமாக இருந்தால் ஜாதகருக்கு ஏழரை நாட்டு சனி அதிககஷ்டபலனை கொடுப்பார்.

## அரிஷ்ட தோஷங்கள்

இலக்கினத்தில் சனியும் 4ல் செவ்வாயும் 7ல் சூரியனிருந்தாலும்,

இலக்கினத்தில் இராகு கேதுக்களும் 4ல் செவ்வாயும் 7ல் சூரியனிருந்தாலும்,

1-7-8-12ம் இடங்களில் அமரபக்ஷம் சந்திரன் பாவிகளுடன் சேர்ந்து இருந்தாலும்,

7ல், செவ்வாயும், 8ல் சூரியன் இருந்தாலும்,

இலக்கினத்தில் சூரியன் சனி கூடியிருக்க செவ்வாய் பார்த்தாலும்,

இலக்கினத்திற்கு 7ல் செவ்வாய் சுக்கிரன் சனி இருந்தாலும்,

7-8ல் செவ்வாய், சனி, இருந்தாலும்,

4ல்-செவ்வாயும் 8ல் இராகும், 12ல் சனியும் இருந்தாலும்,

8,9,12ல் சூரியன் க்ஷீண சந்திரன் செவ்வாய் சனி இருந்தாலும்,

4,8ம் இடத்தில் பாபகிரஹங்கள் இருந்தாலும்,

5-8-9-12ல் சூரியன் அமர பக்ஷம் சந்திரன் கூடினாலும் அல்லது தனித் தனியாக இருந்தாலும்,

6-7-8-12ல் இடங்களில்-க்ஷீணசந்திரன் பாவர்களுடன் கூடினாலும், சிசுவுக்கு அரிஷ்டம் உண்டாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இலக்கினத்துக்கு 5-10ல் சனி இருந்தாலும், சிசுவுக்கு அரிஷ்டம்.

6ம் இடத்தில் சந்திரனும் அதற்கு ஏழாம் இடத்தில்-செவ்வாய்-சனி இருந்தாலும், இலக்கினத்தில் சந்திரனும் அதற்கு 4,7,8 இடங்களில் பாவிகளும் இருந்தாலும் இலக்கினத்துக்கு இரண்டு பக்கங்களிலும் பாவிகளிருந்தாலும் தாய்க்கும்- சிசுவுக்கும் அரிஷ்டம்.

இலக்கினத்திக்கு 6ம் இடத்தில் சூரியன் இருக்க அதற்கு 7ம் இடத்தில் செவ்வாய்-சனி இருக்க பிதாவுக்கும் சிசுவுக்கும் அரிஷ்டம்.

இலக்கினத்துக்கு 5 அல்லது 10ம் இடத்தில் சந்திரன் இருந்தாலும் சந்திரன் நின்ற இராசிக்கும் 7ம் இடத்தில் செவ்வாய்-சனி இருந்தாலும்-பார்த்தாலும் தாய்க்கு அரிஷ்டம்.

இலக்கினத்துக்கு 5 அல்லது 10ம் இடத்தில் சூரியன் இருந்தாலும் சூரியன் நின்ற இராசிக்கு 7ம் இடத்தில் செவ்வாய் அல்லது சனி நின்றாலும் பார்த்தாலும் இலக்கினத்துக்கு 9ம் இடத்தில் இராகு கேதுக்கள் இருந்தாலும் இலக்கினத்துக்கு 9, 11ம் இடங்களில் சனி-செவ்வாய் இருந்தாலும் பிதாவுக்கு அரிஷ்டம்.

இலக்கினத்துக்கு 8ம் இடத்தில் செவ்வாய் இருக்க சகோதரிஷ்டம்.

## அரிஷ்ட தோஷம்

இலக்கினத்துக்கு 5-அல்லது 10ம் இடத்தில் செவ் வாய் இருந்தாலும் அம்மானுக்கு அரிஷ்டம்:

சந்திரன் இலக்கினத்திலும் அசுபகிரகங்கள் கூடியிருந்தாலும் சிசுவுக்கு அரிஷ்டம்:

குறிப்பு : மேற்கண்ட (சொல்லப்பட்ட)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அரிஷ்ட தோஷங்கள் -சுப கிரஹங்கள் கூடி இருக்க - பார்க்க நிவர்த்தி ஆகும்.

## அரிஷ்ட பாகம் விபரம்

| | |
|---|---|
| 1 வயது முதல் | 12 வயது வரையில் பாலாரிஷ்டம் |
| 12 வயது முதல் | 20 வயது வரையில் அயௌனாரிஷ்டம் |
| 21 வயது முதல் | 32 வயது வரையில் கௌமாரம் அரிஷ்டம் |
| 33 வயது முதல் | 70 வயது வரையில் விருத்தாரிஷ்டம் |
| 71 வயது முதல் | 120 வயது வரையில் பூர்ண ஆயுசு |
| ஒன்று முதல் | 32 வயது வரையில் அற்பாயுசு |
| 33 வயது முதல் | 60 வயது வரையில் மத்தியமவயது |
| 61 வயது முதல் | 120 வயது வரையில் பூர்ணாயுசு |

## பாலாரிஷ்டம் விபரம்

குழந்தை பிறந்தவுடன் 1 முதல் 12 வயதுவரையில் ஜாதகம் எழுதிவைப்பது அவ்வளவு உசிதம் அல்ல. பெற்றோர்கள் பூர்வஜன்மத்தில் செய்தபாபம் புண்ணியங்கள் அனுசரித்து பலனைகுழந்தை அடைகிறது ஆதலால் இலக்கினத்தை மட்டும் கண்டறிந்து பிறந்த நக்ஷத்திரத்தில் ஏதாவது தோஷங்கள் இருக்கிறதா என்று கவனித்து அதற்கு மட்டும் பரிகாரங்கள் செய்து கொண்டால்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

போதுமானது 12 வயதுக்குமேல் சாதகம் எழுதி வைத்துக்கொண்டு ஜாதகரின் பலனை பார்க்கவும் :

### பாலாரிஷ்டம் என்பது

குழந்தை பிறந்த ஒன்று வயது முதல் 5 வயது அல்லது 12 வயது வரையில் நீடிக்கும் கபகிரஹங்கள் இலக்கினத்தை பார்த்தாலும்- நின்றாலும்- பூர்ணாயுள் இருந்தாலும் பங்கம் நிவர்த்தி ஆய்விடும். இந்த காலங்களில் நவகிரஹங்களுக்கு ஜபம்- ஹோமம் விளக்கு போட வேண்டியது அவசியம்.

## நந்தி வாக்கியத்தில் சொல்லியபடி

*சந்திரன்*

மேஷம் இலக்கினம் முறையாய் நாழிகை 1 வினாடி 8க்கு மேல் 17 வரையில் அசுபதி முதல் பாதத்திலிருக்க 8 வருடத்தில் அரிஷ்டம்,

*சந்திரன்*

ரிஷபம் இலக்கினம் முறையாய் நாழிகை 1 வினாடி 29 , மேல் 36 வரையில் மிருகசிரம் முதல் பாதத்திலிருக்க 9 வருஷத்தில் அரிஷ்டம்:

*சந்திரன்*

மிதுனம் இலக்கினம் முறையாய் நாழிகை 1-56 வினாடிக்கு மேல் 10. அதாவது நாழிகை-2 வினாடி 6 வரையில்

திருவாதிரை இரண்டாம் பாதத்திலிருக்க 11 வருஷத்தில் அரிஷ்டம்-

*சந்திரன்*

கடகம் இலக்கினம் முறையமாய் நாழிகை 2

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வினாடி 14க்கு மேல்24 வரையில் பூசம் மூன்றாம் பாதத்திலிருக்க 12 வருஷத்தில் அரிஷ்டம்.

சந்திரன்

சிம்மம் இலக்கினம் முறையாய் 0-42 வினாடிக்கு மேல் 0-59½ வினாடி வரையில்-மகம் இரண்டாம் பாதத்திலிருக்க 5 வருடத்தில் அரிஷ்டம்.

சந்திரன்-துலாம் இலக்கினம் முறையாய் 0-30 வினாடிக்குமேல் 0-40 வினாடி வரையில்-சித்திரை மூன்றாம் பாதத்திலிருக்க 4 வருடத்தில் அரிஷ்டம்.

சந்திரன்- விருச்சிகம் இலக்கின முறையாய் 0-10 வினாடிக்குமேல் 0-20 வினாடிவரையில் விசாகம் 4ம் பாதத்திலிருக்க 2 வருஷத்தில் அரிஷ்டம்.

சந்திரன்-தனுர் இலக்கினம் முறையாய் 0-22 வினாடிக்கு மேல் 0-33 வினாடிவரையில் மூலம் முதல் பாதத்திலிருக்க 3 வருடத்தில் அரிஷ்டம்.

சந்திரன்-மகரம் இலக்கினமுறையமாய் நாழிகை 1-வினாடி 36க்குமேல் 13 வரையில் உத்திராடம் இரண்டாம் பாதத்திலிருக்க 6 வருடத்தில் அரிஷ்டம்.

சந்திரன் கும்பம் இலக்கின முறையமாய் நாழிகை 1-வினாடி 6½ க்குமேல் 0-10 வினாடி வரையில் அவிட்டம் மூன்றாம் பாதத்திலிருக்க 7 வருடத்தில் அரிஷ்டம்.

சந்திரன் - மீனம் இலக்கின முறையமாய் நாழிகை 1 வினாடி 25க்குமேல் 35 வினாடிவரையில் உத்திரட்டாதி இரண்டாம் பாதத்திலிருக்க 10 வருடத்திலும் அரிஷ்டம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஜனன காலத்தில் சனி-அங்காரக அம்சத்தில் இருந்து அங்காரகனால் பார்க்கப்பட்டால் அந்த சிசு ஒரு வருஷம் ஜீவித்து இருக்கும்.

சனி-சுக்கிரம் சத்திலிருந்து சுக்கிரனால் பார்க்கப் பட்டாலும் அல்லது கேதுவினால் பார்க்கப்பட்டாலும்

சனி-புதன் அம்சத்திலிருந்து, புதனால் பார்க்கப் பட்டாலும் அல்லது சூரியனால் பார்க்கப்பட்டாலும் மூன்று வருஷம் வரையில் ஜீவித்திருக்கும்.

சனி, சூரியன் அம்சத்திலிருந்த- சூரியனால் பார்க்கப் பட்டாலும் அல்லது சுக்கிரனால் பார்க்கப்பட்டாலும் நான்கு வருஷம் இருக்கும்.

சனி: சந்திரன் அம்சத்திலிருந்து சந்திரனால் பார்க்கப் பட்டாலும் அல்லது தேகாதிபதியால் பார்க்கப் பட்டாலும் எட்டு வருஷங்களுக்கு மேல் ஜீவித்து இருக்காது.

சனி: குருவங்கிலிருந்து குருவினால் பார்க்கப்பட்டா லும் அல்லது சந்திரனால் பார்க்கப்பட்டாலும் நான்கு வருஷம் வரையில் ஜீவித்திருக்கும்.

நான்காமிடத்தில் இராகிருந்து பாபகிரகங்களால் பார்க்கப்பட்டாலும் பதினாறு வருஷம் வரையில் ஜீவித்து இருக்கும்.

இராகு உச்ச ராசியும் மேஷ இராசியும் தவிர மற்ற ராசிகளிலிருந்து இராகு இருக்கும் இராசியே ஜன்மஇலக்கினமானால் குழவி இறந்து விடும்.

காலை மத்தியான்யம்: சாயந்திரம் அர்த்தராத்திரி இந்த நான்கு சந்தி வேளைகளில் பிறந்த சாதகனுடைய இலக்கினத்தில் சந்திரன் பாபர்களுடன் கூடியிருந்தாலும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பாபரால் பார்க்கப்பட்டிருந்தாலும் சுப திருஷ்டியில்லாமல் இருந்தால் சீக்கிரத்திலேயே சிசுவுக்கு மரணம் உண்டாகும்.

பரவசந்தி: திதிசந்தி இராசிசந்தி இந்த மூன்றும் ஜன்ம காலத்தில் ஒரே சமயத்தில் வருமானால் ஜாதகன் மதிப்பான் அந்த தினம் வெள்ளிக்கிழமை யானால் மரணம் இல்லை.

ஜனன காலத்தில் சூரியன்: சந்திரன்: சனி 5:7:12 இந்த இடங்களிலிருந்தால் தாய்க்கும் தகப்பனாருக்கும் சிசுவுக்கும் கஷ்டம்.

ஜன்ம இலக்கினத்துக்கு எட்டாவது வீட்டில் சூரியாதி எந்த கிரகங்களிலிருந்தாலும் குழந்தைக் கரிஷ்டம் செவ்வாய் இருந்தால் தாயாருடைய சகோதரிஷ்டம்.

ஜன்ம லக்கினத்தில் அங்காரகன் 7ம் இடத்தில் சூரியன் சனி சேர்ந்திருந்தால் சிசு பிறந்தவுடன் இறந்துவிடும்.

சுபகிரகங்கள் கேந்திரத்திலிருந்து பார்க்கப்பட்டால் நிவர்த்தியாகும்.

ஜனன காலத்தில் 12ம் இடத்தில் சந்திரன் இருந்து இலக்கினத்தில் சனி இருந்தாலும் இலக்கினம் அஷ்டமம் விரயம் ஸ்தானங்களில் செவ்வாய் இருந்தாலும் குழந்தை காலமாகிவிடும் குரு பார்வையிருந்தால் நிவர்த்தியாகும்.

இலக்கினம் 12:9:8 இவ்விடங்களில் சூரியன் செவ்வாய் கூடினாலும் அல்லது தனித்து இருந்தாலும் அந்த சமயம் குழந்தை பிறந்தால் பிதாவுக்கு அரிஷ்டம்.

கேது நான்கிலிருந்து பாவ கிரகங்களால் பார்க்கப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பட்டாலும் தகப்பனுக்கு அரிஷ்டம்.

சூரியன் செவ்வாய் சனி இவர்கள் எட்டாவது ஸ்தானத்தை அடைந்து சுப கிரகபார்வை இல்லாமல் போனால் பிதாவுக்கு அரிஷ்டம்.

சூரியன் சந்திரன் சனி இவர்கள் 5:7:12ம் இடங்களில் சேர்ந்தாவது அல்லது தனித்தாவது இருக்கும் காலத்தில் ஆண் குழந்தை பிறந்தால் பிதாவுக்கும் பெண் குழந்தை பிறந்தால் மாதாவுக்கும் அரிஷ்டம்

ஐந்தாம் இடத்தில் சூரியன் இருந்தால் பிதாவுக்கும் சந்திரன் இருந்தால் மாதாவுக்கும், செவ்வாய் இருந்தால் சகோதரர்களுக்கும் புதன் இருந்தால் மாமனுக்கும், குரு விருந்தால் பாட்டிக்கும், சுக்கிரன் இருந்தால் தாத்தாவுக்கும், சனி இருந்தால் தனக்கும் அரிஷ்டம்.

குறிப்பு- இதுவரையில் நவகிரஹங்கள் இராசிமண்டலத் தின் ஸ்தானங்களில் நின்று அரிஷ்டதோஷ பலனை கொடுப்பதை சொன்னோம் இனி நக்ஷத்திர கெண்டங்களையும் தோஷங்களையும் காண்க.

## நக்ஷத்திர கெண்டங்கள்

குழந்தை பிறந்தது.

அஸ்வினி முதல் பாதமானால் பிதாவுக்கு 3 மாதம் வரையில் கெண்டம்.

பரணி-3ம் பாதமானால் சிசுவுக்கு கெண்டம்

ரோகினி 1-ம் பாதம்-ஆண் பிறந்தால் மாமன்மார்களுக்கும் கெண்டம்.

ரோகினி 2-ம் பாதம் ஆண்பிறந்தால் தாயாருக்கு தோஷம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பூசம்-கடக இலக்கினத்தில் பகலில் ஆண் பிறந்தால் தகப்பனுக்கு கெண்டம்.

பூசம்-கடக இலக்கினத்தில் இரவில் பெண் பிறந்தால் தாயாருக்கு தோஷம்.

பூசம் 1-ம் பாதத்தில் சிசு பிறந்தால் மாமன்மார்களுக்கும்

பூசம் 2-ம் பாதத்தில் மத்தியானத்தில் குழந்தை பிறந்தால் 3 மாதம் மாதா பிதாவுக்கு கெண்டம்.

ஆயில்யம்-2ம் பாதத்தில் குழந்தைக்கும் 3ம் பாதத்தில் தாயாருக்கும் 4ம் பாதத்தில் தகப்பனுக்கும் 3 மாதம் வரையில் தோஷம்.

மகம்-1ம் பாதத்தில் குழந்தை பிறந்தால் 5 மாதம் வரையில் தகப்பனுக்கு தோஷம் மற்ற பாதமானால் சுபம்.

உத்திரம்-முதல்-நான்காம் பாதமானால் தாய் தகப்பன் உடன் பிறந்தவர்களுக்கு 2 மாதம் வரையில் தோஷம் இதற்கு நவகிரஹஜபம் பூஜை செய்ய விலகும்.

## நக்ஷத்திர கெண்டம்

சித்திரை 1-2-3 பாதமானால் தாய் தகப்பன் உடன் பிறந்தவர்களுக்கு 6 மாதம் வரையில் தோஷம்

கேட்டை 10 பங்கு செய்ய } முதல் பாகம்-தாய் பாட்டிக்கும்
2ம் பாகம் - தாய் தகப்பனுக்கும்
3ம் பாகம் - தாய் சகோதரர்களுக்கும்
4ம் பாகம் - தனக்குமுன் பிறந்தவர்களுக்கும்
5ம் 6ம் பாகம் - குழந்தைக்கும்
7ம் பாகம் - தாய் வர்க்கத்தாருக்கும்
8ம் பாகம்-குழந்தைக்கும்
9ம் பாகம் - பிதாவுக்கும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மூலம் ஆதியந்தபரமதாழிகையை 12-பாகமாக்கிய-விபரம் .

முதல் பாகம் தகப்பனுக்கும் 2ம் பாகம் தாயாருக்கும் மூன்றாம்பாகம் தமயனுக்கும் நான்காம் பாகம் சகோதரர்களுக்கும் ஐந்தாம் பாகம் பெண் கொடுக்கும் மாமனாருக்கும் ஆறாம் பாகம்சிறிய பெரிய தகப்பனுக்கும் ஏழாம் பாகம் தாயாருடன் பிறந்தவர்களுக்கும் எட்டாம் பாகம் பொருள் விரயமும் 9ம் பாகம் உண்டாகும் கஷ்டமும் பத்தாம் பாகம் தோஷம் வறுமை.

பதினொன்றாம் பாகம் வேலைக்காரர்களுக்கு தோஷம் பனிரெண்டாம் பாகம் குழந்தைக்கு 3 மாதம் வரையில் தோஷம்

மூலம் முதல் பாதமானால் பிதாவுக்கும் இரண்டாம் பாதமானால் தாயாருக்கும் கெண்டம் மூன்றாம் பாதமானால் பொருள் நஷ்டம் நான்காம் பாதமானால் தோஷமில்லை.

பூராடம் தனுர் இலக்கினத்தில் பகலில் ஆண் குழந்தை பிறந்தால் தகப்பனுக்கு கெண்டம்

பூராடம் தனுர் இலக்கினத்திலும் பூசம் கடக இலக்கினத்திலம் சூரியஉதயம்-சூரிய அஸ்தமனம் - பகலில் ஆண் குழ்ந்தை பிறந்தால் குழந்தைக்கு தோஷம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பூராடம் தனுர் இலக்கினத்திலும் பூசம் கடக இலக்கினத்திலும் மிருந்த அரிஷ்ட தோஷம் குழந்தைக்கும் பிதாவுக்கு ஏற்படும்.

ரேவதி நான்காம் பாதத்தில் குழந்தை பிறந்தால் மூன்று மாதம் வரையில் தகப்பனுக்கு கண்டம்.

## அரிஷ்ட பங்கம் யோகம்

மேற்சொல்லிய அரிஷ்ட யோகங்களில் பிறந்த குழந்தைகளுக்கு இலக்கினாதிபதி பலவானாக இருந்தாலும் சுபகிரஹங்கள் இலக்கினத்தை பார்த்தாலும் சனி பலவானாக இருந்தாலும் குரு கேந்திரங்களில் இருந்து இலக்கினத்தை பார்த்தாலும் குழந்தை ஜீவித்து இருக்கும் சந்திரனிருக்கும் இராசியாதிபதி ஜன்ம இலக்கினத்திலிருந்து சுபர்கள் பார்க்க சந்திரன் உச்ச ஸ்தானத்திலிருந்து சுக்கிரனால் பார்வை பெற்றாலும் சகல அரிஷ்ட தோஷம் விலகும் சந்திரன் உச்சம் மித்துருராசியிலிருந்து பூர்ணபலம் பெற்று சுபர் பார்வை பெற்றால் சகல அரிஷ்ட தோஷம் விலகும்.

குறிப்பு:-

மேலே சொல்லிய சகல அரிஷ்ட தோஷங்களுக்கு குழந்தை பிறந்தவுடன் 1 முதல் 12 வயது வரையில் ஆயுசு ஹோமம் நவக்கிரஹம் ஜபம் தீபம் அர்ச்சனை செய்ய விலகும் சுபம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# அஷ்டவர்க்கம்

குறிப்பு: அஷ்டவர்க்கம் எவரும் இம்மாதிரி சக்கரம் வரைந்து (கோடு போட்டு) சோதனை செய்து காண்பித்து பலன் எழுதினது இல்லை எனக்கு மதுரையிலிருந்து இவ்விடம் வந்திருந்த ஒரு சோதிடர் அஷ்ட வர்க்கம் போடும் வழியை காண்பித்து கொடுத்து பலனும் சொன்னார். அவர் சொன்னபடியே நானும் சக்கரம் போட்டு அஷ்டவர்க்க பரனும் எழுதி பலன்களை அநேக புஸ்தகங்களை படித்தும் அவர் சொல்லியும் கேட்டு இதில் எழுதி இருக்கிறேன் எல்லோரும் எளிதில் அறிந்து கொள்ளலாம் ஏதாவது குற்றங்குறைகள் இருந்தால் திருத்தி கொள்ளவும் எனக்கு தெரிவிக்கவும் மிகவும் தாழ்மையுடன் கேட்டு கொள்கிறேன்.

கோசாரரீதியாக சுபா சுபபலன்களை நன்கு அறிய காணுவது அஷ்டவர்க்க சக்கரம் கிழக்கு மேற்காக 9 கோடு களையும் தெற்கு வடக்கு 13 கோடுகளையும் போட்டால் அவ்வெட்டு வரிசைகளிலும் 96 அறைகளாகும் இப்படி கண்டபடி இராசி சக்கரம் வரைந்து ஜனனகால கிரகஸ்திதியை அறிந்து கிரகமிருக்கும் இராசிக்கு 8 விதமாய் அஷ்டவர்க்கம் சொல்லப்படும் மேலும் அந்தந்த கிரஹங்களிருக்கிற இராசியையே இலக்கினமாக வைத்துக்கொண்டு அது முதலாக எண்ண 8 பிந்துக் களாகும் அதற்குரிய பாவத்தை சொல்ல வேண்டியது அந்தந்த கிரஹங்களிருக்கிற இராசி அம்சங்களுக்கு சமமான பாகங்களில் (கோசார

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ரீதியாய் இருக்கும் கிரஹங்கள்) அவ்வப்பாவங்களுக் குரிய சுபா் சுபபலன் களை தரும் என்பது அஷ்ட வர்க்கங்களிக்க பெற்றுள்ள காரகரது இராசியில் பூர்ண பிந்துக்கள் நிறைந்த கிரஹங்களின் (வீட்டில்) சுபரேனும், அசுபரேனும் அவரின் இவ்விராசி அதிபனிருக்கும் இராசி எப்பாவமோ, அப்பாவத்திற் குரிய பலனை புஷ்டி செய்வார் இதற்கு மாறின் விபரீத பலன் ஏற்படும் ஒரு பாவத்தில் பல கிரஹங்கள் இருந்தால் அவர்கள் இராசியில் கோசார ரீதியாயிருக்கும் போது காரகன் முதல் துவாதச பாவங்கள் வரையில் பாவ புஷ்டியை தருவார்கள்.

மேஷாதியான ரேவதிவரை ஒவ்வொரு இராசிகளில் 8 பிந்துக்கள் இருக்கின் அவ்விராசிகளில், பாவகதிகள் தத்தமக்குறிய, புஷ்டியையும் தேஜசயும் பலத்தையும் தருவார்கள் அவ்விராசிகளிலிருக்க வேண்டிய பிந்துக்கள், 8ல் ஒன்றுமே இல்லாதிருந்தால் மரணம் உண்டாகும்.

2 பிந்து இருந்தால் விரயம் 3க்கு பயம், 4க்கு பயமில்லை 5க்கு தனம், 6க்கு ஸ்திரிசுகம், 7க்கு இலட்சுமி கடாக்ஷம்8க்கு இராச்சிய சித்தி இவ்விதமாய் உண்டாக கூடிய பலன்களை கிரமமாய் அறிந்து கொள்ளலாம் இதன்படி சூரியன் முதல்சனிவரையில் அஷ்டவர்க பரல் குறிக்கப்பட்டிருக்கிறது. பிறகு திரிகோண சோதனை ஏகாதிபத்திய சோதனை இராசி குணாகரம் கிரஹகுணகரம் முதலியவைகளை கண்டறிந்து பலன்களையும் ஆயுர்பாவத்தையும் அறியவும்.


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஓர் பிரஜை பிறந்த நக்ஷத்திற்குரிய அஷ்டவர்க்கம் சக்கரம் போட்டு கீழ்க்கண்ட உதாரணம் பார்க்க.

பிரஜோர்பத்தி வருஷம் மாதம் ஆடி 32உ ஞாயிற்றுக் கிழமை உத்திரம் நக்ஷத்திரம் கன்னியா ராசி துலாம் லக்கினம் இதற்கு ராசி சக்கரம்.

| | | | |
|---|---|---|---|
| 6 இராகு | 7 | 8 | 9 |
| 5 | இராசி | | 10 சூரியன் குரு சுக்கிரன் |
| 4 | | | 11 புதன் |
| 3 சனி | 2 | 1ல | சந்திரன் செவ்வாய் 12 கேது |

மேலே குறிக்கபெற்ற இராசி சக்கரத்தின்படி, சூரியாதி முதல் சனி வரையில் அஷ்டவர்க்க பரல் போடும் வழியை காண்க:-

சூரியன் அஷ்டவர்க்க பரல் 48 (பிந்துக்கள்) சூரியன் நின்ற கடகம் இராசியையே இலக்கினமாக வைத்து கொண்டு அஷ்டவர்க்க சக்கரத்தில் பிந்துக்களை அடைக்கவும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# சூரிய அஷ்ட வர்க்கம் விபரம்

உதாரணம் பரல்: 48

| கிரகம் | மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சி | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் | ஆகபரல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | சூரி குரு | புத | சந் செ | ல | | சனி | + | \| | + | 3 |
| சூரியன் | \| | + | | சுக் | \| | கே | + | | | | | | |
| சந்திரன் | | | + | + | | | | \| | | | \| | | 4 |
| செவ் | \| | \| | + | + | | \| | + | | + | | | + | 8 |
| புதன் | \| | \| | + | + | | | \| | | + | + | | | 7 |
| குரு | | \| | | | | | | \| | + | | | + | 4 |
| சுக்கிரன் | | | \| | | | | | | \| | \| | | | 3 |
| சனி | | | \| | \| | \| | \| | \| | | \| | \| | | \| | 8 |
| லக்கினம் | | | | \| | \| | \| | | | \| | \| | | \| | 6 |
| ஆஹாரம் | 3 | 4 | 5 | 6 | 3 | 3 | 4 | 2 | 6 | 5 | 2 | 5 | 48 |
| திரிகோணம் | 3 | 3 | 2 | 2 | 3 | 3 | 2 | 2 | 3 | 3 | 2 | 2 | 30 |
| ஏகாதிபத்தியம் | 2 | 2 | 2 | 2 | 3 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 25 |
| இராசிகுணாகரம் | | | | 8 | 30 | 10 | | | 18 | | | | 66 |
| கிரககுணாகரம் | | | | 10<br>14<br>20 | 15 | 10<br>16 | | | 10 | | | | 95 |
| சுத்தபிண்டம் | | | | 52 | 45 | 36 | | | 28 | | | | 16. |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# அஷ்டவர்க்க பரல்

சூரியன் அஷ்டவர்க்க பரல்-48.

இராசி சக்கரத்தில் கண்டபடி சூரியன் நின்ற இராசி கடகம் முதல் பரல் போடவும்.

| | | |
|---|---|---|
| (1) | சூரியன் | 1-2-4-7-8-9-10-11 -8 |
| (2) | சந்திரன் | 3-6-10-11.............. -4 |
| (3) | செவ்வாய் | 1-2-4-7-8-9-10-11 -8 |
| (4) | புதன் | 3-5-6-9-10-11-12-7 |
| (5) | குரு | 5-6-9-11............... -4 |
| (6) | சுக்கிரன் | 6-7-12.................. -3 |
| (7) | சனி | 1-2-4-7-8-9-10-11 -8 |
| (8) | இலக்கினம் | 3-4-6-10-11-12--- -6 |

ஆக பரல் 48

மேல் கண்டபடி சூரியன்-கடகம்-சிம்மம்-துலாம் மகரம்-கும்பம்-மீனம்-மேஷம்-ரிஷபம்-8-பரல்.

சந்தி-நின்ற-(கன்னி முதல்) 3ம்இடம்-விருச்சிகம்-கும்பம்-மிதுனம்-கடகம்-4 பரல்.

• இதேபோல் மற்ற பரல் போடவும்.

சந்திரன் அஷ்டவர்க்கம். பரல் 49

| | | |
|---|---|---|
| 1. | சூரியன் | 3-6-7-8-10-11.... - 6 பரல் |
| 2. | சந்திரன் | 1-3-6-7-10-11..... - 6 |
| 3. | செவ்வாய் | 2-3-5-6-9-10-11 - 7 |
| 4. | புதன் | 1-3-4-5-7-8-10-11-8 |
| 5. | குரு | 1-4-7-8-10-11-12.. -7 |
| 6. | சுக்கிரன் | 3-4-5-7-9-10-11... -7 |
| 7. | சனி | 3-5-6-11-------------4 |
| 8. | இலக்கனம் | 3-4-10-11------------4 |

ஆக பரல் 49

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அஷ்டவர்க்கம் பரல்

குறிப்பு-சந்திரன் நின்ற அஷ்ட வர்க்கத்தில் கன்னி முதல் பரல் போடவும்.

செவ்வாய் அஷ்டவர்க்கம் பரல் - 39

| | | | |
|---|---|---|---|
| 1. | சூரியன் | 3-5-6-10-11 | 5 பரல் |
| 2. | சந்திரன் | 3-6-11 | 3 |
| 3. | செவ்வாய் | 1-2-4-7-8-10-11 | 7 |
| 4. | புதன் | 3-5-6-11 | 4 |
| 5. | குரு | 6-10-11-12 | 4 |
| 6. | சுக்கிரன் | 6-8-11-12 | 4 |
| 7. | சனி | 1-4-7-8-9-10-11 | 7 |
| 8. | இலக்கனம் | 1-3-6-10-11 | 5 |
| | | ஆக பரல் | 39 |

செவ்வாய் நின்ற இடம் முதல் பரல் போடவும்

புதன் அஷ்டவர்க்கம் பரல் -54

| | | | |
|---|---|---|---|
| 1. | சூரியன்- | 5-6-9-11-12 | 5 |
| 2. | சந்திரன் | 2-4-6-8-10-11 | 6 |
| 3. | செவ்வாய் | 1-2-4-7-8-9-10-11 | 8 |
| 4. | புதன் | 1-3-5-6-9-10-11-12 | 8 |
| 5. | குரு | 6-8-11-12 | 4 |
| 6. | சுக்கிரன் | 1-2-3-4-5-8-9-11 | 8 |
| 7. | சனி | 1-2-6-7-8-9-10-11 | 8 |
| 8. | இலக்கனம் | 1-2-4-6-8-10-11 | 7 |
| | | ஆக பரல் | 54 |

புதன் நின்ற இடம் முதல் பரல் போடவும்.

குரு அஷ்டவர்க்கம் பரல் 56

| | | | |
|---|---|---|---|
| 1. | சூரியன் | 1-2-3-4-7-8-9-10-11 | 9 |
| 2. | சந்திரன் | 2-5-7-9-11 | 5 |
| 3. | செவ்வாய் | 1-2-4-7-8-10-11 | 7 |
| 4. | புதன் | 1-2-4-5-6-9-10-11 | 8 |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

| | | | |
|---|---|---|---|
| 5. | குரு | 1-2-3-4-7-8-10-11 | 8 |
| 6. | சுக்கிரன் | 2-5-6-9-10-11 | 6 |
| 7. | சனி | 3-5-6-12 | 4 |
| 8. | இலக்கினம் | 1-2-3-4-6-7-9-10-11 | 9 |
| | | ஆக பரல் | 56 |

குரு நின்ற இடம் முதல் பரல் போடவும்
சுக்கிரன் அஷ்டவர்க்க பரல் - 52

| | | | |
|---|---|---|---|
| 1. | சூரியன் - | 8-11-12- | 3 |
| 2. | சந்திரன் | 1-2-3-4-5-8-9-11-12- | 9 |
| 3. | செவ்வாய் | 3-5-6-9-11-12- | 6 |
| 4. | புதன் | 3-5-6-9-11- | 5 |
| 5. | குரு | 5-8-9-10-11- | 5 |
| 6. | சுக்கிரன் | 1-2-3-4-5-8-9-10-11- | 9 |
| 7. | சனி | 3-4-5-8-9-10-11- | 7 |
| 8. | இலக்கினம் | 1-2-3-4-5-8-9-11- | 8 |
| | | ஆக பரல் | 52 |

சுக்கிரன் நின்ற இடம் முதல் பரல் போடவும்.
சனி அஷ்டவர்க்கம் பரல் 39

| | | |
|---|---|---|
| சூரியன் | 1-2-4-7-8-10-11- | 7 |
| சந்திரன் | 3-6-11- | 3 |
| செவ்வாய் | 3-5-6-10-11-12- | 6 |
| புதன் | 6-8-9-10-11-12- | 6 |
| குரு | 5-6-11-12- | 4 |
| சுக்கிரன் | 6-11-12- | 3 |
| சனி | 3-5-6-11- | 4 |
| இலக்கினம் | 3-4-6-10-11 | 6 |
| | ஆக பரல் | 39 |

சனி நின்ற இடம் முதல் பரல் போடவும்.

மேலே சொல்லப் பட்ட சூரியாதி முதல் சனி வரையில் ஒவ்வொரு கிரஹத்துக்கும் தனித்தனியாக

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அஷ்டவர்க்க சக்கரம் போட்டு ஜனன இராசியில் குறிக்கப்பட்ட நவக்கிரஹங்கள் நின்ற இராசி முதல் அவரவர்களுக்குறிய பரலை கண்டு அஷ்ட வர்க்க சக்கரத்தில் போடவும் பிறகு திரிகோண சோதனை செய்யவும்.

திரிகோண சோதனை என்பது 1-5-9-ம் இடம் அவையாவன.

(1) மேஷம் இராசி சிம்மம் தனுசு (2) ரிஷபம் கன்னி மகரம் (3) மிதுனம்-துலாம் கும்பம் (கடகம்) விருச்சிகம் மீனம் இம்மூன்று இராசியிலும் பரல் சரியாக இருந்தால் மூன்றையும் எடுத்து போடவும்.

ஒரு இராசியில் குறைந்து இருந்தால் அப்படியே மற்ற இராசிகளின் பரலையும் குறைத்து போடவும் ஒரு இராசியில் பரலில்லாதிருந்தால் சோதனையில்லை.

## ஏகாதிபத்திய சோதனை

திரிகோண சோதனையான பின்பு மேஷம் விருச்சிகம் துலாம் ரிஷபம் மிதுனம் கன்னி தனசு மீனம் மகரம் கும்பம் இராசிகளில் கிரஹமிருந்த ராசி பரல் குறைந்தும் கிரஹமில்லாத ராசி பரல் அதிகமாகவும் இருந்தால் குறைந்தபடி சரி செய்யவும் சரியாக இருந்தாலும் கிரஹமில்லாத ராசி பரல் குறைந்து இருந்தாலும் கிரஹமில்லாத ராசி பரலை எடுத்து போடவும். இரண்டு ராசிகளிலும் கிரஹ மில்லாமலிருக்க பரல் ஏற்ற

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குறைச்சலாக இருந்தால் குறைந்தபடி சரிசெய்யவும். சரியாக இருந்தால் இரண்டு ராசி பரலையும் எடுத்து போடவும். இரண்டு ராசியிலும் கிரஹமிருந்து பரல். ஏற்ற குறைச்சலாக இருந்தாலும் சரியாக இருந் தாலும் ஒரு ராசியில் பரல் இல்லாமலிருந்தாலும் இரண்டு ராசியிலும் கிரஹம் இல்லாமலிருந்தாலும். ஒரு ராசி

யில் பரல் இல்லாமலிருந்தாலும் சோதனையில்லை கிரஹமிருந்த ராசியில் பரல் இல்லாதிருக்க மற்றொன் றில் பரல் இருந்தால் அதை எடுத்து போடவும்.

## இராசி குணாகரம்

ஏகாதிபத்திய சோதனையான பின்பு நின்றபரலை ரிஷப சிம்மத்திற்கு 10த்தாலும் மிதுன விருச்சிகத்துக்கு 8 ஆலும் மேஷ துலாமுக்கு 7 ஆலும் கன்னி மகரத்துக்கு 4 ஆலும் தனுசுக்கு 9 ஆலும் கும்பத்திற்கு பதினொன் றாலும் மீனத்திற்கு 12 ஆலும் பெருக்கி கண்ட மொத்தும் ராசி குணாகரம் குரு நின்ற ராசி கிரஹ குணாகரம் ராசி பரலை பத்தாலும் செவ்வாய் நின்ற ராசிபரலை எட்டிலும் சுக்கிரன் நின்ற ராசி பரலை ஏழிலும் மற்ற கிரஹங்கள் நின்ற ராசிபரலை ஐந்திலும் பெருக்கி கண்டதொகை கிரஹ குணாகரம்.

இராசி குணாகரம் கிரக குணாகரம் தொகைகளை ஒன்றாக கூட்டிய தொகை குணாசமுகமாம்.

இந்த தொகையை ஏழில் பெருக்கி 27 வகுக்க வருஷமாம் மிச்சத்தை 12ல் பெருக்கி 27ல் வகுக்க மாதம் மிச்சத்தை 30ல் பெருக்கி 27ல் வகுக்க நாளாகும் [illegible] ம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

## தசா வருக்கம்

வருஷங்களில் எந்த சவு 27க்கு அதிகமாயின் 27ல் கழித்தும் அந்த தொகைக்கு குறையின் உள்ளபடியே யும் வைத்து கொள்ளகிரஹங்கள் கூடியிருப்பான் அவரவர்கட்கு பரதி வருஷங்கள் தள்ளிவிடுக நீசம் மறவு அடைந்த கிரஹங்கட்கும் பரதியை நீக்குக சத்துரு க்ஷேத்திரமானால் 3ல் ஓர் பாகத்தையும் தள்ளிவிடுக சூரிய சந்திரர் இவர்களின் பாகத்திலிருக்கிற கிரஹங்களாயின் 3ல் ஓர் பாகத்தையும் நீக்கி விடுக பின்னர் அவற்றை ஒன்றாய் சேர்த்து 324ல் பெருக்கி 365ஆல் வகுக்க வரும் சவே வருஷமாம் இவ்விதம் சகல கிரஹங்களுக்கும் தசையை கண்கொள்ளவேண்டும் இதற்கு தசா அஷ்டவர்க்கம் எனப்பெயர்.

குறிப்பு-ஷெ திரிகோண சோதனை ஏகாதி பத்திய சோதனை இராசி குணாகரம் முதலியதுகள் வருஷாதி நூலில் சொல்லியபடி எழுதப்பட்டிருக்கிறது.

## சர்வாஷ்ட வர்க்க சமுதாயம்

நவகிரஹங்கள் (இராசி சக்கரத்தில்) நின்ற ராசி முதல் எண்ணுக:-

| | | |
|---|---|---|
| சூரியன் | 3-3-3-3-2-3-4-5-3-5-7-2 | __43 |
| சந்திரன் | 2-3-5-2-2-5-2-2-2-3-7-1 | __36 |
| செவ்வாய் | 4-5-3-5-2-3-4-4-4-6-7-2 | __49 |
| புதன் | 3-1-5-2-6-6-1-2-5-5-7-3 | __46 |
| குரு | 2-4-1-2-3-4-2-1-2-4-7-4 | __36 |
| சுக்கிரன் | 2-3-3-3-4-4-2-3-4-3-6-3 | __40 |
| சனி | 3-2-4-4-4-3-3-4-4-4-6-1 | __42 |
| இலக்கினம் | 5-3-5-5-2-6-1-2-2-6-7-1 | __45 |
| | ஆக மொத்தம் | 337 |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சமஸ்த காரியங்களின் பலத்தோடு கூடியதே சர்வாஷ்ட வர்க்கமாம் தெ 337ல் 30 பிந்துக்களுக்கு அதிகமாயிருக்கும் இராசியே பூர்ண சுபத்தைக் கொடுக்கும் பரல் 25க்கு குறைந்த இராசியே மத்தியமாம் பரல் 20க்கு குறைந்திருந்தால் அற்ப பலன் தரும்.

திரிகோண சோதனைக்கு முன்கிரகம் 1க்கு ராசி 1க்கு 3 பரலுக்குள்ளிருந்தால் அற்ப பலன்

## அஷ்ட வர்க்க பலன்

பரல் 4 இருந்தால் சம பலன் பரல் 5க்கு மேலிருந்தால் விசேஷபலன் பரல் 3க்கு குறைவு இருந்தால் சுபத்தை தராது

பரல் 4 இருந்தால் லக்ஷ்மிகரம்

" 5 " விவாஹம் தனம்

" 6 " வித்தியாலாபம்

" 7 " ஐஸ்வர்யம்

" 8 " இராஜ யோகம்

இவ்வாறே பார்த்துக் கொள்ளவும் பரல் குறைந்திருக்கிற ராசியில் சூரியன் வரும்போது கஷ்ட நஷ்டங்கள் உண்டாகும் பரல் அதிகம் பட்ட இராசியில் சூரியன் வரும்போது லாபம் ஏற்படும் எக்காரியமும் பிரயத்தனம் செய்யலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## சர்வாஷ்ட வர்க்கப் பலன்

இலக்கினம் முதல் 4 இராசிபரலை கூட்டி கண்ட தொகை முதற்கண்டம் 5ம் இராசி முதல் 8ம் இராசி வரையில் கூட்டி கண்ட தொகை இரண்டாம் கண்டம் 8ம் இராசி முதல் 12ம் இராசி வரையில் கூட்டி கண்ட தொகை மூன்றாம் கண்டமாம் இந்த மூன்று கண்டத்தில்

முதல் தொகை அதிகமானால் பாலியத்திலும் 2வது அதிகமானால் யவ்வனத்திலும் 3வது அதிகமானால், வயோதிகத்திலும் சௌக்கியம்.

10ம் இடம் 12ம் இடம் பரல் குறைந்தும் 11ம் இடம் பரல் அதிகமாகவும் இருந்தால் இராஜ யோகமாம்.

11ம் இடம் பரல் குறைந்து 12ம் பரல் அதிகமானால் வரவுக்கு மிஞ்சின செலவு

10ம் இடத்தில் பரல் குறைந்தும் 12ம் இடத்தில் அதிக மானால் செய் தொழிலில்லாபமில்லை எடுத்த காரியம் பலிதமில்லை.

1 சூரிய அஷ்டவர்க்க பலன்

ஜன்ம இலக்கினத்திலும் சந்திரன் இலக்கினத்திலும் பரல் குறைந்து இருந்தாலும் சூரியன் நீசனாக இருந்தா லும் பிதாவுக்கு அரிஷ்டம் சூரியன் இருக்கும் இராசியில் 8 பிந்து இருந்தால் இராஜயோகம் 73 பிந்து இருந்தால் ஸ்திரிவிவாகம் சௌக்கியம் 6 பிந்து இருந்தால் மேன்மை 5 பிந்து இருந்தால் தனவான் 4 பிந்து இருந்தால் சுபம் மற்றவை அசுபம்.

இதைப்போலவே மற்ற சந்திரன் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் சனி இலக்கினம் இவைகளில் 8

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பிந்துக்கள் குறையாமலும் ஆட்சி உச்சம் இந்த இடங்களில் 4 பிந்துக்கள் குறையாமலும் இருந்தால் ஜாதகர்களுக்கு பூர்ண பலன் ஏற்படும் இதற்கு குறைந்த பரல் பகை சத்துரு இடம் இந்த இடங்களில் 3 பிந்துக்கள் இருந்தால் மிகவும் கஷ்டமும் தரித்திரமும் ஏற்படும் இலக்கினத்துக்கு 8-ம் இடத்தில் பரல் இல்லாமலிருந்தால் மரணத்துக்கு சமானமான கண்டங்கள் கஷ்டங்கள் நஷ்டங்கள் ஏற்படும் இதுவரையில் அஷ்டவர்க்க பலன்களை சொல்லப்பட்டது மேலும் அறிய தேவையானால் பலதீபிகை என்ற புஸ்தகத்தை பார்க்க நன்றாக அறியலாம்.

அஷ்டவர்க்கம் முற்றும்

# கோசார பலன்

கோட்சாரம் பலன் என்பது-
கோட்க்கள் - கிரகங்கள்

சாரம்-பாதம் அல்லது கால்கள் நவகிரஹங்கள் சூரியன் முதல் சப்த கிரஹங்கள் (இராகு, கேது நீங்கலாக ஆகாயத்தில் சஞ்சரிக்கின்றன அதுபோல் அசுபதி முதல் ரேவதி வரையிலுள்ள 27 நக்ஷத்திரங்களும் ஆகாயத்தில் இருந்து கொண்டு அப்போதைக்கப் போது மாறி வருகின்றன ஜீவராசிகள் பூமியில் வசித்து வருவதாலும் பூமியும் கிரஹங்களை சுற்றி வருவதாலும் சப்த கிரஹங்களும் அப்போதைக்கப் போது 27 நக்ஷத்திரங்களின் கால்களிலுள்ள 12 இராசிகளில் மாறி வருவதால் ஷை 27 நக்ஷத்திரங்களில் ஜனித்தவர்களுக்கு நேருகிற சுகம் துக்கம் பலன்களை அப்போதைக்கப் போது அறிவதுதான் கோட்சார பலன் என்பது ஷை பலன்களை தற்காலம் சகஜமாக சந்திரன் நின்ற ராசியை லக்கனமாக கொண்டு மற்ற கிரஹங்களை சோதித்து பார்க்கிறார்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மேலும் அஷ்டவர்க்கம் மூலமாகவும் ஜன்ம இலக்கினம் பாவ இலக்கினம் தாராநாதன் புத்திநாதன் இவர்களி ருக்கும் ஸ்திதியை கொண்டும் நன்கு அறியலாம் இவற் றுள் முக்கியமாக ஜன்ம இலக்கனத்தை கொண்டு பார்க்காமல் ஒவ்வொருவருடைய பிறந்த ஜன்ம நக்ஷத்திரத்துக்குறிய சந்திரன் இலக்கனத்தை (சந்திரன் நின்ற இராசி) முதலாவது கொண்டு மற்ற கிரகங்கள் இராசிகளில் நிற்கும் ஸ்திதியை அறிந்து தற்காலம் பலன்சொல்லுவதால் சகஜமாக இருக்கிறது. இந்த சந்திர லக்கினத்தை தெரிந்து கொள்வதற்கு ஜன்ம நக்ஷத்திர கால்களின் பிரகாரம் எந்த இராசியில் சந்திரன் நிற்கின்றானோ அந்த இராசியையே முதல் இலக்கினமாக பாவித்து அதுமுதல் துவாதச பாவங் களிலும் கிரஹங்கள் எந்த ஸ்தானங்களில் வந்திருக்கிறார்கள் என்பதை அந்தந்த காலங்களில் ஏற்படுகிற பஞ்சாங்கத்தில் கண்ட கிரஹகங்களை அமைத்தும் பிறகு தற்கால திசாபுத்திகளை கொண்டும் கிரஹங்களின் க்ஷேத்திரம் ஆதிபத்தியம் உச்சம் நீசம் பகை நட்பு சமத்துவம் கேந்திரம்கோணம் காரகத்துவம் முதலியவைகளால் உண்டாகும்.

## குறிப்பு- கோட்சார முக்கிய பலன்கள்

குரு 10ல் வரும்போது பதவியும் நாசம் என்பார்கள் குடும்ப கலக்கம் ஏற்படும் ஜன்ம ராசிக்கு 5ல் சூரியனும் 8ல் சந்திரனும் 7ல் செவ்வாயும் 2ல் புதனும் 3ல் குருவும் 6ல் சுக்கிரனும் 1ல் சனியும் 9ல் இராகுவும் வரும்போது திரவிய நஷ்டம் தேகபீடை மானஹானி புகழ் கெடும் சந்திரலக்கினத்துக்கு 11ம் இடத்தில் எந்த கிரஹமும் சஞ்சாரம் செய்தாலும் நல்ல சுபபலன் ஏற்படும்.

நற்பலன் துர்பலன் இவைகளை அறிந்து கொள்வது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தான் கோட்சார பலன் ஜன்மநக்ஷத்திரம் தெரியாதவர்கள் பலன் அவரவர்கள் நாம நக்ஷத்திரத்தை கொண்டு பலன்களை மேலே சொல்லியபடி அறியலாம்.

நாம நக்ஷத்திரத்துக்குறிய இராசி நக்ஷத்திரம் தசாபுத்தி முன்னால் சொல்லப்பட்டிருக்கிறது அதை பார்த்து இராசி மண்டலம் அமைத்து சந்திர இலக்கி னத்தைகண்டு பிறகு நவக்கிரகங்கள் நிற்கும் நிலையை அறிந்து பலன் முன்போல் பார்க்கவும்.

ஜன்ம இராசியிலும் அதற்கு 8, 12ம் இடங்களில் சூரியன் செவ்வாய் குரு சனி இவர்கள் வரும்போது தேக பீடையும் இடம் மாறுதல் திரவிய சேதம் இவை கள் உண்டாகும் நிற்கும் இலக்கினத்திற்கு கோசார பலனில் நவக்கிரஹங்கள் நிற்கும் சுபம் அசுபஸ்தான பலனை கீழ்கண்டபடி பார்க்கவும்.

## கோசாரபலன் சுபஸ்தானம் வரும்போது

சூரியன் 3, 6, 10, 11, ல் நின்றால் நற்பலன் கொடுப்பான்

| | | |
|---|---|---|
| சந்திரன் | 1, 3, 6, 7, 10, 11 | " |
| செவ்வாய் | 3 6 11 | " |
| புதன் | 2 6 8 10 12 | " |
| குரு | 2 5 7 9 10 12 | " |
| சுக்கிரன் | 1 2 3 4 5 8 10 12 | " |
| சனி | 3 9 11 | " |
| இராகு | 3 6 11 | " |
| கேது | 3 6 11 | " |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## துர்ஸ்தானம் வரும்போது

அசுப பலன்

| | | |
|---|---|---|
| சூரியன் | 1 4 5 7 8 9 11 | " |
| சந்திரன் | 2 4 8 10 12 | " |
| செவ்வாய் | 1 2 4 8 10 12 | " |
| புதன் | 1 3 5 7 8 9 12 | " |
| குரு | 1 3 4 8 10 12 | " |
| சுக்கிரன் | 3 9 8 12 | " |
| சனி | 1 2 4 5 8 10 12 | " |
| இராகு கேது | 1 3 4 9 8 10 12 | " |

# கோட்சார பலன்

கிரகங்கள் 12 இராசிகளில் நிற்கும் பலன்கள்

சூரியன் சந்திரன் or இலக்கினத்துக்கு

1 ல் சஞ்சரிக்கும் காலத்தில் சுகக்குறைவு, வியாகூலம் பந்து மித்துரு விரோதம் அலைச்சல் உண்டாகும்.

2 ல் நீசகுணம் கெட்ட சகவாசம் நஷ்டம் அலைச்சல் நேத்திரரோகம்,

3ல் தேகசௌக்கிய சந்தோஷம் பந்து மித்துருக்கள் சிநேகம் ஐஸ்வர்யம்

காரியசித்தி தனவரவு உண்டாகும்.

4 ல் மனது கஷ்டம் குடும்பகலகம் எத்தின காரியம் நஷ்டம் வியாத்ஜிய ஏற்படும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

5 ல் சோம்பல் கஷ்டம் பொருள் செலவு அனதர்யம் ரோகம் இராஜ பீடை உண்டாகும்.

6 ல் காரியனுகூலம் ரோக நிவர்த்தி ஆரோக்கியம் தான்ய விருத்தி ஏற்படும்.

7 ல் குடும்ப வியாகூலம் குழந்தைகள் அலைச்சல் அசௌக்கியம் மார்நோய் உண்டாகும்

8 ல் தோஷம் கஷ்டம் குடும்ப கலகம்

9 ல் திரவிய நாசம் லாபகுறைவு வியாபார நஷ்டம் மானக் குறைவு உத்தியோகம் மாறுதல் ஏற்படும்

10 ல் ஆரோக்கியம் பந்துசினேகம் காரியசித்தி வழக்கில் வெற்றி உண்டாகும்.

11 ல் திரவியலாபம் கலியாண சுபகாரியம் ஏற்படும்.

12ல் பரதேசவாசம் ஐஸ்வர்ய நஷ்டம் யாத்திரை முதலியன ஏற்படும்.

குறிப்பு 3-6-10ல் சூரியன் சஞ்சாரம் செய்யும் போது விசேஷ சுப பலனை தருவான்.

**சந்திரன் கோசாரபலன்**

1ல் தேகசௌக்கிய ஆரோக்கியம் சந்தோஷம் இஷ்ட போஜனம் காரிய சித்தி உண்டாகும்.

2ல் அதிக செலவு கலகம் கிலேசம் வியாகூலம் வியாதி ஏற்படும்.

3ல் ஐஸ்வர்யலாபம் வஸ்திரலாபம் தைரியம் இஷ்ட போஜனம் ஏற்படும்.

4ல் பந்துவிரோதம் காரிய நஷ்டம் வயற்றுநோய் உண்டாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

5ல் சோம்பல் உற்சாக குறைவு மனோ வியாதி ஐஸ்வர்ய நஷ்டம் மானக்கேடு உண்டாகும்.

6ல் ஆரோக்கியம் தனலாபம் கீர்த்திபுண்ணிய காரியம் சித்தி சம்போகம் ஏற்படும்.

7ல் மனோதிருப்தி பெருமை சௌபாக்கியம் கார்யானுகூலம் உண்டாகும்.

8ல் தேகாரோக்கியம் கெடுதி போஜனம் கஷ்டம் மரண பயம் ஏற்படும்.

9ல் புத்திர விரோதம் அன்னிய தேசவாசம் ஜீவன கஷ்டம் மார்நோய் ஏற்படும்.

10ல் எண்ணிய காரியசித்தி பந்துசுகம் போஜன பிரீதி உண்டாகும்.

11ல் ஆனந்தம் இஷ்டபோஜனம் லாபம் ஏற்படும்.

12ல் மனோகஷ்டம் மானக்குறைவு பந்து துவேஷம் காயம் உண்டாகும்.

## செவ்வாய் கோசார பலன்

1ல் ஜுரபயம் குடும்ப கலகம் ஆயுதபாதை தெய்வ குற்றம் ஏற்படும்.

2ல் சரீர பலக்குறைவு சர்வம் நாசம் பயம் வாதபித்த ரோகம் உண்டாகும்.

3ல் ஆரோக்கியம் இஷ்டகாரிய சித்தி ஐஸ்வர்யம் லாபம் வஸ்திர லாபம் தனவிருத்தி இராஜபூஜிதம் ஏற்படும்.

4ல் பயம் பந்துமித்துரு விரோதம் பாக்கிய குறைவு ரோகம் அக்னி பயம் ரத்தபோக்கு வயிற்று வலி உண்டாகும்.


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

5ல் வியாதி அகால போஜனம் சத்துரு பயம் புத்திர பிரிதி ஏற்படும்.

6ல் வஸ்திரலாபம் தான்யாதி லாபம் கீர்த்தி காரிய லாபம் உண்டாகும்.

7ல் போஜன கஷ்டம் பந்துமித்திரர் கஷ்டம் சிந்தனை புத்திரர் விரோதம் வயிற்று வலி கண் ரோகம் ஏற்படும்.

8ல் காரியஹானி பரதேசவாசம் வியாகூலம் அன்னிய தேசவாசம் ஏற்படும்.

9ல் போஜன குறைவு திரேக இளைப்பு வியாதி அன்னிய தேச வாசம் ஏற்படும்.

10ல் கிலேசம் வியாதி அலைச்சல் உண்டாகும்.

11ல் ஆரோக்கியம் ஐஸ்வர்யம் சந்தோஷம் காரிய சித்தி தைரியம் பூமிபலிதம் இராஜயோகம் ஏற்படும்.

12ல் அன்னிய தேசவாசம் வியாதி மனோ வேதனை நேத்திர வியாதி பித்த ரோகம் உண்டாகும்.

குறிப்பு : 3ல் 6ல் விசேஷ லாபம்

# புதன் கோசாரபலன்

1ல் விரோதம் அகாலபோஜனம் வீண் வழக்கு ஜெயில் தண்டனை துன்மார்க்கம் கிலேசம் உண்டாகும்.

2ல் திரவிய பிராப்தி ஆரோக்கியம் சர்வ காரியசித்தி ஏற்படும்.

3ல் தனநாசம் தண்டனை பந்து விரோதம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

புத்திரகுறைவு வீண் மனஸ்தாபம் சத்துருபீடை உள்ளூர் விட்டு விலகுதல் ஏற்படும்.

4ல் தாயாருக்கும் சந்தோஷம் சர்வ காரியம் சித்தி ஏற்படும்.

5ல் பீடை கிலேசம் மனைவி பீடை மான நஷ்டம் உண்டாகும்.

6ல் ஐஸ்வர்ய லாபம் தான்ய லாபம் தைர்யம் வித்தை கீர்த்தி சந்தோஷம் உண்டாகும்.

7ல் தனம் நஷ்டம் தண்டனை சர்வ காரியம் ஹானி ஏற்படும்.

8ல் புத்திரவஸ்திரலாபம் வித்தையில் தேர்ச்சி செல்வம் புத்தி விருத்தி உண்டாகும்.

9ல் சோம்பல் விரோதம் அலைச்சல் கீர்த்தி கெடுதல் சுப காரியம் தடங்கல் ஏற்படும்.

10ல் தனவரவு ஆரோக்கியம் சுகபோகம் எதிரி நசிந்து போகுதல் உண்டாகும்.

11ல் சந்தோஷம் சௌபாக்கியம் பந்து ஜன புகழ்ச்சி ஏற்படும்.

12ல் ஆரோக்கியம் கெடுதல் மனக் கஷ்டம் கலகம் போஜனக் குறைவு சத்துரு பயம் ஏற்படும்.

குறிப்பு 2 4 6 8 10ல் விசேஷ லாபம் ஏற்படும்.

## குருகோசாரபலன்

1ல் ஜீவன காரிய விரோதம் புத்தி குறைவு கீர்த்தி குறைவு உண்டாகும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

2ல் சர்வ காரியானுகூலம் சுகம் கீர்த்தி சௌக்கியம் பாக்கியம் ஆதாயம் ஏற்படும்.

3ல் கஷ்டம் விரோதம் தரித்திரம் ஜீவனஹானி வியாதி இடம் மாறுதல் வழக்கு உண்டாகும்

4ல் பரதேசவாசம் சபலபுத்தி வீண்பழி அவமானம் உண்டாகும்.

5ல் ஐஸ்வர்யலாபம் தான்ய விருத்தி கார்யானுகூலம் பந்து சுகம் புத்திர விருத்தி உண்டாகும்.

6ல் வீட்டில் கலகம் பொருள் நஷ்டம் பந்து விரோதம் ஏற்படும்.

7ல் ஆரோக்கியம் இராஜதரிசனம் உற்சாகம் இஷ்ட காரிய சித்தி விவாஹ சுபகாரியம் ஏற்படும்.

8ல் அக்கினி பயம் சோரபயம் நிந்தனைதேசம் கெடுதல் உண்டாகும்.

9ல் உத்தியோக உயர்பதவி லாபம் ஐஸ்வர்யம் கிரஹ லாபம் போஜன சௌக்கியம் உண்டாகும்

10ல் தனதான்யாதி நாசம் குடும்பக்கலக்கம் அன்னிய தேசவாசம் பதவிக் கெடுதல் பலவிதகஷ்டங்கள் ஊரைவிட்டு ஓடுதல் புத்திரகலகம் ஏற்படும் சந்திர இலக்கினத்துக்கு 10ல் குரு இருந்தால் பதவியும் நாசம் என்பார்கள் (அனுபோகம்)

11ல் கீர்த்தி தேகபலம் சர்வகாரியஜயம் சத்துரு நாசம் மந்திர ஜப கீர்த்தி உண்டாகும்.

12ல் திரவியம் விரயம் இடம் மாறுதல் தரித்திரம்சுபம் கெடுதல் உண்டாகும்.

குறிப்பு-குரு 2-5-7-9ம் இடங்களில் விசேஷ லாபம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சுக்கிரன் - 6-7-10ல் இருந்தால் கெட்ட பலன் ஏற்படும்

# சுக்கிரன் கோசார பலன்

1ல் ஐஸ்வர்யம் லாபம் சம்போக புத்தி சுகம் எத்தனை காரியம் சித்தி தனலாபம் உண்டாகும்.

2ல் சௌக்கியம் சரீரசுகம் சம்போகசுகம் ஆரோக்கியம் வஸ்திர லாபம் ஏற்படும்.

3ல் மதிப்பு ஆரோக்கியம் யோகம் அதிகாரம் உண்டாகும்.

4ல் பந்துக்கள் நன்மை சம்போகசுகம் புத்திரர்கள் மேன்மை இஷ்டபோஜனசுகம் உண்டாகும்.

5ல் இஷ்டமான போஜனம் திரவிய சேர்க்கை தனதான்ய விருத்தி புத்திர உற்பத்தி உண்டாகும்.

6ல் விரோதிகளால் பீடை குடும்பகலகம் புத்திரர் விரோதம் ஏற்படும்.

7ல் பயம் அவமானம் ஜீவனகஷ்டம் அலைச்சல் வியாதியால் பணசிலவு

8ல் திரவியலாபம் பெரியோர் தரிசனம் விவாஹ சுபம் ஏற்படும்.

9ல் ஆரோக்கியம் லாபம் பணம் வருத்து பக்தி விவாஹம் சுபம் சுகம் ஏற்படும்.

10ல் பந்து பிரீதி காரியசித்தி பரிமளலாபம் சுப பலன் உண்டாகும்

11ல் அதிக கீர்த்தி ஐஸ்வர்ய லாபம் ஆபரணம் பால் விருத்தி ஏற்படும்

12ல் திருட்டு பயம் பயிர் நஷ்டம் கஷ்டம் பணம் விரயம் ஏற்படும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# சனி கோசாரபலன்

1ல் மந்தபுத்தி சரீரம் கெடுதல் மன சங்கடம் பயம் வியாதியால் பணச்செலவு பந்து விரோதம் அதிக கஷ்டம் தேசசஞ்சாரம் உண்டாகும்.

2ல் சதாகஷ்டம் பகை காரியகேடு அலைச்சல் விரோதம் ஏற்படும்

3ல் மனோதைரியம் சுகஜீவனம் சுயபுத்தி எத்தன காரியசித்தி ஆரோக்கியம் ஏற்படும்

4ல் வியாதிகிலேசம் பயம் வீட்டில் சுகமின்மை ஆரோக்கியம் கெடுதல் உண்டாகும்.

5ல் சர்வகாரிய ஹானி மனஸ்தாபம் குடும்ப வழக்கு ஏற்படும்

6ல் தனதான்ய விருத்தி பந்து மித்துருக்கள் சுகம் சினேகம் வீடுகட்ட பிரயத்தனம் ஏற்படும்

7ல் அன்னியதேசவாசம் மனவேதனை பொருள் நஷ்டம் உண்டாகும்.

8ல் சகலவிதத்திலும் எத்தனகாரியம் கேடு உண்டாகுதல் (அஷ்டமசனி என்பது) காரியகேடு மனோபயம் வெளி சஞ்சாரம் அபமிருத்துவம் விரோதம் ஏற்படும்.

9ல் துக்கம் வியாதி குடும்ப கஷ்டம் மார்நோய் விரோதம் உண்டாகும்.

10ல் வியாகூலம் பாபங்கள் ஏற்படுதல் பயிர் நஷ்டம் ஜீவனஹானி ஏற்படும்.

11ல் தேக ஆரோக்கியம் தனதான்ய லாபம் பயிர் சித்தி சம்போக அனுகூலம் உண்டாகும்.

12ல் மானஹானி கிலேசம் பயிர் நஷ்டம் அகாலபோஜனம் சதாகுடும்ப கிலேசம் இடமாறுதல் உண்டாகும்.

குறிப்பு: 3-6ல் சுப பலன் உண்டாகும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# இராகு கேது கோசாரபலன்

1ல் பயம் ரோகபீடை மனவியாகூலம் மனைவி மக்கள் விரோதம் தேசசஞ்சாரம் திரவிய நாசம் நஷ்டம் ஏற்படும்

2ல் ஐஸ்வர்யம் மங்கள காரியம் ஏற்படுதல் ஆரோக்கியம் தேக சௌக்கியம் சந்தோஷம் கீர்த்தி திரவிய லாபம் உண்டாகும்.

3ல் சௌக்கியம் பாக்கியம் குறைவு மனக்கிலேசம் கஷ்டம் உண்டாகும்.

4ல் மான ஹானி வாதரோகம் யத்தன காரியம் தடை ஏற்படும்.

5ல் புத்திர விரோதம் போஜன கஷ்டம் ஏற்படும்.

6ல் சுகம் சத்துரு லாபம் தைரியம் புத்தி பூமி பசு லாபம் உண்டாகும்.

7ல் தன தான்யலாபம் சத்துருபயம் ஏற்படும்

8ல் சரீரபாதை திருடர்பயம் மனோவியாகூலம் இராஜ பயம் உண்டாகும்.

9ல் சத்துருபயம் பிராண தடை உண்டாகும்

10ல் தனநஷ்டம் சுகம் இஷ்டபோஜன தடை ஏற்படும்

11ல் ஸ்த்ரீலாபம் இஷ்டபோஜனம் பசு விருத்தி உண்டாகும்.

12ல் பந்துக்கள் நாசம் தரித்திரம் எடுத்தகாரியம் நாசம் ஏற்படும்.

நவகிரஹங்கள் இராசி 12ல் நின்ற பலன்கள் சொல்லப்பட்டது.

முற்றும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## தற்காலம் கோட்சார பலன் பார்க்கும் விதம்

இராசி சக்கரம் வரைந்து ஜன்ம நக்ஷத்திரம் என்ன என்று அறிந்து சந்திரன் எந்த நக்ஷத்திரகாலில் எந்த ராசியில் நிற்கிறான் என்பதை அறிந்து ஷெ இராசியில் சந்திரனை வைத்து மற்ற நவகிரஹங்களை பஞ்சாங்கத்தைப் பார்த்து ஷெ தேதியில் நவகிரஹங்களை மற்ற இராசியில் போடவும். பிறகு வயதை அறிந்து தற்காலம் திசை புத்தியை கவனித்துக் கொண்டு அதற்குள்ள திசை புத்தி வரையில் சந்திரனை நின்ற இராசியை இலக்கினமாக கொண்டுமற்ற கிரஹங்கள் நிற்கும் நிலையை இராசியில் அறிந்து உச்சம் நீசம் பகை சமம் இதுகளையும் அறிந்து சுப சுபா பலனை அறிந்து கொள்ள வேண்டியது நவகிரங்கள் சுபஸ்தானத்தில் நின்றாலும் திசைபுத்தி நன்றாக இருந்தாலும் சுப பலன் ஏற்படும் அசுபஸ்தான மாகவும் திசைபுத்தியும் விரோதமாக இருந்தாலும் அசுப பலன் ஏற்படும் கோட்சாரபலன் அஷ்ட வர்க்கமூலமாகவும் பார்க்க நன்கு அறியலாம் முற்றும்.

## பாவ பலன்

இனி 12-பாவ பலன்களை காணவும்:

பாவம் என்பது இடம்,

இராசி மண்டலத்தில் இலக்கினம் முதல், நவகிரஹங்கள் 12 ராசிகளில் இருந்து பலன்களை கொடுக்கிறார்கள் அவர்கள் நிற்கும் ஸ்திதி கூடியிருக்கும் கிரஹங்களின் காரகத்துவம் நோக்கும் கிரஹங்களின் காரகத்துவம் இவை எல்லாம் சோதித்து அறிந்து சொல்லவேண்டும் இதற்கு துவாதசபாவ பலன் என்று கூறுவது,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

முதலில் கிரஹங்களின் ஆதிபத்தியம் அறியவேணும் அதவாது மேஷம் விருச்சிகத்துக்கு செவ்வாய் அதிபதி ரிஷபம் துலாத்துக்கு சுக்கிரன் அதிபதி மிதுனம் கன்னிக்கு புதன் அதிபதி கடகத்துக்கு சந்திரன் அதிபதி சிம்மத்துக்கு சூரியன் அதிபதி தனுசுக்கு மீனத்துக்கு குரு அதிபதி மகர கும்பத்துக்கு சனி அதிபதி இப்படி நவகிரஹங்கள் தங்கள் அதிபத்தியனை அடைந்து ஒவ்வொரு இராசியிலும் இருந்துமாறி கொண்டே பலன் கொடுக்கிறார்கள்.

குறிப்பு-பாவ பலனை சோதிக்கும் முன்

1. இராசிக்கு அதிபதி யார்?

2. அவர் எத்தனையாவது இடம் மாறி இருக்கிறார்?

3. மாறியிருக்கும் இடம் நட்பு பகை யார்?

4. அவருடன் கூடியிருக்கும் கிரஹங்கள் நட்பா பகையா?

5. அவர்களுடைய காரகத்துவன் என்ன?

6. தற்காலம் திசாபுத்தி இவைகள் என்ன?

இவைகளை எல்லாம் நன்றாக அறிந்த பின் தான் ஒரு பாவபலத்தை கூறவேண்டும்.

## பாவ பலன்

ஏற்கனவே ஆதிபத்தியம் ஸ்தானபலன் சொல்லப் பட்டிருக்கிறது மேலும் செல்லுகிறோம்,
இலக்கினம் முதல்

துவாதச பாவ பலன்

இலக்கின பாவம்:- ஜன்மித்த வேளை இலக்கினம் என்று பெயர் இந்தஜன்ம லக்கினத்தின் (முதலாவது ஸ்தானம்.) ஆதிபத்தியத்தினால் மூர்த்தி கீர்த்தி தேகம் சிரக ஆயுக ஆரோக்கியம் லக்ஷணம் சுகம் அறியலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

துவிதிய பாவம்:- (இரண்டாவது இடம்)

இதனால் தனம் குடும்பம் வாக்கு வயது நேத்திரம் முகம் வித்தை செல்வம் இருதயம் வலது புருவம் மந்திரம் வாய் அசனம் போஜனம் அறியலாம்.

திருதிய பாவம்:- (மூன்றாம் (இடம்)

இதனால் இளைய சகோதரம் வீரியம் வலதுகாது தைரியம் வித்தை ரோகம் போஜனம் அறியலாம்.

சதுர்த்தி பாவம் - (நான்காம் இடம்)

மாதா மனது வலதுகை வாகனம் பூமி பந்து ஜலம் வித்தை குணம் வீடு மாடு கன்று களத்திர சுகம் வியாபாரம் புதையல் தேவாலயம் மூத்திர கிர்ஸனம் நஷ்டம் அறியலாம்.

ஐந்தாம்பாவம் - (இடம்)

புத்திரன் ஆத்மா பிரபு வித்தை பூமி ஞானம் இராஜாங்கம் தெய்வம் புண்ணியம் கெர்ப்பம் இவைகளை அறியலாம்.

ஆறாம் இடம் - (பாவம்)

ஜாதிசத்துரு ரோகம் ரணம் சோரம் பீடை துக்கம் இவை களை அறியலாம்.

ஏழாம் பாவம் - (இடம்)

(களத்திரம் பாவம்) காமம் புத்திரம்

இன்பம் சுகம் சன்மார்க்கம் வியாபாரம் விவாஹம் காலம் மனைவியின் அந்திய காலம் இவைகளை அறியலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எட்டாம் பாவம் - (இடம்)

ஆயுசு (வாழ்நாள்) மரணம் அநிஷ்டம் ரணம் பிரயாணம் கஷ்டம் பகை நஷ்டம் வியாதி அவமானம் நித்திரை ஆயுத பீடை இவைகளை அறியலாம்.

ஒன்பதாம் பாவம் - (இடம்)

பிதா பாக்கியம் தர்மம் புத்திர விருத்தி பாபபுண்ணியம் திருப்பணி உபதேசம் நந்தவனம் குருசிவ பூஜை தபசு இவைகளை அறியலாம்,

பத்தாம் பாவம் -(இடம்)

கருமம் ஜீவனம் ஞானம் வித்தை கீர்த்தி ஆக்கினை பூஷணம் பூமா வேளாண்மை இராஜயோகம் ஆன்மா தரிசனம் தருமம் ஈகை இரக்கம் யாத்திரை உத்தி யோகம் இடது கை துடை இவைகளை அறியலாம்.

பதினொன்றாம் பாவம் - (இடம்)

ஜ்யேஷ்ட சகோதரன் லாபம் சேவர்கள் இளையாள் (அடுத்தமனைவி) வித்தை பயிர் வேள்வி நல்லறிவு துக்கநிவர்த்தி இடது செவி முழங்கால் வித்தை இவைகளை அறியலாம்.

பனிரெண்டாம் பாவம் (இடம்)

விரையம் மோஷம் உத்தியோகம் மாரகம் இடதுகண் பாதம் அசனம் சயனம் போகபாக்கியம் விவாகம் செய்த தொழில் புண்ணியம் தானம் ஸ்தானவிருத்தி பாதம் பரிமளம் இவைகளை அறியலாம்.

இதுவரையில் ஸ்தான (இடம்) பலனை கூறினோம் இனி நவகிரஹங்கள் ஒவ்வொருவரும் தங்கள் ஆதி பத்தியத்தை கொண்டு நிற்கும் இராசியின் வலிமையின் பேரில் தங்கள், தங்கள் காரகபலனை கொடுப்பார்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவையாவன-

சூரியன் (காரக பலன்)

பிதா வலது நேத்திரம் பால் மிளகு வயிரம் கோதுமை அரிசி யாத்திரை உஷ்ணம் இவைகளை கொடுப்பான்

சந்திரன்

மாதா இடது கண் நித்திரை குளிர்ச்சி முத்து புடவை வெண்ணெய் பால் கொடுப்பான்.

செவ்வாய்

சகோதரன் பத்திரகாளி சுப்பிரமணியர்யுத்தம் அக்கினி செய்யும் தொழில் ரணம் கோபம் சிவந்தகண் செம்பு இவைகளை கொடுப்பான்.

புதன்

வித்தை கல்வி அம்மான் அலி கதை காவியம் நாடகம் தேர்பாகம் சித்தபுருஷன் நவரத்தினம் இவைகளை செய்வான் குரு-புத்திரர் அரசர் பட்டபெயர் பீடம் சொர்ணம் கடலை ரிஷபம் நவரத்தினம் தனகரன் தான்யவிருத்தி தருமம் இவைகளை செய்வான் மேன்மை பிரம்மா பிராமணன்

## நவகிரகங்கள் பலன்

சுக்கிரன்-களத்திரம் இலஷிமி பசு வாகனம் தாசன் தாசி கிரகம் பட்டபெயர் புனுகு புஷ்பம் கட்டில் மெத்தை சயனம் பிரியன் இவைகளை செய்வான்,

சனி-ஆயுசு சேவகவிருத்தி அடிமை தொழில் களவு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மர வேலை சிறை வெட்கம் ரோகம் இரும்பு வேலை விபசாரம் உளுந்து என்ணு எண்ணெய் இவைகளை செய்வான்.

இராகு-களவு செப்பிடுவித்தை ஞானம் பிதாமகன் இவைகளை செய்வான்.

கேது-மோசம் கபடு தொழில் சூதுவாது இவைகளை செய்வான்.

குறிப்பு-ஆதியில் மேஷத்தை பிராதன இராசியாக வைத்த காரணமாவது ஒவ்வொரு சதுர்யுகம் ஆரம்பத்திலும் சூரியாதி சப்த கிரஹங்களும் மேஷம் இராசியில் காணப் பட்ட தாக தெரிய வருகிறது ஆகையினாலே மேஷம் இராசியையே முதலாக (சிரசாக) அமைக்கப் பட்டிருக்கிறது தவிர ஸ்திரிசாதகத்துக்கு ஸப்தம பாகத்தை பார்த்துரு

ஸ்தானம் என்றும் அஷ்டமத்தை மாங்கல்ய ஸ்தானம் என்றும் சொல்லுவதற்கு புருஷனுக்கு 7வது ஸ்தானம் களத்திரத்தை போலவே ஸ்திரிக்கு 7வது ஸ்தானம் பாத்துரு ஸ்தானமாகிறது அதன்படியே புருஷனுக் குடைய ஆயுர் ஸ்தானமான 8ம் இடம் ஸ்திரிக்கு மாங்கல்ய ஸ்தானம் என்று பெயர்.

மூன்றாம் இடம்-11ம் இடமும் ஒரே சம்பந்தம் அந்த சாதகத்துக்கும் மூத்த சகோதரமாகிய 11ம் மிடத் திலிருந்து இலக்கினம் 3வது ஸ்தானமாகிறது 11ம் இடமாகிய அண்ணனுக்கு இலக்கினாதிபதி தம்பியாகிறான் 3ம் இடமாகிய தம்பிக்கு இதற்கு 11ம் இடமாகிய இலக்கினாதிபதி அண்ணனாகிறான் இதனாலே 3ம் 11ம் இடம் சமமாகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

5ம் இடமும் 9ம் இடமும் ஒரே சம்பந்தம் புத்திர ஸ்தானமாகிற 5ம் இடத்திலிருந்து 9ம் இடம் 5வது ஸ்தானமாகிறது இந்த 9ம் இடமே பிதுர் ஸ்தானமும் அதற்கு 5ம் இடமாகிய இலக்கினம் புத்திர ஸ்தான மாகிறது இதனாலேயே பிதாவுக்கு 5ம் இடமாகிய இலக்கினாதிபதியாகிறான்.

குறிப்பு-இலக்கினமும் 7ம் இடமும் ஒரே சம்பந்தம் இது புருஷனுக்கு ஸ்திரியும் ஸ்திரிக்கு புருஷனுமாகிறது

4ம் இடமும் 10ம் இடமும் ஒரே சம்பந்தம்

பெரியோர்கள் அநேக காலமாக யுக்தி யூகத்தினாலும் கேட்டறிந்த விஷயங்களை நன்கு அறிந்து எழுதப்பட்டிருக்கிறபடி. ஜாதகபலன்களை அனுசரித்து பலன் சொல்லுகிறார்கள். நாமும் அதனை அனுசரித்து இனி இலக்கின பாவம் முதல் 12 பாவ பலன்களை ஆராய்வோம்.

இலக்கின பாவம்

ஜன்மமான வேளை இலக்கினம் என்று பெயர் இதற்கு ஜன்மராசி மூர்த்தி கீர்த்தி ஸ்தானம் என்று பெயர் இதற்கு முதலாவது பாவம் என்றும் பெயர் இந்த பாவத்தை கொண்டு சொல்லுமிடத்து இலக்கினாதிபதி நட்பு ஆட்சி உச்சம்ஸ்தானங்களில் இருந்தாலும் கேந்திர திரிகோணங்களில் இருந்தாலும் சுபகிரஹங்களுடன் கூடினாலும் சுப பார்வையிருந்தாலும் இந்த ஜாதகன் சிறப்புற்றோங்கிய குணாதிசயங்களையும் வல்லமையும் யாவரும் மதிக்கும் தன்மையுடையவனாயும்

## இலக்கின பாவம்

ஸ்திரி பிரியர் இராஜ பூஜிதம் கட்டழகு கீர்த்தி தீர்க் காயுள் முதலியவைகளை உடையவனாக விளங்குபவர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

லக்கினத்திலும் 2-3லிலும் சுப கிரஹங்களிருக்க லக்கினாதிபன் சுபனாக இருக்க சுக்கிரன் பலவந்தனாய் பிறந்தால் ஆதியிலும் அந்தியத்திலும் சுகம் மத்தியிலும் துக்கம் குரு கேந்திரத்திலிருக்க லக்கினாதிபன் சுபனாக இருக்க வாலிபத்தில் சுகம் லக்கினாதிபன் 2ல் இருந்து 10ல் பாவர் இருந்து லாபாதி லாபத்திலிருந்தால் 30 வயதுக்குமேல் சுகம், இலக்கினாதிபன் சுப ராசி யிலிருந்து சுப கிரகத்தினால் பார்க்கப்பட்டால் நல்ல வம்சையிலிருந்தால் 16 வயதுக்கு மேல் சுக இலக்கினாதிபதி 16 வயதுக்குமேல் சுக இலக்கினாதிபதி 5 மிடத்தில் 10க்கு குடையவனுடன் கூடியிருந்தால் சௌக்கிய முண்டாகும் இலக்கினாதிபன் பகை நீசம் மூட்டாகிய இராசிகளில் இருப்பினும் பாவ கிரஹ திருஷ்டி ஏற்பட்டாலும் யாவராலும் அவமதிக்கப்படுவான் தவிர மெலிந்த சரீரம் தரித்திரியம் கோழைத்தனமாக இருப்பான் இலக்கினத்துக்கு கேந்திரங்களிலும் கோணங்களிலும் அஷ்டமத்திலும் பாவ கிரஹங்களில்லாமல் இருந்து இலக்கினாதிபதியும் குருவும் கேந்திரங்களில் எந்த ஜாதகத்திற்கு இருக்கமோ அந்த ஜாதகன் அநேக விதமான சுகங்களை அனுபவித்தும் சுகிர்தனாயும் நோயில்லா தவனாயும் 100வயது கால பரியந்தம் ஜீவிப்பான்.

## இரண்டாம் பாவம் (இடம்)

துதியஸ்தானத்திற்கு நேத்திரம் வாக்கு தனம் குடும்பம் ஸ்தானம் என்று பெயர் ஆகவே துதியாதிபதியும் சந்திரனும் சூரியனும் உச்சமித்துரு க்ஷேத்திரங்களில் இருந்து அல்லது கேந்திர திரிகோணங்களில் இருந்து துதியஸ்தானத்திலும் சுபகிரஹங்கள் இருப்பினும் நோக்கினும் நல்ல நேத்திரம் உடையவனாக விளங்குவான் குடும்ப ரக்ஷகனாகவும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இருப்பான் 2ம் இடத்தில் சுக்கிரன் நட்பு ஆட்சி உச்சத்தோடு இருந்தாலும் சுக்கிரனும் புதனும் இரண்டுக்குடையவன் நோக்கினும் மித்துரு திரிகோணத்திலிருந்தாலும் இரண்டாம் இடத்தில் இருந்தாலும் பர உபகாரியனா அநேக பேரை ரக்ஷிக்கப்பட்டவனாக இருப்பான் 2க்குடையவன் நட்பு ஆட்சி உச்சனாக இருந்து லக்கினாதிபன் பலவந்தனாக இருந்தாலும் 2 க்குடையவன் இருந்த ராசியாதிபதியும் கேந்திரத்திலிருந்தாலும் சகலருக்கும் அதிபதியாக (இருப்பான்) விளங்குவான்.

குடும்பாதி பரமஉச்சத்திலிருக்க அவனை குரு பார்த்தாலும் இரண்டாமிடத்தில் லக்கினாதிபதியும் குருவும் கூடி இருந்தாலும் ஆயிரம் பேரை ரக்ஷிப்பான் துதியாதிபதியும் குருவும் சுக்கிரனும் உச்சமித்துரு ஸ்வக்ஷேத்திரங்களிலிருக்க அந்த ஸ்தானதிபதிகள் கேந்திரங்கள் கோணங்களிருக்க, துதியஸ்தானதி பதியை சுபகிரகங்கள் நோக்க கூடில் நல்ல வாக்கியன் தனவான் ஆவான் துதியாதிபதி சத்துரு நீச ராசிகளில் பாவ கிரக சம்பந்தம் பரினும் ஷஷ்டாஷ்ட கவியங்களில் இருக்க தனஹீனனாகவும் நேத்திர வியாதியுள்ளவனாகவும் இருப்பான்.

சத்துரு நீச ஷ்டாஷ்டக வியஸ்தானங்களில் துதியாதிபதி நிற்கில் தோஷவாக்கியன் பாவகிரகங்கள் நிற்கில் துர் பாக்கியனும் கோள் சொல்பவனும் ஆவான்

துதியாதிபதி புதனுடன் கூடி கேந்திர கோணங்களில் நட்பு ஆட்சி ஏறி சுபராலே பார்க்கப்பட்டு அல்லது புதனாலேயே நோக்கினும் கூடினும், நல்ல புத்தி சாலியாக வித்தை சாதுர்ய வாக்குடையவான இருப்பான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## பாபர்கள்

இரண்டாம் பாவம்

இரண்டாம் இடம் பாபிகளுடன் கூடி சனி பார்வை அடைந்திருந்தால் கண்நோய் உண்டாகும்.

இரண்டாம் இடத்தான் மூன்றாம் இடத்திலிருந்து குருவால் பார்வை பெற்றிருக்க சூரியன் உச்சனாக 4 இடத்தில் இருந்தாலும் அநேக ஜனங்களை ரக்ஷிக்க படுகிறவனுவான் மேலும் 2ம் பாவத்தில் அநேக பாபர்களிலிருந்து 2ம் இடத்தானும் பல ஹீனமுள்ள வனாக இருந்து பாபகிரஹசம்பந்தம்—பார்வை அடைந்து 6,8,12ல் இருந்தால் அந்த ஜாதகன் கஷ்டஜீவனம் தவிர சுகஜீவனமில்லை.

இரண்டாம் இடம் பாபர்களுடன் கூடில் பாப ராசி யாகவும் 2ம் இடத்தில் பாபர்களும் இருந்து பார்வையும் பெற்றும் இருந்தால் துன்மார்க்கத்தில் ஜீவிப்பான்

கர்மாதியும் துதியாதிபதியும் மித்துருவாகினும் மித்திர சேஷத்திரத்திலிருக்கினும் தனம் தேடுவான்.

துதியாதிபதியும் லாபாதியும் கர்மாதிபதியும் ஸ்வ க்ஷேத்திரமித்துரு க்ஷேத்திரத்தில் அல்லது கோணங் களில் இருக்க வியஸ்தானாதி பெலஹீனாக இருந்தால் இவன் சம்பாதித்த பொருள் சேதம் அடையும் துதியாதிபதி வியத்தில் இருக்க வியஸ் தானாதி துதியத்திலிருக்க துதியாதிபதி ஷஷ்டாஷ்டக வியத்தில் பாபகிரகனால் நோக்க தரித்திரனாவான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

### இரண்டாம் பாவம்

## புதையல் தனம் கிடைக்கும் யோகம்

லாபாதி-11ம் இடத்துக்குடையவன் லக்கினத்திலும் லக்கினாதிபதி இரண்டாம் இடத்திலும் இரண்டாம் அதிபதி லாபத்திலும் (அ) 11ம் இடத்திலும் அமையப்பெற்ற ஜாதகருக்கு புதையல்தென்படும்.

தனயாதிபதி சுபகிரஹமாய் உச்சஸ்வக்ஷேத்திர மித்துரு க்ஷேத்திரம் பெற்று கேந்திர கோணங்களில் இருக்க இந்த ஸ்தானங்களை யாகிலும் தனயாதிபதியை யாயினும் சுபகிரஹ கூடினும் நோக்கினும் நல்ல குடும்பமாகவும் செல்வம் தனம் வாக்கு உள்ளவனாகவும் இருப்பான்.

## மூன்றாம் பாவம்

மூன்றாம் ஸ்தானத்திற்கு சகோதரம் தைரியம் கர்மஸ் தானம் என்று பெயர் ஆகவே செவ்வாய் திருதிய ஸ்தானா திபதியாயும் திருதிய ஸ்தானத்தில் நின்றகிரஹங்கள் உச்ச ஸ்வக்ஷேத்திர மித்துரு க்ஷேத்திரங்களிலிருக்க இவர்களை சுப கிரகங்கள் பார்க்க சகோதரர்கள் உதவி உபகாரம் ஐஸ்வர்யம்முதலிய பொருள்கள் கொடுத்து ரக்ஷிக்கப்படுவார்கள்

அப்படியில்லாமல் செவ்வாய் திருதியாதி பதியையும் திருதிய ஸ்தானத்தில் நின்ற கிரகங்களையும் பாவகிரகங்கள் பார்த்தாலும் இவர்கள் ஷஷ்டாஷ்டவியத்தில் நின்றாலும் நீச்சகோதரனை அடைந்து சகோதரர்களும் நாசமடைவார்கள்.

தானாதிபதியும் செவ்வாயும் பாப கிரஹங்களோடு சம்பந்தப்பட்டால் சகோதர-சகோதரிகள் பிறந்து இறந்து விடு வார்கள் தானாதிபதியும் செவ்வாயும் பெண் கிரஹங்களுடன் கூடியிருந்தாலும் பார்க்கப்பட்டாலும் சகோதரிகளுண்டு. ஆண் ராசியிருந்தால் சகோதரர் சகோதரர்களுண்டு.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மூன்றுக்குடையவன் இராகுடன் கூடியும் இரண்டுக்குடையவன் காரகனோடு கூடியும் இலக்கினாதிபதி சூரியனுடன் கூடியிருந்தால் அவனுக்குப் பின் சகோதரர்களில்லை மூன்றில் சுக்கிரனிலிருந்து அவ்விட்டுக் குடையவன் சந்திரனோடு சேர்ந்தும் காரகன் சனியோடு சேர்ந்திருந்தால் சகோதரி ஒருத்தி இருப்பாள்.

திரிதியாதிபதி சூரியனுடன் கூடினால் மிதியும் சந்திரனுடன் கூடினால் மனோ தைரியமும் செவ்வாயுடன் கூடி னால் வெளிக்கு மூடனாகவும் உள்ளுக்கு கோபிஷ்டியாயும் புதனுடன் கூடியிருந்தல் சாத்விகபுத்தியுள்ளவனாய் ஆவான்

திரியாதிபதி சுபகிரஹ சம்பந்தமாகவும் திரிதிய ஸ்தானத்தில் சுபகிரஹமிருந்தும், சுபர்பார்வை பெற்றும் இருந்தால் சாதகன் காதுக்கு நல்ல ஆபரணமணிவான்

மூன்றாம் இடம் சூரியன் வீடாக இருந்தாலும். அதில் சூரியனிருந்தாலும் காதுலணியும் ஆபரணம் சிவந்ததாக இருக்கும் சனி வீடாகிலும் சனி நின்றாலும் நீல நிறமான ஆபர்ணமும் சுக்கிரன் 3ல் நின்றாலும் முத்து ஆபரணமும் குரு 3ல் நின்றால் பொன்னாபரணமும் அணிவான்.

திரிதியஸ்தானத்திலிருந்து ஷை திரிதியாதிபதி நிற்கும் ராசி வரையில் எண்ணி அவைகளில் எவ்வளவு கிரஹங்கள் நிற்கின்றனவோ அவ்வளவு சகோதரர் சகோதரிகள் பிறப்பார்கள் ஷை இராசிகளில் ஆண் கிரஹமிருந்தால் ஆண் சகோதரர்கள் என்றும் பெண் கிரஹங்களிருந்தால் சகோதரிகள் என்றும் குறிப்பிடவும் ஷை கிரஹங்கள் சுப திருஷ்டி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வாழ்வார்கள் என்றறிக.

## நான்காம் பாவம்

சதுர்த்த ஸ்தானம்-(நான்காம் இடம்)

மாதா சுகம் வாகனம் மனை பந்து பூமி கல்வி ஆசனம் ஹிருதயம் இவைகளை அறியலாம்.

நான்காம் இடத்தான் கேந்திர கோணங்களில் பெலத்திருக்கவும் சுப பார்வை பெற்றால் நல்ல கட்டிடமுள்ளமெத்தைவீடு சுகம்பூமி லாபமுள்ளவனாகவும் பந்து மித்துரு உள்ளவனாகவும் இருப்பான்.

பாக்கியாதிபதி கேந்திரத்திலிருந்து 4ம் இடத்தான் உச்ச மித்துருசேஷத்திலிருக்க 4ம் இடத்திலிருக்கும் கிரஹமும் உச்சமடைந்து நிற்குமானால் ஜாதகன் அதிவிசித்திரமான வீடுடையவனாவான்.

மூன்றாம்பாவம் சுபசம்பந்தமாயிருந்து 4ம் இடத்தான் பெலத்திருக்க 3ம் இடத்தானும் பெலம்பெற்று இருந்தால் கற்று பிரகாரமுள்ள மெத்தை வீடு கிடைக்கும்.

4ம் இடம்தான் கேந்திர கோணலாப ஸ்தானத்திலிருந்து குரு பார்வைபெற்றால் பந்துக்களில் ஸ்ரேஷ்டனாக ஆவான்.

குரு சந்திரன் புதன் இவர்கள் 4ம் இடத்திலிருக்க அல்லது 4ம் இடத்தை நோக்க பந்துக்களுக்கு உபகார-முள்ளவனாக இருப்பான், 4ம் வீடு சர ராசியாக இருக்க அதிபதியும் காரகனும் சர ராசியிலிருக்க பிறந்தவன் அநேக இடங்களில் வீடு கட்டிக் கொண்டு போவான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

4ம் வீடு ஸ்திர ராசியாகவும் ஸ்தானாதிபதியும் காரக னும் ஸ்திர ராசியிலிருக்க 4ம் வீட்டினதிபதி சுப ஷஷ்டாம் சத்திலிருந்தால் ஸ்திரமான இடத்தில் நல்ல வீடுடையவனாக இருப்பான்.

2,4,12 இடங்களுக்கு அதிபதிகள் கேந்திரத்திலோ கோணத்திலோ உச்சராசியிலியிலோ இருந்து குணாதிகர்களாக ஆனால் வீடுகள் சுப இலக்ஷணமாகவும் ஸ்திரமாகவும் அமையும்.

4ம் இடத்திற்கு அதிபதியான கேந்திராதிபதி 10ம் பாவத்திலும் தசமாதிபதி 4ம் இடத்திலும் இருந்து செவ்வாயும் கூடியிருந்தால் ஜாதகன் அநேக பூமியை உடையவனாக இருப்பான்.

4ம் இடம 10ம் இடம் அதிபர்கள் சேர்ந்து 4ல் அதிமித்திருத்தவம் அடைந்திருக்க பிறந்த சாதகன் அநேக கிராமத்தையும் பூமியையும் பெருவான்.

நான்காம் பாவம்

சுகஸ்தானம் பூர்ணபெலமுள்ள சுக்கிரன் சந்திரன் புதன் குரு இவர்களுடைய வீடாக இருந்து சுகஸ் தானத்தில் சுபர்களிருந்தாலும் அல்லது பார்த்தும் இருந்தால் சாதகன் சுகத்தை அடைவான்.

சுகாதிபதி இலக்கினத்திலிருந்தும் குரு புதன் சுக்கிரன் இவர்களால் பார்வை அடைந்து இருந்தால் மாதா பதிவிரதையாகவும் சுகமாகவும் இருப்பான்.

மாதுருஸ்தானத்தில் சுபகிரஹமிருக்க மாதுர்காரக னும் சுபகிரஹ சம்பந்தம் பெற்று மாதுர் ஸ்தானாதி பெலவானாகை இருந்தால் மாதா தீர்க்காயுளுடன் இருப்பாள்

மாதுர் ஸ்தானாதி மாதுர்காரகன் சுக்கிரன் இவர்கள் மூன்று பேர்களும் பாபக்ஷேத்திரம் பாப சம்பந்தம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பாப திருஷ்டி அடைந்து இருந்தால் சாதகன் மாதுர்நாசத்தை அடைகிறான்.

2-4-10ம் இடங்களில் சுபகிரஹமிருக்க ஷெ ஸ்தானா திபதிகளும் நட்பு ஆட்சி உச்சம் பெற்றிருந்தாலும் குரு புதன் சுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட்டாலும் ஷெ இடங்களில் குருபுதன் சுக்கிரன் இவர்களிருந்தாலும் பார்த்தாலும் ஜாதகன் நல்ல மேன்மை அடைந்து சுகஜீவியாக பந்து மித்துக்களுடன் வாழ்வான் அப்படியில்லாமலிருக்க 4ம் இடத்தில் அநேகபாபிகள் கூடினும் 4ம் இடத்தைபாவிகள் திருஷ்டி அடைந்தாலும் மாதுரு நாசமும் அதிகபடிப்புகசும் இல்லாதவனாகவும் தரித்திரமும் ஆவான்.

## ஐந்தாம் பாவம்

### பஞ்சமஸ்தானம் பாவம் இடம்

பஞ்சமஸ்தானத்திற்கு புத்திர ஸ்தானம் புத்தி ஸ்தானம் என்று பெயர் ஆகவே பஞ்சமஸ்தனாதி உச்ச ஸ்வக்ஷேத்திர மித்துருஸ்தானங்கலிருக்கினும் கேந்திர கோணங்களிலிருக்கினும் பஞ்சமஸ்தானத்தை சுபகிரஹங்கள் பார்வை அடைந்தாலும் நல்ல புத்திமான ஷெ 'ஸ்தானத் தை குரு பார்வையிருந்தால் நல்ல சத் புத்திரனை பெறுவான்.

பஞ்சமஸ்தானத்தில் பாவ சம்பந்தம் பெற்று பாபக்ஷேத் திரத்திலிருந்து குரு பார்வையும் இல்லாமலிருந்தால். புத்திரபேறு இல்லை.

சந்திரனிருந்தராசி இலக்கினம் பஞ்சமஸ்தானாதி லிருந்த ராசி பஞ்சஸ்தானம் குரு இவர் இருந்த ராசி இவர்னை கொண்டு புத்திரபேறு சொல்வதாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பஞ்சமஸ்தானமும் பஞ்சமஸ்தானாதிபதியும் பஞ்சமஸ் தானத்தில் நின்ற கிரஹமும் ஆணாகில் ஆண் சந்ததியும் பெண்ணாகில் பெண் சந்ததியுண்டாகும்.

பஞ்ச ஸ்தானத்தையும் பஞ்ச ஸ்தானாதிபதி குரு இவர்களை அங்காரகன் கூடினும் நோக்கினும் கர்ப்பம் கரையும்.

பஞ்சமஸ்தானாதிபதி குரு இவர்கள் தமக்குள்ளே மித்திரர்களாக கேந்திர திரிகோண ஸ்தானங்களில் உச்ச, ஸ்வ க்ஷேத்திர மித்துரு க்ஷேத்திரங்களை பெற்று பாவ கிரகங்களுடன் கூடி இருக்கில் சிறிது புத்திரர்கள் நாசமாகும்.

பஞ்சமஸ்தானாதிபதி குரு இவர்கள் நின்ற நக்ஷத்திரங் களிலேயானாலும் அல்லது இராசியிலேயானாலும் குரு வருகின்ற நாளிலே புத்திரோத்பத்தியாம்.

இனி அங்காரகன் வருகின்ற நாளில் கருவழிக்கும்.

குரு நின்ற இராசி-இராகு நின்ற இராசியாதிபதி உச்ச நீசமாக-நின்ற இராசி-பஞ்சம ஸ்தானாதிபதி நின்ற இராசி பஞ்சமஸ்தானம் ஆகிய இவற்றின் மாதங்கள் வரின் புத்திரரோத்பத்தி மாதங்களாம்.

இலக்கினாபதி 7-ம் இடத்திலிருந்து 9ம் இடத்தானும் 7-ல் கூடியிருக்க 2ம் இடத்தான் இலக்கினத்திலிருந்தால் புத்திர விருத்தியுண்டு.

புத்திரபாவத்தை பாவிகள் பார்த்தும் புத்திர பாவாதிபதியும் பாவகிரகத்துடன் கூடி புத்திரகாரகன் 5ம் இடத்தில் இருந்தால் புத்திரநாசம் உண்டு.

புத்திரஸ்தானாதிபதி-துர்ஸ்தானமாகிய6-8-12 இடங்களில் இருந்து குரூர கிரஹங்களால் பார்வை அடைந்தால் புத்திரகிலேசம் உண்டு.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சந்திரன் 10ம் இடத்திலும் சுக்கிரன் 7ம் இடத்திலும் பாப கிரஹங்கள் 4ம் இடத்திலும் இருக்க-இலக்கினாதிபதி புதனுடன் கூடியிருந்தால் வம்ச-க்ஷயம் தோஷம் உண்டு. பாபகிரஹங்கள் 5-8-12 இடங்களில் இருக்க ஜாதகன்-தரித் திரனும்-வம்சக்ஷய தோஷ முள்ளவனாகவும் ஆவான்.

சந்திரன்-குரு-இருவரும் கூடி இலக்கினத்திலிருக்க 7ம் இடத்தில் இலக்கினாதிபதியாவது சனியாவது இருக்க மற்ற பாபகிரஹங்களெல்லாம் 4ம் இடத்திலிருந்து 5ம் இடத்தில் சந்திரனிருந்தால் வம்சக்ஷய தோஷமாகும்.

புத்திர ஸ்தானத்தில்-புத்திராதிபனும்-இராகும் கூடி சுப திருஷ்டியில்லாதிருந்தால் ஸர்ப்ப தோஷத்தால் புத்திர சக்ஷயம் ஏற்படும்.

புத்திரஸ்தானம் புதன் வீடாகவும் சனி வீடாகவும் சனி மாந்தி கிரகத்துடன் கூடிபுத்திரஸ்தானத்தை பார்த்தாலும் அதிலிருந்தாலும் தத்துபுத்திரனுண்டாகும் 5ம் அதிபதி சுபனாகிசுபகிரஹம் சம்பந்தம் பெற்றுசுபர் வீட்டிலிருந்தாலும் ஜாதகன் புத்திமானாகவும் நீதியுள்ள வனாகவும் இருப்பான்.

இலக்கினாதிபதி பஞ்சமாதிபதிகள் மித்திரர் களானால் புத்திரர்கள் மித்துரர்கள் என்றும் சத்துருவானால் புத்திரர்கள் சத்துருக்கள் என்றும் சமத்துவமானால் சமத்துவம் என்றும் சொல்லவேண்டும்.

இலக்கினாதிபதியும் புத்திரஸ்தானாதிபதியும் ஒரு வரை ஒருவர் பார்த்தாலும் ஒருவர் வீட்டில் ஒருவர் இருந்தாலும் ஒருவர் அம்சத்தில் இருந்தாலும் ஜாதகன் தன் தகப்பனுக்கு பணிவிடை செய்வான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## பஞ்சமஸ்தானம்

புத்திரஸ்தானாதி புத்திர ஸ்தானத்திலிருந்து இலக்கனத்தை பார்த்தாலும் இலக்கினாதி புத்திரஸ்தானத்திலிருந்தாலும் சாதகன் பிதுருவாக்கிய பரிபாலனம் செய்வான்

புத்திராதிபதி தூரஸ்தானமாகிய 6, 8, 12ம் இடங்களிலிருந்து இவரை இலக்கினாதி செவ்வாய் இராகு இவர்கள் பார்த்தால் சாதகனுடைய புத்திரன் பிதாவை சதா வெறுத்து தூஷிப்பான்.

புத்தரஸ்தானம் புதன் சுக்கிரன் குரு இவர்களால் பார்க்கப்பட்டாலும் அல்லது புத்திரஸ்தானத்தில் இவர்கள் இருந்தாலும் அல்லது புத்திரஸ்தானம் இவர்கள் இடமாக இருந்தாலும் ஜாதகன் புத்திரனுடன் கூடி பித்துரு வாகயிருப்பான் மேலும் ஜாதகன் தன் புத்திரர்களுடைய உதவியினால் பிறர்களுக்கு போஜனம் முதலிய உதவி செய்வான்.

புத்திரஸ்தானாதி ஏகனாய்புதன் வீட்டிலிருப்பின் புத்திர பேறு கிடையாது. (புதனை பூஜித்தால் உண்டாகும், புத்திரஸ்தானாதிபதியை சனி பார்த்தால் மனைவி மலடியாவாள். கர்ப்பம்கரையும் அவன் உச்சனாகவும் ஸ்வக்ஷேத்திரனாகவும் இருந்தால் பலபுதல்வருண்டு ஆயினும் அவர்களுள் ஒருவனே ஜீவிப்பான்.

புத்திரஸ்தானாதிபதி பாபியோடு சேரில் புத்திர ஹானியை செய்வான் சுபனானேனும் இலக்கினாதிபதியானேனும் பார்க்கப்பட்டால் கெடுதியை செய்வான் மிதுனம் கன்னி கடகம் இவ்விராசிகளில் புத்திரஸ்தானாதிபதி நின்றால் ஜாதகனுக்கு எவ்வகை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தோஷமில்லை. ஸ்திரிபிரஜையுண்டு அதற்கும் ஓர் வகை தோஷமில்லை.

குறிப்பு:- புத்திரதோஷ முள்ளவர்கள்

நாகபிரதிஷ்டை அவிகிரஹஜபம் (பக) கோபிரதிக்ஷணம் கேதுஸ்நானம் செய்வது நல்லது.

புத்திரஸ்தானாதிபதி சூரியன் க்ஷேத்திரத்தில் (சிம்மத்தில்) இருந்தால் ஒரே பிள்ளையையுடையவனாவான். (இந்த தோஷம் நிரண்டபூஸ்திதி ஐஸ்வர்யம் உள்ள வனுக்குத்தான் ஏற்படும் மற்றவர்களுக்கு கிடையாது.

பிரதமை துவிதியை சதுர்த்தசி அமாவாசை ஆகிய இத்திதிகளில் புத்திர ஸ்தானாதிபதி சந்திரனுடன் கூடியிருந்தால் சிசு கர்ப்பத்தில் நாசமுறும் ஐந்தாமிடத்தில் க்ஷீண-சந்திரன் இருந்தால் புத்திர தோஷமுண்டு சந்திரனை பூஜிக்கவும்.

ஐந்தாம் பாவம்

குறிப்பு:- சந்தான விருத்தியையும் உற்பத்திதோஷம் இவைகளைகுறித்தும் பரிகாரங்களும் இன்னும் அநேக விஷயங்களை பலதிபிகை என்ற புஸ்தகத்தை பார்த்து பரிகாரங்கள் செய்யவும்.

முக்கியமாக நாக தோஷமுள்ளவர்கள் வீட்டிலேயே ஒருநாகர் வெள்ளியினாலோ அல்லது பஞ்சலோகத்திலோ செய்து வைத்துக் கொண்டு வெள்ளிக்கிழமை தோறும் தவறாமல் பால் அபிஷேகம் செய்து பூஜை நைவேத்தியம் செய்து 2 குழந்தைகளுக்கு ஷ பாலை கொஞ்சம் கொடுத்து தம்பதிகள் தாங்களும் இருவரும் அருந்தி ஒருவேளை சாப்பிட்டு நித்திரை செய்யுங் கால் சுவப்பணம் தெரியும் அதுவரையில் செய்யுங்கள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பிறகு விட்டு விடலாம் என்ன நடக்கிறதென்பதை அறியுங்கள் இப்படி செய்கிறவர்கள் வீட்டில் பாம்புகள் அண்டாது புத்திரர்கள் பிறந்து தம்பதிகள் சௌக்கியமாக இருப்பார்கள் சௌகரிய முள்ளவர்கள் சேதுஸ்நானமும் முருகன் தெரிசனமும் செய்யலாம். (சுபம்)

## ஆறாம் பாவம் (6-வது இடம்)

ஆறாம் பாவத்தால் சத்துருக்கள் திருடர்கள் ரோகம் ரணசிகிச்சை இவைகளை அறியலாம்.

இப்பலனை சொல்லுமிடத்து ஆறாமாதிபதி உச்சம் ஸ்வஸ்க்ஷேத்திரம் மித்ருக்ஷேத்திரங்களில் இருக்கினும் திரிகோணங்களில் இருக்கினும் ஷஷ்டாஷ்டக ஸ்தரத்தையும் அதிபதியையும், சுபகிரஹங்கள் பார்க்கினும் ஆறாமதிபதி இவர்கள் ஷஷ்டாம ஸ்தானத்தில் இருக்கினும் சம்மாதியும் கூட இருக்கினும் லக்கினாதிபதிக்கு ஷஷ்டமஸ்தானத்தில் சுபகிரகங்கள் இருக்கினும் சத்துருவாதையுண்டு.

இப்படி யிருக்கினும் சந்திரனும் பலயீனனாகயிருந்தால் அநேக ரோகங்களால் பிடிக்கபடுவான்.

அங்காரகனுடைய ஸ்வக்ஷேத்திரமான மேஷம் விருச்சிகம் ராசிகள் இலக்கனமாக அதில் செவ்வாய் சூரியன் சந்திரன் இவர்கள் கூடியிருக்கில் வாளினால் வெட்டு படுவான்.

சனி அங்காரகன் சூரியன் இவர்கள் மூவரும் கூடில் சத்திய விரணம் ஏற்படும்-

6 8 12ல் சந்திரனிருக்க இலக்கினாதிபதி அவனை பார்க்க சனி இவர்களுடன் கூடில் துர்மரணம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

6ல் சூரியனிருக்க 6க்குடையவன் பாவருடன் கூட பித்தரோகம் இந்த பிரகாரம் சந்திரனும் 6ல் இருக்க 6க்குடையவன் பாவருடன் கூட அல்லது நோக்கவாத நோய் செவ்வாய் இருக்க பித்த ரோகம் புதனிருக்க சிலேத்தும ரோகம்.

குரு இருக்க சௌக்கியம் சுக்கிரனிருக்க மூலரோகம் சனியிருக்க ஆயுள் கம்பீ இராகு கேது இருக்க பிசாக பீடை இந்த பிரகாரம் அறிக.

6ம் இடத்தை சுபகிரகங்கள் பார்க்க ஆறாமதி பதியை சுபர்கள் பார்க்க சத்துரு வாதையில்லை.

இலக்கினாதிபதி 6லிருந்து 6க்குடையவனும் ஒன்றாக கூடி பாவகிரகத்தினாலே பார்க்கப்பட்டாலும் அல்லது 12ம் இடத்தானுடன் கூடினாலும் பார்க்கப் பட்டாலும் தாயாதிகள் விரோதம்.

6க்குடையவன் குருவாக இருந்தாலும் அவனுடன் கூடினாலும் குரு வியாதியும் சத்துரு பாதையுமில்லாமல் சுகமாக இருப்பான் அநேக தாயாதிகளுடன் வசிப்பான்.

6க்குடையவனும் இலக்கினாதியும் ஒன்றாய் கூடி யிருக்க இவர்களை சனி செவ்வாய் பார்க்க தாயாதி பீடை ஆறிலே சுபரிருக்க சுபர் பார்க்க ஆறுக்குடையவன் சுப அம்சத்திலிருக்க நல்ல சுகபோஜனமுண்டாகும்.

## சப்தம ஸ்தானம் (ஏழாம் இடம்)

இதற்கு களத்திர ஸ்தானம் என்று பெயர்.

ஏழாம் பாவத்தைக் கொண்டு விவாகம் களத்திரம் பர்த்தா சம்பத்து காமம் வாசனாதி வஸ்துக்கள் போகம் விவாக காலம் இவைகளை அறியலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## ஏழாம் பாவம்

சுக்கிரன் களத்திரஸ்தானமாகிய 7ம் இடத்திலிருந்தால் ஜாதகன் அதிக காமியாக இருப்பான் புதன் இருந்தால் இதர ஸ்திரிகளிடத்தில் ஆசையுடையவனாவான் குரு இருந்தால் தன் பத்தினியிடத்தில் அதிக பிரியமாய் இருப்பான் சனி இருந்தால் பொல்லாத ஸ்திரிகளை சேருவான் இந்த சனி 7ம் இடத்தானை கூடி 7ல் இருந்தால் நல்ல பத்தினியுள்ளவன் 7ம் இடத்தில் செவ்வாய் இருந்தால் ஜாதகன் குடும்பஸ்தனாகி அநேக அன்னிய ஸ்திரிகுடும்பஸ்திரிகளின் சேர்க்கையுடன் இருப்பான். 2,6,7 இந்த ஸ்தானாதிபதிகள் மூவரும் சுக்கிரனுடன் கூடி பாபகிரக சம்பந்தப்பட்டு இலக்கினத்தில் இருந்தால் ஜாதகன் இதர ஸ்திரிகளை கூடுபவனும் துஷ்டனுமாவன்.

சுபகிரஹ பார்வையுண்டானால் சுபனாக இருப்பான்

இலக்கினாதிபதி ஷஷ்டாஷ்டமபதிகள் கூடி பாபகிரஹ சம்பந்தமாயிருந்தால் இதர ஸ்திரிகளுடன் கூடி துர்மார்கன் என்று பெயர் எடுப்பான் 7ம் இடத்தான் இராகுகேதுக்களுடன் கூடினும் பாபகிரஹ பார்வையை பெற்றாலும் சாதகன் விபசாரம் செய்வான்.

2 7 10ம் இடங்களினதிபதிகள் கூடி 10ல் இருந்தால் சாதகன் ஸ்ரீ லோலனாவான்.

2 7 10ம் அதிபதிகளில் ஒருவர் 4ம் இடத்தில் இருந்தால் சாதகன் இதரஸ்திரி சேர்க்கை அடைவான் 57ம் இடங்களுக்கதிபதிகள் வலுத்து 6ம் இடத்தானுடைய சம்பந்தம் அல்லது பார்வை பெற்றாலும் சாதகன் சந்ததி இல்லாதவனாவான்.

5 7க்கு அதிபதிகளிலொருவரை 6ம் இடத்தான் கூடினாலும் பார்த்தாலும் இவர்கள் ஒரு சுப கிரகத்தின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஏழாம் பாவம்

பார்வை அடைந்து இருந்தால் சாதகனுடைய சமுதாரத்துக்கு சோரபுத்தி ஏற்பட்டு சோர புருஷனாதி புத்திரன் பிறப்பான்.

7ம் இடத்தான் 2ல் இருக்கவும் பாப கிரகங்கள் கூடி செவ்வாய் பார்வை பெற்றாலும் சாதகனுடைய மனைவிக்கு சோர புருஷனால் சந்ததி ஏற்படும்.

5 9 7 அதிபதிகள் அசுப இடத்திலிருந்து பலவீன ராசி சுப திருஷ்டி இல்லாமலிருந்தால் சாதகனுக்கு அநேக தாரங்கள் இருந்தும் புத்திர பேறு கிடையாது.

சுக்கிரனாவது சந்திரனாவது 4ம் இடத்தில் நீசனாக இருந்தால் களத்திரன்ஹானி உண்டாகும் சப்த மாதிபாச சர்ப திரிகோணத்திலிருந்தால் மனைவி தூக்கு போட்டு கொண்டு சாவாள்.

2 7ம் இடத்ததிபர்கள் சுப க்ஷேத்திரத்திலிருந்தால் சாதகன் ஒரே தாரமுடையவனாவான்.

துவிதியதிபதி சப்தமாதிகளுடன் எத்தனை கிரஹங்கள் கூடி இருக்கிறார்களோ அத்தனை தாரம் ஜாதகனுக்கு

இலக்கினாதிபதி 8ல் இருந்தாலும் 2ம் தாரம் ஏற்படும் 7ம் இடம் பாவ கிரஹமாக இருக்க பாபியிருந்து ஏழாமதிபதி நீசனால் ஜாதகனுக்கு இரண்டு விவாஹம் நடக்கும்.

சுக்கிரன் பாவருடன் கூடி நீசராசி நீச அம்சத்திலிருந்து பாவர்கள் பார்த்தாலும் இரண்டு விவாஹம் நடக்கும்.

சப்தஸ்தானத்தையாயினும் சப்தமாதியாயினும் சுக்கிரனை யாயினும் ஆறுக்குடையவன் கூடினும் பார்த்தாலும் வழக்கு நோய் இவற்றால் களத்திரத்தை வேறு படுத்தும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## ஏழாம் பாவம்

சுக்கிரன் : சப்தமாதிபதி இவர்களுடன் கூடிய கிரஹங்கள் எத்தனையோ அத்தனை களத்திரங்கள் ஏற்படும் ஸப்தமாதிபதியும் இலக்கினாதிபதியும் மித்துருர்களானால் களத்திரம் மித்துருவாகும் சத்துருவாகில் சத்துருவாகும்.

சுக்கிரனை சப்தமத்தை சப்தமாதியை பாவகிரஹங் கள் கூடில் துவய களத்திரமாம். சுபகிரஹங்களும் பாவ கிரஹங்களும் சமனாக வலிதுபெறில் துவயகளத்திரமும் தீர்க்க களத்திரமாம்.

ஏழாமிடத்துக் குடையவனும் சுக்கிரனும் பாவ க்ஷேத்திரங்களில் பாவகிரஹங்களுடன் சேர்ந்தாலும் பார்த்தாலும் களத்திர தோஷம் களத்திரஸ்தானாதி பதிகுருவோடு கூடினாலும் விபசாரம் இராது.

குரு களத்திர ஸ்தானாதிபதியாக இருந்து புதன் சுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட்டு குரு களத்திரஸ் தானத்திலிருந்தாலும் விபசாரம் இராது பதிபக்தி அதிகமாக இருக்கும் சுக்கிரனிருக்கும் ஸ்தானதிபதியாவது இரண்டாமிடத்ததிபதியாவது அல்லது இலக்கினாதி பதியாவது 10ம் இடத்தில் இருந்தால் கலியாண மானவுடனே சகலசம்பத்துகளும் ஏற்படும்.

இலக்கினாதிபதியைக் காட்டிலும் களத்திரஸ்தானாதி பதி அதிகபலவானாக சுபகிரஹங்கள் பார்வை யிருந்தாலும் அம்சத்திலிருந்தாலும் உத்தம குணமுள்ள களத்திரம் வருவான் அப்படியில்லாமல் நீச சத்துரு பாப திருஷ்டி அடைந்தால் தரித்திரமுள்ளவனாயும் அவலக்ஷண முள்ளவனாயும் களத்திரம் வருவான்.

ஏழாமிடத்திற்கு இருபுறமும் சுபர்களிருக்க

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஏழாம் பாவம்

சரராசியிருந்தாலும் களத்திரகாரகன் சுக்கிரன் பலவானாக இருக்க களத்திர தோஷமில்லை.

ஏழாமிடத்துக் குடையவனும் சுக்கிரனும் பாப கிரஹங்களுடன் சேர்ந்தாலும் பார்த்தாலும் களத்திர தோஷம் ஏழாம் இடத்தில் சனி செவ்வாய் இராகு இருக்க கூடாது சனி இருந்தால் கிலேசம் ஏற்படும். செவ்வாய் இருந்தால் ஸ்தானங்கள் சிறுத்திருக்கும் தவிர விபசாரகுணம் ஏற்படும் இராகு இருந்தால் வீட்டில் கலகங்கள் ஏற்படும்.

இலக்கினாதிபதி களத்திரஸ்தானாதிபதி தர்ம ஸ்தானாதிபதி குரு சுக்கிரன் இவர்களில் அதிக பல வானான கிரஹகத்தின் திசை நடக்கும்போது அத்திசையில் விவாஹம் நடக்கும்.

சுக்கிரன் பாபிகளுடன் கூடி 5-7-9ல் இருந்தால் அழகிழந்த களத்திரம் ஏற்படும்.

சந்திரன் இவர்களுக்கு 7ல் செவ்வாய் சனி இருந்தால் களத்திர தோஷம் புத்திரதோஷம் ஏற்படும்.

4ல், 7ல், 11ல் 2 கிரஹங்களிருந்தால் இரண்டு களத்திரம் சொல்லவும்.

7க்குடையவன் சுக்கிரன் இவர்கள் இரட்டை ராசியில் இருந்தால் இரண்டுகளத்திரம் சொல்லவும்,

## களத்திரனை வெறுக்கிறவன்

7ல் பாபரும் 7க்குடையவன் பாபருடன் கூடியும் இலக்கினேசன் பலம் இல்லாதவனாக இருந்தால்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஏழாம் பாவம்

எப்போதும் களத்திரத்தை தூஷித்துக் கொண்டே வெறுப்பான்.

ஏழாம் இடத்ததிபதி 12ம் இராசியை அடைந் தாலும் களத்திரதோஷம் ஏற்படும் நீச ராசியில் களத்திர ஸ்தானதிபதியிருந்து சுக்கிரன் அஷ்டமத்திலிருந் தாலும் களத்திரகண்டம் ஏற்படும் நீச ராசியில் இலக்கினாதிபதியிருந்து ஏழுக்குடையவன் 8ல் இருந்தாலும் களத்திர கண்டம் ஏற்படும்.

## விவாஹ காலம்

சுக்கிரன் இலக்கினாதிபதியாய் கேந்திரத்தையாவது இலக்கினாதிபதி சனி இராசியை அடைந்து வந்திருந்தால் பாலிய விவாஹம் ஏற்படும்.

ஏழாமிடத்ததிபதி லாபத்திலும் இலக்கினாதிபதி 10ல் இருந்தாலும் பாலியவிவாஹம் ஆகும்.

அஷ்டம் இராசிக்கு ஏழாம் இராசியில் சுக்கிரனிருந்து அந்த அதிபதி செவ்வாயோடு சேர்ந்து இருந்தால் தக்கவயதில் விவாஹம் ஏற்படும்.

எட்டாமிடத்ததிபதியாவது இலக்கினாதிபதியாவது இலக்கினத்தில் சுக்கிரனுடன் சேர்ந்தால் பாலியவிவாஹம் ஏற்படும்.

எட்டுக்குடையவன் இலக்கினத்தில் இருந்தால் அதிபாலியத்தில் துவிதிய களத்திரம் விவாஹம் ஏற்பட்டு தக்க வயதில் மறுதாரம் விவாஹம் ஏற்படும்.

இலக்கினம் குடும்பஸ்தானம் பாக்கிய ஸ்தானம் களத்திரஸ்தானம் இவைகளில் ஏதாவது பாபகிரஹங்கள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## ஏழாம் பாவம் (விவாஹ காலம்)

சேர்ந்தாலும் இருந்தாலும் குருகிரஹ அம்சம் அடைந்திருந்தாலும் பாப கிரஹங்களால் பார்க்கப் பட்டாலும் இரு புறங்களில் பாப கிரஹங்கள் இருந்தாலும் குரு சுக்கிரன் புதன் இவர்களில் யாராவது ஒருவர் பார்வை ஏற்பட்டால் காலஞ்சென்று விவாஹமாகும்.

ஏழாமிடத்து கிரகம் அவ்விடத்ததிபன் சுக்கிரன் ஆகிய இவர்களின் இராசிக்குரிய திக்கு களத்திரம் இருக்கும் திக்கு அல்லது திசை இலக்கினாதிபதி சப்தமாதி இவர்கள் இலக்கினாதிபதி இருக்கிற ராசிக்கு வரும் போதாவது அல்லது திருகோண ராசிக்கு வரும்போது விவாஹம் நடக்கும்.

களத்திரஸ்தானத்திலிருக்கிரவர் அந்தானத்தை பார்க்கிறவர் அல்லது களத்திர ஸ்தானாதிபதி ஆகிய இவர்களின் திசை வரும்போது இலக்கினாதிபதி கோசார ரீதியாக களத்திர ஸ்தானத்திற்கு வரும்போது விவாஹம் ஏற்படும்.

களத்திர ஸ்தானாதிபதி சுக்கிரன் இலக்கினாதிபதி இவர்கள் நிற்கும் இராசியை குரு அடைந்தாலும் அல்லது பார்த்தாலும் கோசார ரீதியாய் குரு 7ம் இடம் வரும் போது விவாஹம் பிராப்தி ஏற்படும்.

சுக்கிரன் இருக்கும் இராசிக்கு 8ம் வீட்டிற்கதிபதி இருக்கிற இராசிநாதன் எவ்விராசியிலிருக்கிறாரோ அவ்விராசியே களத்திர (பிறந்த இடம்) ஜன்மித்த இடம்.

7க்குடையவன் சுக்கிரன் இவர்கள் இரட்டை இராசி யிலிருந்தால் இரண்டு களத்திரம் சொல்லலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## ஏழாம் பாவம் (விவாஹ காலம்)

7க்கு அதிபன் சுக்கிரன் இவர்களோடு கூடிய கிரகங்களை கொண்டு களத்திர சங்கியை சொல்லவும் 2ம் அதிபதி 7ம் அதிபதி திரிகோணகேந்திரங்களில் நின்று மித்திரர்களாக பிறந்தவர் நல்ல பெண் சாதியை அடைவர்.

7ம் அதிபதி சூரியனிருந்தால் பாபமனைவியை மணப்பர் 7ல் சுக்கிரனிருந்தால் நல்ல மனைவி 7ல் சந்திரனிருக்க 11 12ல் குரு இருக்க அநேக களத்திரங்களை மணந்து சுக ஜீவியாக இருப்பர் இலக்கினாதி நின்ற அங்கிசத்தில் குரு வருங்காலத்தில் விவாஹம் உண்டாகும். ஏழுக்கதிபன் நின்ற அம்சத்தில் குரு வருங்காலத்தில் விவாஹம் நடக்கும். ஏழுக்கதிபன் பாபர் வீட்டில் நிற்கில் அல்லது பார்க்கில் தூரதேசத்தில் விவாஹம் நடக்கும். சுபர் அங்கிசத்தில் நிற்க சமீபத்தில் நடக்கும்.

ஏழுக்கதிபன் சூரியனாகில் கிழக்குதிசை சுக்கிரனாகில் வன்னி அக்கினி திசை செவ்வாயாகில் தெற்கு இராகுகேது நிருதி சனியாகில் மேற்கு சந்திரனாகில் வாயுதிசை புதனாகில் வடக்குதிசை குருவாகில் ஈசான்ய திசையில் களத்திரம் வரும்.

ஏழாம் இடத்து கிரஹம் 7க்கு அதிபன் சுக்கிரன் ஆகிய இவர்களின் இராசிக் குறியதிக்கே களத்திர மிருக்கும் திசையாம்.

சுக்கிரனேனும் சப்தமாதியேனும் இலக்கினாதியே னும் இவர்களுடைய அதிபதியிருக்கிற இராசியில் திரிகோணத்தில் குருவருங்காலத்தில் விவாஹம் நடக்கும்.

களத்திர ஸ்தானத்திலிருக்கிறவர் அந்த ஸ்தானத்தை பார்க்கிறவர் அல்லது களத்திரஸ்தானாதிபதி ஆகிய

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இவர்கள் திசை வரும்போது இலக்கினாதிபதி கோசார ரீதியாய்களத்திர ஸ்தானத்திற்கு வரும் போது விவாஹம் நடக்கும் களத்திராதிபதியிருக்கும் இராசி நாதனும் அவனது அம்சனாதனும் சுக்கிரனும் சந்திரனும் ஆகிய இந்நால்வரில் எவர் பலம் இருந்தாரோ அவர் திசை வரும்போது விவாஹம் நடக்கும்.

சுக்கிரன் இருக்கும் இராசிக்கு 8ம் வீட்டிற்கபதியிருக்கிற இராசிநாதன் எவ்விராசியிலிருக்கிறாரோ அவ்விராசியே களத்திர ஜன்மித்த இடம்.

## எட்டாம் பாவம் (ஆயுர்பாவம்)

குறிப்பு:- ஓர்பிரஜை பிறந்தவுடன் 3 வருடம் வரையில் சாதக குறிப்பு எழுதக்கூடாது 12 வயது பரியந்தம் மனுஷ ஜன்மத்திற்கு ஆயுளை நிர்ணயம் செய்வது சாத்தியமாகாது. அகையால் ஜபம் ஹோமம் சாந்தி அவுஷாதிகளாலும் பாலர்களை சம்ரக்ஷணை செய்ய வேணும் அவர்களுடைய தாய் தகப்பன் தான் பூர்வஜன்மத்தில் செய்த தோஷங்களால் பீடைகள் குழந்தைகளுக்கு அரிஷ்டம் ஏற்படுகிறது.

ஆகலால் 12 வயது வரையில் ஜபம் ஹோமம் செய்வது உத்தமம்.

ஜன்ம லக்கினாதிபதி சூரியனுக்கு மித்துருவானால் அற்பாயுள் சமமானால் மத்தியம் ஆயுள். எட்டா மிடம் சனி லக்கினாதி அஷ்டமாதிபதி இவர்கள் நிற்கும் நிலையை அறிந்து சேர்க்கை பார்வையை நிதானித்து யோசித்து ஆயுர்பாவம் நிர்ணயம் செய்ய வேணும் பிறகு சாதக பலனை பார்க்கவேணும்,

எட்டாமிடத்தைக் கொண்டு ஆயுள் மரணம் கசும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## எட்டாம் பாவம்

துக்கம் ஜீவனம் அறிவது ஆகையால் இலக்கினாதிபதி இம்மூவரும் (இலக்கினாதி அஷ்டமாதி தசமாதி) பெலம்பெற்று இருந்தால் உத்தமவயது (120) இருவர் பெலம் பெற்றிருந்தால் அதில்பாதி (i.e 60) ஒருவர் பெலம் பெற்றிருந்தால் அதிலும்பாதி (ie 32) மூவரும் பெலம் இல்லாமல் இருந்தால் அற்பாயுள், எந்த சாதகனுக்கு கேந்திரம் திரிகோணம் அஷ்டமம் இவ்விடங்களில் பாபர்கள் இல்லாது இலக்கினாதிபதி குரு இவர்கள் கேந்திரத்திலிருப்பார்களா அந்த சாதகன் ரோகமில்லாதவனும் புண்ணிய சீலனாயும் அநேக.

சுகபோகாதிகளை அனுபவித்து 100 வயதுடன் வாழ்வான் (பலதீபிகை) சுபகிரகங்கள் கேந்திரம் பார்வை அடைந்து இருந்தால் சகல பாவ நிவர்த்தி ஆகும்.

இலக்கினாதிபதியைக் காட்டிலும் அஷ்டமாதிபதி பலவானாகி கேந்திரத்திலிருந்தால் அற்பம் ஆயுசு.

இலக்கினாதிபதியைக் காட்டிலும் அஷ்டமாதிபதி பெலம் பெற்று 2 5 8 11ல் இருந்து 8ல் பாபிகள் இருந்தால் மத்தியமாம் ஆயுசு.

இலக்கினாதிபதியைக் காட்டிலும் அஷ்டமாதிபதி பெலம் பெற்று 3 6 9 12ல் இருந்து 12ம் இடத்தில் பாபிகள் இருந்தால் சாதகன் சில சமயங்களில் உற்சாகாதியும் சந்தோஷங்களையும் சில சமயங்களில் கஷ்டங்களாலும் துக்கங்களாலும் சமனாக அடைந்து பூர்ணாயுசுடன் வாழ்வான்.

குரு சுக்கிரன் இராகு இம்மூவரில் யாராவது இலக்கினத்தில் அல்லது கேந்திரத்தில் இருந்தால் சாதகன் தீர்க்காயுளுடன் இருப்பான் சந்திரன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## எட்டாம் பாவம்

கேந்திரத்திலிருந்தால் அரிஷ்ட தோஷம் நிவர்த்தி ஆகும்.

கிருஷ்ணபக்ஷம் நடுப்பகல் சுக்லபக்ஷம் ராத்திரியில் பிறந்து சந்திரன் 6 8ல் இருந்து பாபகிரங்களினாலாவது புதனாவது பார்த்தால் எவ்வித தோஷங்களும் நிவர்த்தி ஆகும் புதனாவது.

குருவாவது ஒருவர் கேந்திரம் அடைந்து பலவனாக இருக்க பாபகிரக விக்ஷிண்யம் சம்பந்தமாவது இல்லாமலிருந்தால் அரிஷ்டம் கிடையாது.

சந்திரன் 8ல் இருந்தால் தோஷம் அந்த சந்திரனை சூரியன் நோக்கினால் தோஷமில்லை.

அஷ்டமாதிபதி 8ல் இருந்தால் (ஆட்சிபெற்று) 2ம் அதிபதி சர இராசியில் நட்பு இருந்தால் பூர்ணாயுள் பாக்கியம் ஏற்படும்.

இலக்கினாதிபதிக்கு ஆறாம் இடம் 8ம் இடம் பத்தாம் இடம் அதிபதிகள் உச்ச ஸ்வக்ஷேத்திரம் மித்துரு க்ஷேத்திரம் கேந்திரம் திரிகோணங்களிலிருக்க இக்கிரஹங்கள் ஒருவருக்கொருவர் மித்துரு கிரஹங்களாக கூடி இருக்க தீர்க்காயுள் பெற்று சுகஜீவியாக வாழ்வார்.

எட்டாம் இடத்தில் சூரியன் நிற்கில் அக்கினியால் மரணம் சந்திரன் நிற்கில் ஜலத்தால் மரணம். செவ்வாய் நிற்கில் ஆயுதத்தால் மரணம் புதன் நிற்கில் மலையிலிருந்து விழும் மரணம். இராகு கேது நின்றால் விஷம் தீண்டி மரணம்.

சுக்கிரன் நின்றால் பசியினால் மரணம் குரு நிற்கில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## எட்டாம் பாவம்

வியாதியால் மரணம் சனி நிற்கில் வயது தீர்க்கம்.

இலக்கினத்தில் சனி இருக்க இலக்கினத்திற்கு 10ல் செவ்வாய் ராகுகேது இருந்தால் சர்ப்பத்தால் மரணம் ஏற்படும்.

எட்டாமிடம் சர ராசியினால் தூரத்திலே சாவான் திரமானால் வீட்டில் உபயமானால் நடு வழியில் சாவு ஏற்படும்.

இலக்கினாதிபதி பலவானாக இராமல் குரு கேந்திர கோணம் அடைந்து சஷ்டாஷ்டமத்திலாவது இருந்தால் 50 வயது வரையில் ஜீவிப்பார்.

ஆயுள் ஸ்தனாதிபதி ஆறாமிடத்ததிபதி எட்டாமிடத்ததிபதி விறயாதிபதி இவர்கள் குரூர கிரஹங்களுடன் சேர்ந்தாவது பார்க்கப்பட்டாலும் பூர்ணாயுள் இராது எட்டாமிடத்ததிபதி பாபகிரஹங்களோடுசேர்ந்து ஷஷ்டாஷ்டம் துவாதச ராசிகளில் இலக்கினாதிபதியுடன் சேர்ந்திருந்தாலும் குறைந்த ஆயுள் இருக்கும் பிறந்த காலத்தில் இலக்கினாதிபதி திசையாவது அஷ்டமாதி திசையாவது நடந்தால் ஆயுள் பலம்குறைவு.

இலக்கினாதிபதி அஷ்டமாதிபதி சேர்ந்தால் ஜீவித்து இருக்கமாட்டார்கள் சனியிருக்கும் ராசிக்கதிபதி 8ல் இருந்தால் சனிதிசைக்குமேல் ஜீவ திசை இராது.

(1) இலக்கினாதி சர இராசியிலும் அஷ்டமாதியும் சரத்திலிருந்தால் தீர்க்காயுசு இருக்கும்.

(2) இலக்கினாதிசராயிலிருக்க அஷ்டமாதிரத்திலிருந்தால் மத்திய ஆயுசு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எட்டாம் பாவம்

(3) இலக்கினாதி சரராசிலிருக்க அஷ்டமாதி உபயத்திலிருந்தால் அற்பாயுசு.

(1) இலக்கினாதி திர ராசியிலிருக்க அஷ்டமாதியும் திரத்திலிருந்தால் அற்ப ஆயுசு.

(2) இலக்கினாதி திர ராசியிலிருக்க அஷ்டமாதி சர ராசியிலிருக்க மத்திய ஆயுசு

(3) இலக்கினாதி திர ராசியிலிருக்க அஷ்டமாதி உபய ராசியிலிருந்தால் தீர்க்காயுசு.

(1) இலக்கினாதி உபய ராசியிலிருக்க அஷ்டமாதி திரராசியிலிருந்தால் தீர்க்காயுசு

(2) இலக்கினாதி உபய ராசியிலிருக்க அஷ்டமாதி உபய ராசியிலிருந்தால் மத்திய ஆயுசு.

(3) இலக்கினாதி உபய ராசியிலிருக்க அஷ்டமாதி சர ராசியிலிருந்தால் அற்ப ஆயுசு.

இவ்விதமாக ஏற்படும்.

இலக்கினாதி பலவானாக இருக்க 6 8 12ல் பாபிகளிருக்க தீர்க்காயுசு

இலக்கனாதி திரிகோணங்களில் கேந்திரங்களில் இருக்க மித்துரு கிரகங்களும் சனியும் பார்க்க தீர்க்க வயது.

மேலும் பலதிபகையில் சொல்லியபடி

(1) இலக்கினம் சரம் சந்திர லக்கினம் சரம் தீர்காயுள்.

(2) இலக்கினம் சரம் சந்திர லக்கினம் ஸ்திரம் மத்யம ஆயுள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எட்டாம் பாவம்

(3) இலக்கினம் சரம் சந்திர லக்கினம் உபயம் அற்பாயுள்

(1) இலக்கினம் ஸ்திரம் சந்திரலக்கினம் உபயம் தீர்க்க ஆயுள்

(2) இலக்கினம் ஸ்திரம் சந்திர லக்கினம் சரம் மத்திய ஆயுள்

(3) இலக்கினம் ஸ்திரம் சந்திர லக்கனம் ஸ்திரம் அற்ப ஆயுள்

(1) இலக்கினம் உபயம் சந்திர இலக்கினம் ஸ்திரம் தீர்க்காயுள்.

(2) இலக்கினம் உபயம் சந்திர லக்கினம் உபயம் மத்திய ஆயுள்.

(3) இலக்கினம் உபயம் சந்திர லக்கினம் சரம் இவ்விதமாக அற்பாயுள் ஏற்படும்.

## ஒன்பதாம் பாவம்

இதற்கு பாக்கியஸ்தானம் பிதாவின் சுகம் என்று பெயர்.

இந்த ஸ்தானத்தை கொண்டு பிதாவின் பாக்கியம் சுகம் குரு பேரன் பேத்திகள் தயை இலாபம் தெய்வ வழிபாடு தர்மம் அம்மான் வர்க்கம் இவைகளை அறியலாம்.

ஒன்பதுக்குடையவன் நட்பு ஆட்சி உச்சம் பெற்று சூரியனும் அவ்வாறே இருக்க சூரியன் நின்ற இராசி னாதனும் திரிகோணம் கேத்திரங்களிருக்க இவர்களை சுப கிரஹங்கள் நோக்கினும் சாதகனுடைய பிதா

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஒன்பதாம் பாவம்

வெகுபாக்கி யவந்தனாய் திரக்காயுள்ளவனாக சுக ஜீவியாக வாழ்வான்.

சூரியன் ஒன்பதாமிடத்துடையான் இவர்கள் இலக்கினாதி பதிக்கு மித்துரு கிரஹங்களானால் சாதகனும் தந்தையும் உறவாக இருப்பார்கள் சத்துருக்களாகில் ஒருவருக்கொரு வர் சத்துருவாக இருப்பார்கள்.

ஒன்பதுக்குடையவன் சுபகிரஹங்களுடன் கேந்திர திரிகோணங்களில் நட்பு ஆட்சி உச்சம் பெற்று நின்றால் ஞானம் கல்வி தனம் ஒழுக்கம் பாக்கியம் பெற்று சுகமாக வாழ்வான்.

அப்படியிருக்கின்ற குரு பார்வையில்லாமல் பாவகிரஹ பார்வை பெற்றாலும் துர்பாக்கியனாய் தரத்திரமுள்ள வனாக எல்லாராலும் அவமதிப்பட்டுபவானாக இருப்பான்.

ஒன்பது இரண்டு 10 குடையவன் நட்பு ஆட்சி உச்சம் பெற்று கேந்திர கோணங்களிலிருக்கில் இராஜயோகத்தை அடைந்து ஜீவியாக இருப்பான்.

பிதாவின் ஜன்ம நக்ஷத்திரத்துக்கு 8 9 10 இந்த நக்ஷத்திரங்களில் பிறந்தவர்கள் புத்திர பௌத்திரர்களுடன் கூடி னவர்களாக தகப்பன் செய்துவந்த காரியங்களை தகப்பனுடைய இஷ்ட பிரகாரம் செய்வான்.

பிதாவின் ஜன்ம நக்ஷத்திற்கு கடைசி நக்ஷத்திரங்களும் ஆகிய மூன்று நக்ஷத்திரங்களில் ஜனித்தவன் தூரதேசவாசம் செய்பவனும் தகப்பனுக்கு துக்கத்தை உண்டுபண்ணுவனாகவும் இருப்பான். பாக்கியாதிபதி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## ஒன்பதாம் பாவம்

இலக்கினம் 9ம் இடங்களிலிருந்து உச்சனாக இருந்தால் ஜாதகன் ஸ்ரேஷ்டனாக சுகத்தை அடைவான்.

இலக்கினாதி லாபஸ்தானத்திலும் லாபாதி பாக்கியஸ் தானத்திலும் பாக்கியாதிபதி தனஸ்தானத்திலும் இருந்து தசமாதிபதி கூடியும் பார்த்தும் இருக்க ஜாதகன் மகா பாக்கியாதிபதியுடன் கூடி 9ம் இடத்திலிருக்க பாக்கியனாதன் நோக்க குரு புத்திர அதிபதியாகவும் புத்திர பாவத்திலிருக்க புத்திர பாக்கியத்தை தகப்பன் அடைவான்.

ஆறுக்குடையவன் பாக்கியத்திலும் பாக்கியாதிபதி 6லும் இருக்க பங்காளியினாலும் களத்திர ஸ்தானாதி 9ம் இடத்திலிருக்க 9க்கு குடையவன் 7ல் இருந்து களத்திர காரகனுடன் கூடியிருக்கும் பக்ஷத்தில்களத்தி ரத்தினாலும் பாக்கியத்தை சாதகன் அடைவான் புதன்உச்சி இராசியிலிருக்க பாக்கியாதிபதி பார்க்க லாபாதிபதி கேந்திரத்திலிருக்க பிறந்தவன் தான் கர்த்தாவாகிறான் லாபாதிபதி லாபத்திலிருக்க தசமாதி தானாதிபதியால் பார்வையடைய பிறந்த ஜாதகன்.

தான பாக்கியத்தை பெறுவான் தானங்களை செய்வான்.

5 இடத்தான் 9 10மிடத்துக்கு அதிபதிகளுடன் கூடி 9ல் இருந்து இலக்கினாதிபதியால் பார்க்க பிறந்த ஜாதகன் அதிக பாக்கியத்தை அடைவான். 9ம் இடத்தில் சுபரிருந்து குருவும் சம்பந்தப்பட்டு அதிபதியும் சுபர் பார்வை பெற்று மித்துரு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## ஒன்பதாம் பாவம்

பாவத்திலிருந்தால் குரு பக்தியுள்ளவனாக இருப்பான்

கேந்திரத்தில் சூரியனிருந்து அஷ்டமத்தில் பாக்கியாதிபதியிருந்தால் ஜாதகன் பிறந்த ஒருவருஷத்திற்கு மேல் தகப்பனுக்குதோஷம் பாக்கியஸ்தானத்துக்கு எட்டா மிடத்தில் இராகிருந்து சூரியன் 9வது ஸ்தானத்திற்கு ஒன்பதாவது ஸ்தானத்தில் இராகுயிருந்தால் 16வது வயதுக்கு மேல் தகப்பனுக்கு கண்டம்.

இராகுவோடு சூரியன் சேர்ந்துபாக்கியஸ்தானத்தில் சனியிருந்தால் 20 வயதில் தகப்பனுக்கு மரணம் சம்பவிக்கும்

விரயராசியில் பாக்கியதிபதியும் பாக்கிய ராசியில் விரயாதிபதியும் இருந்தால் தனக்கு 40வது வயதில் தகப்பனுக்கு கண்டம் ஏற்படலாம்.

பாக்கியாதிபதிக்கு ஏழாவது ஸ்தானத்தில் சூரியனிருந்து சூரியனுக்கு 7வது வயதுக்குள் தகப்பனுக்கு மரணம் ஏற்படலாம்.

பிதுர் ஸ்தானத்திற்கு சூரியன் அதிபதியாய் சனியோடாவது செவ்வாயோடாவது சேர்ந்திருந்தால் தகப்பன் 50 வயதுக்கு மேலிருக்க மாட்டான் ஆறு எட்டு ஒன்பது பனிரெண்டு இடங்களில் பாப கிரஹங்களிலிருந்து தர்மஸ்தானத்தில் செவ்வாயாவது சூரியனாவது இருந்தால் தகப்பனுக்கு கெண்டம்.

பிதுர்ஸ்தானாதிபதியும் இலக்கினாதிபதியும், மித்துரு வாக இருந்து சுபக்ஷேத்திரத்தில் இருந்தால் இருவரும் சுகஜீவியாக வாழ்வார்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# 10-ம் பாவம்

பத்தாம் இடம் கர்மஸ்தானம் ஜீவனஸ்தானம் கீர்த்தி ஸ்தானம் என்று பெயர்.

ஆகவே இந்த பலன்கள் இந்த பாவத்தால் சொல்லு மிடத்த நாமாதி நட்பு ஆட்சி உச்சம் பெற்றிருந்தாலும் அல்லது கேந்திர திரிகோணங்களிலிருந்தாலும் சுபர்களால் பார்க்கப்பட்டாலும் அல்லது 10ல் இருந்தாலும் சத்காரியங்களை செய்வான்.

பத்துக்குடையவன் புதனாகில் விஷ்ணு பக்தியையும் சுக்கிரனாகில் அம்பிகை பக்தியையும் குருவாகில் சிவபக்தியையும் செய்வான் பத்துக்குடையவன் செவ்வாயாகில் சுப்பிரமணிய பக்தியையும் சனியாகில் ருத்திர பக்தியையும் செய்வான் பத்தாமிடத்திபதி பகை நீசத்திலிருந்து பாபகிரகங்களுடன் கூடி சஷ்டாஷ்டகவிரயங்களில் இருந்தால் துர்கர்மங்களை செய்வான்.

பத்தாமிடத்தில் குருசுக்கிரன் புதன் கூடியிருக்க அல்லது 4ம் இடத்தில் இவர்களிருக்க இவர்கள் ஜலகிரஹங்களாக இருக்கில் கங்காதீர்த்தம் முதலிய புண்ணிய தீர்த்தங்கள் செய்வான்.

பத்தாவது வீட்டில் சூரியனாவது இராகுவாவது கேது வாவது இருக்க பிறந்த சாதகன் கெங்கா ஸ்நானம் செய்து புண்ணிய பலன் பெறுவான்.

மீனராசி 10வது பாவமாகி அதில் புதன் இருக்க அல்லது செவ்வாய் இருக்க பிறந்த சாதகன் முக்தியை அடைவான்.

பூர்ண சந்திரனும் குருவும் 10 இடமும் ஜல ராசியாகி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பத்தாம் பாவம்

அதிலிருக்க பிறந்த சாதகன் கெங்கா ஸ்நானம் செய்வான்

புதன் 10ம் இடத்ததிபதியுடன் கூடி 10ல் இருந்தால் பழைய தேவாலயங்களை ஜீர்ணோத்தாரணமாக கட்டுவிப்பான்.

இலக்கினாதி 10ல் இருந்து 10மிடத்ததிபதி 9ல் பாபி களை கூடாமல் சுப பார்வை பெற்று சுப கிரஹ சம்பந்த மிருந்தால் சாதகன் நல்ல யக்கிய கர்த்தாவாக விளங்குவான்.

பத்தாமிடத்ததிபதி இலக்கினாதிபதி பஞ்சமாதி இவர்கள் வலிது பெற்று பத்தாமிடம் சுத்தமாயிருக்க வாக்கு ஸ்தானதிபதி வலிது பெறில் சன்னியாசியாவான்.

## ஜீவன பாவம்

சூரியனுக்கு 10ல் சந்திரனுக்கு 10ல் அல்லது லக்கினத்துக்கு 10ம் இடத்தில் நிற்கும் கிரஹங்களினாலும் அல்லது 10ம் அதிபதியின் காரகத்தினாலும் அல்லது 10ம் அதிபதி எந்த ராசியில் நிற்கிறானோ அவனுடைய காரகத்தின் வலிதை அறிந்து தொழில் ஜீவனம் சொல்லவும் அதவாது.

(1) சூரியனாகில் Government கவர்மெண்டு

(2) சந்திரனாகில் Agricultural விவசாயம்

(3) செவ்வாய் அக்கினி சம்பந்தமான உத்தியோகம் அதாவது மெகானிகல் ரயில்வே எலக்டிரிக் ese

(4) புதனாகில் வித்தை உபாத்தியாயர் வியாபாரம் தொழில்

(5) குருவால் பீடம் குரு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

## பத்தாம் பாவம்

(6) சுக்கிரனால் தனம் பாங்கி பால் ரயில்வே கஜானா தொழில்

(7) சனியால் விவசாயம் தொழில் வியாபாரம் தொழில் (servant) ese

ஷை கிரஹங்கள் கடபஸ்தானங்களில் நின்றால் அவரவர்கள் திசையில் உத்தியோகத்தை அல்லது தொழிலை கொடுப்பார்கள்.

சூரியன் இலக்கினாதிபதி சந்திரன் இவர்களில் எவரேனும் வலிது பெற்று 10ல் இருந்து சுப பார்வை பெற்றாலும் அல்லது 10ம் இடத்ததிபதியின் காலால் (அதிகாரம்) அவரவர்கள் ஜீவனத்தை கொடுப்பார்கள் பத்தாமிடத்ததிபதி சூரியனானால் பிதுர் சொத்தாலும் வியாபாரத்தினாலும் கவர்ன்மெண்டு உத்தியோகத்தாலும் சந்திரனால் ஸ்திரீ மாதுர் தொழிலாலும் ஜீவிப்பான்.

பத்தாமிடத்ததிபதி செவ்வாயாகில் வேளாண்மை தொழில் பூமிபிராத்துரு தனம் இவைகளாலும் புதனாகில் சோதிட சாஸ்திரம் புரோகிதம் பாடுதல் இவற்றாலும் ஜீவிப்பான். குருவாகில் இராஜசன்மானம் பந்துக்கள் சொத்தாலும் புராணம் நிதி இவற்றாலும் சுக்கிரனாகில் நவ கல் ரத்தினம் வியாபாரம் களத்திர தனத்தினாலும் சனியாகில் வஞ்சகம் கலகம் முதலிய துர்கமங்களால் செய்து ஜீவிப்பான். ஜன்மலக்கினத்திற்கும் சந்திரன் லக்கினத்திற்கும் 10ல் நிற்கும் சூரியாதி கிரஹங்களினால் அவரவர்களுக்கு தகுந்தபடி தனம் பிராப்தி அடைவார்கள். இப்படி சொல்லிய பலன்களெல்லாம் அந்தந்த கிரஹதிசை புத்திகாலங்களில் உண்டாகும் பத்தாமிடத்தில் ஒரு கிரஹங்களும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இல்லாமலிருந்தால் சூரியனுக்கும் சந்திரனுக்கும் இலக்கினத்திற்கும் பெலம் அதிகம் எதுவோ அதற்கு 10ம் பாவாதி பதியின் ஜீவனம் கிடைக்கும்.

## 11ம் பாவம் (லாபஸ்தானம்)

பதினோராம் பாவம் இடம் இலாபம் வருமானம் ஜ்யேஷ்ட சகோதரர் இவர்களைப்பற்றி அறியலாம் ஆகையினால் இலாபாதி நட்பு ஆட்சி உச்சம் கேந்திரம் திரிகோணம் இந்த ஸ்தானங்களில் இருந்து சுபர் பார்வை பெற்றால் தனம் லாபம் ஏற்படும்.

பத்துக்குடையவன் சுபனால் 11ம் இடத்தானை கூடியும் அல்லது பார்த்தும் இருந்து 12ம் இடத்தான் உச்சன் மித்துரு வீட்டிலிருந்தால் ஜாதகன் தனம் நற்காரியத்தில் செலவிடுவான்.

இரண்டு நான்குக்குடையவன் நட்பு பெற்று சுபஸ்தானத்தில் இருந்து லாபாதிபதியால் பார்க்கப்பட்டாலும் தனப்பிராப்தி ஏற்படும்.

இலாபாதி தானாதிபதி இவர்கள் நிற்கும் திசையிலிருந்து தனப்பிராப்தி உண்டாகும்.

11ம் இடத்துக்குடையவன்பாபகிரஹசம்பந்தம் பெற்றிருந்தால் காதுக்கு ஆபரணம் ஒன்றுமில்லை.

11ம் பாவம் பாபிகள் சம்பந்தமும் பாபர்கள் பார்வையும் பெற்றிருந்தாலும் 12ம் பாவாதியும் அப்படியே இருந்தால் தரித்திரனாயும்ஜேஷ்ட சகோதரர்களுக்கு ஹானியும் உண்டாக்குவான்.

11ம் பாவத்தில் குரு சுக்கிரன் புதன் எவரேனும் இருந்து சுபஸ்தானமாக இருந்தால் நல்ல லாபம் கிடைக்கும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## 12ம் பாவம் (விரயஸ்தானம்)

பனிரெண்டாம் பாவத்தினால் சகல வித நஷ்டம் விரயம் சரீரபங்கம் நேத்திரம் பாதம் சயனசுகம் இவைகளை அறிவது ஆகவே இந்த பாவத்திற் குடையவன் சுபகிரஹங்களுடன் கூடி நட்புபெற்று கேந்திர திரிகோணங்களில் இருந்தால் இவன் அதிக ஐஸ்வர்யமுடையவனாகவும் பாக்கியமுள்ள வனாகவும் இருப்பான்.

12க்குடையவன் குரூரதிருஷ்டி பெற்று பகை க்ஷேத்திரத்தில் இருந்தால் தரித்திரம் அடைவான் விரயம் அதி கரிக்கும்.

12ம் இடத்தில் புதன் சுக்கிரன் குரு இருந்தால் ஜாதக னுக்கு நல்ல வாகனம் கிடைக்கும்.

சயனஸ்தானமாகிய 12ம் இடத்தில் சுபகிரஹன் இருந்தாலும் அதிபதியை சுபர் கூடினாலும் பார்த்தாலும் விசேஷமான சயனம் மஞ்சம் கிடைக்கும் அதில் படுத்து சுகம் அடைவான்.

விரயஸ்தானமாவது அல்லது அதிபதியாவது பாப கிரஹ சம்பந்தம் பெற்றாலும் அல்லது பார்வையடை ந்தாவது இருந்தால் சயன சுகமில்லை.

பாபகிரஹசம்பந்தம் இல்லாமல் சந்திரன் 12ல் இருந்தால் சுகம் ஏற்படும்.

### பனிரெண்டாம் பாவம் யோகபலன்

பஞ்சமஸ்தானத்தில் எந்த கிரஹங்கள் இருக்கின்றன வோ அல்லது ஷெ ஸ்தானத்தை எந்த கிரஹங்கள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பன்னிரெண்டாம் பாவம்

பார்க்கின்றனவோ அந்த கிரஹங்களின் உபாசனையை பெறுவான்.

இலக்கினாதிபதி பஞ்சமாதிபன் மித்திரனானால் ஜாதகனுக்கு உபாசனை தேவதை மித்திரமாகும் சத்துருவாகிய சத்துருவாகும் சமமாக இருந்தால் சமமாகும் பனிரெண்டு குடையவன் சூரியனாகில் பிராமணர்கள் விஷயத்திலும் இராஜாக்கள் விஷயத்திலும் தனத்தை செலவிடுவான். சந்திரனாகில் இர்ராஜாக்கள் விஷயத்திலும் செவ்வாய் வலிது பெறில் சகோதரர் விஷயத்திலும் பந்து ஜன்ம விஷயத்திலும் புதனாகில் வித்வஜனம் தவசிகள் விஷயத்திலும் குரு வாகில் சத்திய விஷயத்திலும் சுக்கிரனாகில் கூத்திவிஷயத் திலும் சனியாகில் நீசஜன சகவாசத்தில் தனத்தை விரயம் செய்வான். குரு 12ம் இடத்திலும் சனி சூரியன் 3ம் இடத்தான் இவர்களில் யாராவதொரு கிரஹம் லாபத்திலிருக்க குருவுக்கு 12 மிடத்தில் இலக்கினாதி பதியிருக்க பிறந்த ஜாதகன் ராஜர்களுக்கு ராஜனாவான்.

ஜன்ம காலத்தில் கிரஹங்களெல்லாம் இலக்கின முதல் 6வது இராசிக்குள் இருக்கும்போது சந்திரனை பாக்கியாதிபதி பார்த்திருக்க பிரபுவான்.

குரு லக்கினத்திலும் புதன் கேந்திரத்திலும் இருக்க இவர்களைபாக்கியாதிபதியாவது லாபாதிபதியாவது பார்த்து இருந்தால் ஜாதகன் ராஜதுல்லியனாவான்.

சனிகேந்திரத்திலாவது கோணத்திலாவது உச்சத்திலா வது அல்லது மூலதிரிகோணத்திலோ இருந்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## பன்னிரெண்டாம் பாவம்

நசமாதி யினால் பார்க்கப்பட்டால் ஜாதகன் ராஜயினமாவான் செவ்வாயுடன் சந்திரன் கூடி ஜன்மலக்கினத்திற்கு 2வது 3வது பாவங்களிருக்க ராகு 5ம் பாவத்தி லிருந்தாலும் ஜாதகன் ராஜ சமமானவான்.

இன்னும் அநேக விதத்தில் இராஜயோக பலன்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நான் இத்துடன் பாவ பலன்களை முற்றுபெறுகிறேன்.

முதல்பாகம் முற்றிற்று.

குறிப்பு:- ராஜயோகம், மற்ற யோகங்களும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

சீனிவாச அச்சகம், சூளை, சென்னை-112.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மாதம் ஒன்றில் மற்றொருவர் உதவியின்றி மனோ தைரியத்துடன் சோதிடம் சொல்ல கற்றுக் கொள்ளும்/நூல்

ஜாதக கணிதாரம்பமெனும்

## சோதிட ஆசான்

பிரபல சோதிட வித்வான்கள் பத்திராதிபர்கள்

நற்சாட்சி பெற்ற நூல்

ஒவ்வொருவரின் கோச்சார விதிகளும் கிரகராசிகளும் நட்சத்திர பலன்களும் கிரகங்களும் கண்டாதி கண்டங்களை பிறர் உதவியின்றி அறிந்து கொள்ளும் முறையும் விவாக பொருத்த நிமித்தங்களும், புத்திர சந்தானத்திற்கு கந்த பொருத்தங்களும் அந்தரங்களின் அரிய விஷயங்களும் மற்றும் பொருத்தமுள்ள பலவித சோதிட மர்ம விஷயங்களெல்லாம் இதில் அடங்கி யுள்ளது. இது ஒன்று இருந்தால் வேறு சோதிட புத்தகம் தேவையில்லை.

4-பாகங்கள் அடங்கியுள்ளது விலை ரூ. 100

---

## மணிகண்ட கேரள சோதிடம்

ஆதியில் ஓதிவைத்த அகத்திய மாமுனிவர் அருளிச் செய்த கேரள சோதிடத்தை இதுவரையிலும் மூலமாக இருந்ததை நித்யானந்த சோதிடர் அவர்களால் நூதனமாய் உரையும் லக்கினத்திற்குரிய சக்கரமும் வெகு விமரிசையாக தெளிவாகபதிப்பித்துள்ளோம். இது சோதிடர்களுக்கு இன்றியமையாத நூல் இதனில் அரிஷ்ட காண்டம், நலன் தீங்குகாண்டம். அற்பாயுசு காண்டம், யோக காண்டம், பலாபலக் காண்டம் தீர்க்காயுள் காண்டம் பிரதி அரிஷ்டகாண்டம், தனக் காண்டம், ரோக காண்டம், புத்திர காண்டம், சகோதர காண்டம், மாதுர் காண்டம், பிதுர் காண்டம், களத்திர காண்டம், தனாதிபல காண்டம், திசை சக்கர காண்டம், சக்கிர காண்டம், திசை பொசிப்புமாரக காண்டம் முதலிய இத்தியாதி காண்டங்களுக்கு சக்கரங்களுடன் மிக தெளிவான உரை எழுதப்பட்டு நல்ல தாளில் அச்சிட்டுயிருக்கிறது.

விலை 30

---


CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கடவுள் துணை

நந்தி தேவர் அருளிய

# சோதிட மர்மம்

(சோதிடர் உதவியின்றி கற்கும் முறை)

(இரண்டாம் பாகம்)

நூலாசிரியர்

**S. ரெங்கநாதராவ்**

ரிடையர்டு ரயில்வே கிளார்க்

181, மேலசித்திரை வீதி, ஸ்ரீரங்கம்

**சண்முகானந்தா புக் டிப்போ**

புதிய எண். 46, (பழைய எண். 67)

T.K. முதலி தெரு, சூளை,

சென்னை - 600 112.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

# சோதிட ரகசியம் என்னும்
# அனுபவ சுந்தரசேகரம்

இவ்வருமையான சோதிட நூலை சோதிட சாஸ்திர வல்லுனராகிய கே. குற்றாலம்பிள்ளை அவர்களால் சப்தரிஷிகளியற்றிய பற்பல சோதிட கணிதநூல்களை கொண்டாராய்ந்து எல்லோரும் எளிதில் உணரும்படி இயற்றியுள்ளார். இதில் நட்பாட்சி, யுத்தம், பகை, நீசம், அறியும்வகை, கிரகசாரம்சம் நட்பு பகை அறியும்வகை, ஸ்தானபலன் உணரமகாதிசைக்குப்போதகன் முதலியோர்களின் பலாபலன்கள், கிரகங்களின் பார்வைகாலம், கிரகங்களின் நோக்கும் ஸ்தானம் நட்சத்திரத்தைக்கொண்டு லக்கினம் அறிய நவக்கிரகங்களிடன் நிலையறிய கோசார வேதையறியும் விதம் கௌரி பஞ்சாங்கம், வருட பலன், மாதபலன், வாரப்பலன், தினப்பலன், தாராபலன், முதலியவையறியும் வகை, மனைநூல் பார்க்கும்வகை மற்றும் பற்பல சோதிட கணித நுட்பங்கள் இதில் மிக தெளிவாக கூறப்பட்டிருக்கிறது.

இரண்டு பாகங்கள் அடங்கியது விலை ரூ. 60-00

ஜாதக ரகசிய சேகரம் என்னும்

# சோதிட அரிச்சுவடி

இந்நூலின் சிறந்த அம்சமானது கிரகசார சக்கரத்துடன் கூடியதும் சோதிடரன்றி சாதாரணமான வர்களும் சுலபமாக தெரிந்து கொள்ளுவதற்காகவும் ஜாதகம் கணிக்கவும், ராசிகணிக்கவும், அஷ்டவர்க்கம் கணிக்கவும், கோசாரம். பன்னிரு ,பலா பலன்களும் திசாபுத்தி அந்தர பலன்களும், கண்ணாடிபோல் விளக்கி எழுதியிருக்கிறது இந்த ஒரு புத்தகமே சோதிடத்திற்கு போதுமானது.

இதன் விலை ரூ. 35-00

---

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy.

சண்முகானந்தா புக் டிப்போ, தூளை, சென்னை-112.

# முகவுரை

*****

திசாபுத்தி காலங்களில் கஷ்ட ஜீவனம் கோர்ட்டு விவகாரங்கள் விவாஹ சமயம் இன்னும் பலவித கஷ்டங்கள் ஏற்படும் காலங்களில் விநாயகரை நினைத்து ஜபம் செய்துவரில் கைகூடிவரும், என் அனுபவத்தை எழுதுகிறேன். இந்த ஸ்தோத்திரம் எனக்கு ஒரு மகானால் உபதேசம் கொடுக்கப்பட்டதைத் தெரிவிக்கிறேன்.

இந்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற திசாபுத்தி பலன்களை நான் அநேக சில புஸ்தகங்களை படித்து, கிரகித்து அனுபோகத்துடன் எழுதுகிறேன், இதில் ஏதாவது குற்றங்குறைகள் இருந்தால் எனக்கு தெரிவிக்க கேட்டுக் கொள்ளுகிறேன்.

அன்பன்,

**S. ரெங்கநாதராவ்,**

ரிடையர்டு, ரயில்வே கிளார்க்,
181, மேலசித்திரை வீதி,
ஸ்ரீரங்கம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஹிப்நாடிஸ மெஸ்மெரிச மென்னும்

# வாயுவேக மனோவசிய சாஸ்திரம்

இந்நூலில் உலகில்பிறர் கண்களுக்குத் தெரியாமல் உலாவும் வழியைப்பற்றியும் இறந்த பெரியோர்களுடன் எப்படி பேசுவதும் சபைதனில் விரலைக்காட்டி மற்றவர்களைத் தூங்கவைக்கும் வழியும், செல்வாக்குடன் இருக்க இந்நூல் தேவாமிர்தம் போன்றதாகும் ஜெர்மனி அமெரிக்கா ஆங்கில நாட்டார் அனுபவ நூல் சித்திரப் படங்களுடன் இந்நூல் வாசித்து வந்தால் இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலங்களில் நடக்கும், ஒவ்வொரு விஷயமும் முன்னோர்களுடன் பேசவும் ஞானதிருஷ்டி நோக்கம், முதலியவைகளை வாசித்து தெரிந்துக் கொள்ளலாம். இதன் விலை ரூ. 60-00

---

# ஆதிசாமுத்ரீகம் என்னும் அவயலக்ஷண சாஸ்திரம்

அருமையான இச்சாஸ்திரத்தின் கருத்தை ஸமஸ்கிருத பாஷையிலிருந்து உலோகத்துக்குத் தக்க தமிழ் அர்த்தமாக இச்சாஸ்திரத்தை அச்சிடப்பட்டிருக்கிறது. இச்சாஸ்திரத்தை பார்த்தவுடனே தன் ஜீவ திசை, மரணகாலம், லாபம், நஷ்டம், சுகம் துக்கம் இவை முதலான எல்லா பாக்கியமும் தெரிந்து கொள்ளுவதற்கு இது ஆதாரம் என்பதில் சந்தேகம் வேண்டாம். நீங்கள் ஒருவரை பார்த்தமாத்திரத்தில் அவருடைய குணங்களையும், அவரின் நடையால் இவர் இத்தகையர் என்றும் அன்னாரின் குரலால் இவர் குணம் இம்மாதிரியது என்றும் உரைக்க விரும்புகிறீர்களா? இன்றே இந்நூலை வாங்குங்கள். விலை ரூ. 20-00

---

**சண்முகானந்தா புக் டிப்போ**

குளை. சென்னை - 600 112.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஸ்ரீ

நந்தி தேவர் அருளிய

# சோதிட மர்மம்

## (இரண்டாம் பாகம்)



## கணபதி ஸ்தோத்திரம்

ஓம்

சிவா - குருவான (மு)
குருநாதன் வான (மு)
எந்தன் வான (மு)
எவ்வானை மறந்தாலும்
விக்கினேஸ்வரரை நான்மறவேன்
ஓம் கணபதி-மஹாகணபதி
வல்ல மனோகரா
நான் நினைத்த காரியம்
அனுகூல சித்தியாக வேணும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# திசாபுத்திகளில் குறிக்கப்படும் இடங்கள் அல்லது ஸ்தானங்கள்

குறிப்பு :- கிரஹங்களின்-நட்பு-பகை-சமம் இவைகளை முதல் புத்தகத்தில் குறிக்கப்பட்டிருக்கிற அட்டவணையை பார்க்கவும்.

கேந்திரம் : 1 - 4 - 7-10 ஸ்தானங்கள் or இடம்

கோணம் அல்லது திரிகோணம் } 1-5-9 ஸ்தானம் or இடம்

விய or விரய 12-ம் ஸ்தானம் or இடம்

லாபஸ்தானம்-11ம் ஸ்தானம் or இடம்

மாரகஸ்தானம்-3-8-12ம் ஸ்தானம் or இடம்

துர்ஸ்தானம்-3-6-8-12ம் ஸ்தானம் or இடம்

சயனஸ்தானம்-12-ம் ஸ்தானம் or இடம்

2-7ம் இடம் அதிக மாரகஸ்தானம்

பார்வைஸ்தானம் 1-5-7-8-9 ஸ்தானம் or இடம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# திசாபுக்தி - அதற்குரிய வருஷங்கள்

**1. கார்த்திகை உத்தரம் உத்திராடம்**
**சூர்ய திசை வரு 6**

| புக்தி | வரு | மா | நாள் | மொத்தம் வரு | மொத்தம் மா | மொத்தம் நாள் |
|---|---|---|---|---|---|---|
| சூர்ய | 0 | 3 | 18 | 0 | 3 | 18 |
| சந்திர | 0 | 6 | 0 | 0 | 9 | 18 |
| குஜன் | 0 | 4 | 6 | 1 | 1 | 24 |
| ராகு | 0 | 10 | 24 | 2 | 0 | 18 |
| குரு | 0 | 9 | 18 | 2 | 10 | 6 |
| சனி | 0 | 11 | 12 | 3 | 9 | 18 |
| புதன் | 0 | 10 | 6 | 4 | 7 | 24 |
| கேது | 0 | 4 | 6 | 5 | 0 | 0 |
| சுக்ர | 1 | 0 | 0 | 6 | 0 | 0 |

**2. ரோகிணி ஹஸ்தம் திருவோணம்**
**சந்திர திசை வரு 10**

| புக்தி | வரு | மா | நாள் | மொத்தம் வரு | மொத்தம் மா | மொத்தம் நாள் |
|---|---|---|---|---|---|---|
| சந்திர | 0 | 10 | 0 | 0 | 10 | 0 |
| குஜன் | 0 | 7 | 0 | 1 | 5 | 0 |
| ராகு | 1 | 6 | 0 | 2 | 11 | 0 |
| குரு | 1 | 4 | 0 | 4 | 3 | 0 |
| சனி | 1 | 7 | 0 | 5 | 10 | 0 |
| புதன் | 1 | 5 | 0 | 7 | 3 | 0 |
| கேது | 0 | 7 | 0 | 7 | 10 | 0 |
| சுக்ர | 1 | 8 | 0 | 9 | 6 | 0 |
| சூர்ய | 0 | 6 | 0 | 10 | 0 | 0 |

**3. மிருகசீர்ஷம் சித்திரை அவிட்டம்**
**குஜ தசை வரு 7.**

| புக்தி | வரு | மா | நாள் | மொத்தம் வரு | மொத்தம் மா | மொத்தம் நாள் |
|---|---|---|---|---|---|---|
| குஜன் | 0 | 4 | 27 | 0 | 4 | 24 |
| ராகு | 1 | 0 | 18 | 1 | 5 | 15 |
| குரு | 0 | 11 | 6 | 2 | 4 | 21 |
| சனி | 1 | 1 | 9 | 3 | 6 | 0 |
| புதன் | 0 | 1 | 27 | 4 | 5 | 27 |
| கேது | 0 | 4 | 27 | 4 | 10 | 24 |
| சுக்ரன் | 1 | 2 | 0 | 6 | 0 | 24 |
| சூர்ய | 0 | 4 | 6 | 6 | 5 | 0 |
| சந்திர | 0 | 7 | 0 | 7 | 0 | 0 |

**4. திருவாதிரை ஸ்வாதி சதயம்**
**ராகு தசை வரு 18.**

| புக்தி | வரு | மா | நாள் | மொத்தம் வரு | மொத்தம் மா | மொத்தம் நாள் |
|---|---|---|---|---|---|---|
| ராகு | 2 | 8 | 2 | 2 | 8 | 12 |
| குரு | 2 | 4 | 24 | 5 | 1 | 0 |
| சனி | 2 | 10 | 6 | 7 | 11 | 12 |
| புதன் | 2 | 6 | 18 | 10 | 6 | 0 |
| கேது | 1 | 0 | 18 | 11 | 6 | 18 |
| சுக்ர | 3 | 0 | 0 | 14 | 6 | 8 |
| சூர்ய | 0 | 10 | 24 | 15 | 5 | 12 |
| சந்திர | 1 | 6 | 0 | 16 | 11 | 12 |
| குஜன் | 1 | 0 | 18 | 18 | 0 | 0 |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## 5. புனர்பூசம் விசாகம் பூரட்டாதி

குரு தசை வரு 16

| புக்தி | வரு | மா | நாள் | மொத்தம் வரு | மொத்தம் மா | மொத்தம் நாள் |
|---|---|---|---|---|---|---|
| குரு | 2 | 1 | 18 | 2 | 1 | 18 |
| சனி | 2 | 6 | 12 | 4 | 8 | 0 |
| புதன் | 2 | 3 | 6 | 6 | 11 | 6 |
| கேது | 0 | 11 | 6 | 7 | 10 | 12 |
| சுக்ர | 2 | 8 | 0 | 10 | 6 | 12 |
| சூர்ய | 0 | 9 | 18 | 11 | 4 | 0 |
| சந்திர | 1 | 4 | 0 | 12 | 8 | 0 |
| குஜன் | 0 | 11 | 6 | 13 | 7 | 6 |
| ராகு | 2 | 4 | 24 | 16 | 0 | 0 |

## 6. பூசம் அனுஷம் உத்திரட்டாதி

சனி தசை வரு 19

| புக்தி | வரு | மா | நாள் | மொத்தம் வரு | மொத்தம் மா | மொத்தம் நாள் |
|---|---|---|---|---|---|---|
| சனி | 3 | 0 | 3 | 3 | 0 | 3 |
| புதன் | 2 | 8 | 9 | 5 | 8 | 12 |
| கேது | 1 | 1 | 9 | 6 | 9 | 21 |
| சுக்ர | 3 | 2 | 0 | 9 | 11 | 21 |
| சூர்ய | 0 | 11 | 12 | 10 | 11 | 3 |
| சந்திர | 1 | 7 | 0 | 12 | 6 | 3 |
| குஜன் | 1 | 1 | 9 | 13 | 7 | 12 |
| ராகு | 2 | 10 | 6 | 16 | 5 | 18 |
| குரு | 2 | 6 | 2 | 19 | 0 | 0 |

## 7. ஆயில்யம் கேட்டை ரேவதி

புத தசை வரு 17.

| புக்தி | வரு | மா | நாள் | மொத்தம் வரு | மொத்தம் மா | மொத்தம் நாள் |
|---|---|---|---|---|---|---|
| புதன் | 2 | 4 | 27 | 2 | 4 | 27 |
| கேது | 0 | 11 | 27 | 8 | 4 | 24 |
| சுக்ரன் | 2 | 10 | 0 | 6 | 2 | 24 |
| சூர்ய | 0 | 10 | 6 | 7 | 1 | 0 |
| சந்திர | 1 | 5 | 0 | 8 | 6 | 0 |
| குஜன் | 0 | 41 | 27 | 9 | 5 | 27 |
| ராகு | 2 | 6 | 18 | 12 | 0 | 15 |
| குரு | 2 | 3 | 6 | 14 | 3 | 21 |
| சனி | 2 | 8 | 9 | 17 | 0 | 0 |

## 8. அசுவதி மகம் மூலம்

கேது தசை வரு 7.

| புக்தி | வரு | மா | நாள் | மொத்தம் வரு | மொத்தம் மா | மொத்தம் நாள் |
|---|---|---|---|---|---|---|
| கேது | 0 | 4 | 27 | 0 | 4 | 27 |
| சுக்ர | 1 | 2 | 0 | 1 | 6 | 27 |
| சூர்ய | 0 | 4 | 6 | 1 | 1 | 3 |
| சந்திர | 0 | 7 | 0 | 2 | 6 | 3 |
| குஜன் | 0 | 4 | 27 | 2 | 11 | 0 |
| ராகு | 1 | 0 | 18 | 3 | 11 | 18 |
| குரு | 0 | 11 | 6 | 4 | 10 | 24 |
| சனி | 1 | 1 | 9 | 6 | 0 | 3 |
| புதன் | 0 | 1 | 27 | 7 | 0 | 0 |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

### 9. பரணி பூரம் பூராடம்

சுக்ர திசை ௵ 20

| புத்தி | ௵ | ௴ | நாள் | மொத்தம் ௵ | மொத்தம் ௴ | மொத்தம் நாள் |
|---|---|---|---|---|---|---|
| சுக்ரன் | 3 | 4 | 0 | 3 | 4 | 0 |
| சூர்ய | 1 | 0 | 0 | 4 | 4 | 0 |
| சந்திர | 1 | 8 | 0 | 6 | 0 | 0 |
| குஜன் | 1 | 2 | 0 | 7 | 2 | 0 |
| ராகு | 3 | 0 | 0 | 10 | 2 | 0 |
| குரு | 2 | 8 | 0 | 12 | 10 | 0 |
| சனி | 3 | 2 | 0 | 16 | 0 | 0 |
| புதன் | 2 | 10 | 0 | 18 | 10 | 0 |
| கேது | 1 | 2 | 0 | 20 | 0 | 0 |

## திசாபுத்தி பிரிக்கும் வகை

ஒருவர் ஜனனமான நட்சத்திரத்தை அறிந்து அந்த நக்ஷத்திரம் முன் தேதியில் எத்தனை நாழிகைக்கு மேல் வந்திருக்கிறதென்றும் அல்லது பின் தேதியில் எத்தனை நாழிகை வரையில் இருக்கிறதென்றும் பஞ்சாங்கத்தில் கண்டறிந்து மொத்தம் சேர்ந்த தொகையே அந்தநக்ஷத்திரத்தின் ஆதியந்த பரம நாழிகை என்று சொல்லப்படும் இவ்வாறின்றி ஒரு நட்சத்திரம் ஒருநாள் பூராவும் இருந்தாலும் இருக்கும் அல்லது மறுநாள் பாதி இருந்தாலும் இருக்கும் இதை கவனித்து ஷெ ஆதியந்த பரம நாழிகையை நான்கு பங்குசெய்து ஜனனநாழிகை வரையில் எத்தனையாவது பங்கில் எத்தனை நாழிகை செல்லாயிருக்கிற தென்று தெரிந்து ஷெ நாழிகையை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கழித்து மிச்சம் செல்ல வேண்டிய நாழிகையை ஷெ நட்சத்திரத்துக்குள்ள திசை வருஷம்-மாசம்-நாளால் பெருக்கி ஆதியந்த பரமநாழி கையால் வகுத்துவரும் ஈவுதான் ஷெ திசையில் கெர்ப்பசெல் நீக்கி இருப்பு-வருஷம் மாசம்-நாள் இதற்கு உதாரணம் காண்க.

பிரேஜோத்பத்தி ஆடிமாதம் 32உ. ஞாயிற்றுக்கிழமை பகலில் பிறந்த குழந்தைக்கு திசைபுத்தி காண்பது ஷெ குழந்தை ஜனித்த முதல்நாள் அதாவது 31 தேதி பூரம் நாழிகை 56-8 போக உத்திரம் இருப்பு நாழிகை 3-52 வினாடி இருக்கிறது. குழந்தை பிறந்த நாள் 32ம் தேதி உத்திரம் நாழிகை 53-9 வினாடி இருக்கிறது ஆக மொத்தம் உத்திரம் ஆத்தியந்த பரமநாழிகை 57-1 வினாடி ஆகிறது. இதில் உத்திரம் முதல்நாள் நாழிகை 3-52ம் ஜனனமான தேதியில் ஜனன நாழிகை வரை நாழிகை 13-45 வினாடியும் கூட்டின தொகை மொத்தம் நாழிகை 17-37 வினாடிகளை கழிக்க-உத்திரத்தில் செல்ல வேண்டிய நாழிகை இருப்பு நாழிகை 39-24 வினாடி இந்த நாழிகையை குழந்தை ஜனித்த உத்திரம் நக்ஷத்திரத்துக்குள்ள சூர்யதிசை வருஷம் 6-0-0 ஆல் பெருக்கி ஆத்தியந்தம் பரம நாழிகை 51-1 வினாடி ஆல் வகுத்து வந்தது தொகை இருப்பு 4 வருஷம் இது சூரிய திசையில் இருப்பு 4-0-0 என்றறிக அதாவது:-

$$39\frac{24}{60}\times 6 \div 57\frac{1}{60}\quad 39\frac{2}{5}\times\frac{6}{57} = 4.0\text{-}0$$

. இது குழந்தை பிறந்தது சூரிய திசையில் ஆரம்பம் இருப்பு திசை-வருஷம் 4-0-0 என கணக்கு வைத்து கொண்டு இவ்வாறாக ஒவ்வொருவரும் அவரவர்கள் பிறந்த நக்ஷத்திரத்துக்கு என்னதிசை ஆரம்பத்தில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இருப்பு இருக்கிறது என்று கண்டறிந்து கொண்டு அத்துடன் பின்வருகிற வயதுக்குள்ள திசை புத்தியையும் கூட்டி அதற்குள்ள திசை புத்தி பலன்களை அறியவும்.

## திசை புத்தி வருஷம் அதற்குரிய நக்ஷத்திரங்களும்

| | |
|---|---|
| கார்த்திகை-உத்திரம்-உத்திராடம்-சூரியதிசை | வரு 6 |
| ரோஹிணி-ஹஸ்தம்-திருவோணம்-சந்திரதிசை | 10 |
| மிருகசீரம்-சித்திரை-அவிட்டம்-செவ்வாதிசை | 7 |
| திருவாதிரை-சுவாதி-சதயம்-இராகுதிசை | 18 |
| புனர்வசு விசாகம்-பூரட்டாதி-குருதிசை | 16 |
| பூசம்-அனுஷம்-உத்திரட்டாதி-சனிதிசை | 19 |
| ஆயில்யம்-கேட்டை-ரேவதி-புதன்திசை | 17 |
| மகம்-மூலம்-அசுபதி-கேதுதிசை | 7 |
| பூரம்-பூராடம்-பரணி-சுக்கிரதிசை | 20 |
| ஆக வருஷம் | 120 |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# மகாதிசைக்கு பாசக-போதக-வேதக காரர்கள் விபரம்

| கிரஹங்கள் | போதக-கள் | வேதககள் | பாசககள் | காரககள் |
|---|---|---|---|---|
| சூரியன் திசைக்கு | செவ்வா | சுக்கி | சனி | குரு |
| சந்திரன் | செவ்வா | சூரி | சுக்கி | சனி |
| செவ்வாய் | சந்திரன் | புதன் | சூரிய | சனி |
| புதன் | குரு | செவ் | சந்திர | சுக்கி |
| குரு | செவ்வா | சூரிய | சனி | சந்திர |
| சுக்கிரன் | குரு | சனி | புதன் | சூரி |
| சனி | சந்திரன் | செவ் | சுக்கி | குரு |
| இராகு கேது | - | இல்லை | - | - |

குறிப்பு:- கிரஹங்களின் மகாதிசை நடக்கும்போது போதகன் பலனை கொடுப்பான் வேதகன் கொடுக்கும் பலனை தடுப்பான் பாசகன் பலனை கூட்டி வைப்பான் காரகன் பலனை கொடுப்பான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## சூரிய திசை வருஷம் 6 இதற்கு பொதுபலன்

சூரியன் லக்கினத்துக்கு நட்பு, ஆட்சி, உச்சம் இந்த ஸ்தானங்களில் நிற்க வீட்டில் கலியாணம், ஸ்திரீசேர்க்கை பந்துக்கள் சகவாசம் நடக்கும் சூரியன், பகை நீசத்திலிருந்தாலும் பாவிகளால் பார்வை அடைந்தாலும் மனம் வருத்தம் நேரும். தவிர பிதாவுக்கு கண்டம். கன்று காலிகளுக்கு பீடை ஏற்படும்.

சூரியதிசை சூரியபுத்தி மீ 3 நாள் 18 இதற்கு பலன்

புத்தினாதன் உச்சம் நட்பு-திரிகோணம் அடைந்தால் பூமிலாபம் தனதான்ய லாபம் சரீர சௌக்கியம் சத்துருஜயம் நினைத்தகாரியம் இஷ்டசித்தி உண்டாகும். புத்தினாதன் பாபனாக இருந்தாலும் ஷடாஷடகஸ்தானத்தில் இருந்தாலும் நிரேக சாட்டியம் பீடை அக்கினி பயம் உண்டாகும்.

இந்த சூரியன் லக்கினாதிபதிக்கு 2-வது ஸ்தானத்திலாவது 7-வது ஸ்தானத்திலாவது இருக்குமானால் அபமிருத்து பீடை ஏற்படும் இதற்கு சாந்தி மிருதுயஜபம் சூரிய நமஸ்காரம் செய்ய பரிகாரம் ஏற்படும்.

சூரியதிசையில் சந்திர புத்தி மாசம் 6

இந்த சந்திரன், கேந்திர கோணங்களிலிருந்து குருவுடன் கூடினாலும் பார்க்கப்பட்டாலும் பந்துசிநேகம் விவாஹ காரியங்கள், வியாபாரத்தில் லாபம் கிரஹவிருத்தி வாகனம் உண்டாகும் சந்திரன் உச்சஸ்வஷேத்திரங்களில் இருந்தாலும் லக்கினாதிபதி சம்பந்தம் பெற்றாலும் புத்திர லாபம் களத்திர சுகம் சுபகாரியங்கள் ஏற்படும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

புத்திநாதன் திசாநாதனுக்கு :

க்ஷீணதவம் அடைந்து பாபகிரகங்களுடன் சேர்ந்திருந்தால் புத்திரகளத்திர பீடை விரோதம் ஸ்திரீகலகம் காரியபங்கம் பசு, தனதான்ய நஷ்டம் உண்டாகும் புத்திநாதன் நீசனாகவும், ஷஷ்டாஷ்டகவியத்தில் பாபகிரஹனும் சம்பந்தம் பெற்றாலும் ஜலகண்டம், மனஸ்தாபம், இடம் பெயர்தல், மாதுர் கண்டம், அல்கர்மம் அல்லது மாதுர்வகைபீடை குணபீடை உண்டாகும்

புத்திநாதன் கேந்திரங்களிலும் கோணத்திலும் சுபருடன் சேர்ந்தாலும் பார்த்தாலும் களத்திர புத்திர சௌக்கியம் விவாஹ சுபகாரியங்கள் புத்திரமித்திர சௌக்கியம் உண்டாகும்.

புத்திநாதன் சப்தம ஸ்தானத்தில் மாரகாதிபதி சம்பந்தமாயிருந்தால் சுமிருத்து தோஷம் வரும் இதற்கு பரிகாரம் வெள்ளை பசு தானம் செய்ய தீரும்

சூரியதிசையில் அங்காரக புத்தி மீ- 4-நாள் 6 பலன்

புத்திநாதன் இலக்கினத்திற்கு கேந்திரகோணம் உச்சஸ்வ க்ஷேத்திரங்களில் தனலாபம் 3-9ல் இருந்தால் பூமிலாபம் தனதான்ய விருத்தி நூதன கிரக நிர்மாணம் உண்டாகும் புத்திநாதன் இலக்கினாதிபதியுடன் கூடினால் சௌக்கியம் இராஜயோகம் உண்டாகும். அங்காரகன் திசாநாதனுக்கு 6-8-12 ஸ்தானாதிபதியுடன் கூடினாலும் பார்வை அடைந்தாலும் சத்துருபீதி: மனச்சிந்தை ராஜ தண்டனை காராகிரகபிரவேசம் பிராதுர்வர்க்கம் விரோதம் ருணகண்டம் சோரம் இவைகள் ஏற்படும் : 9-11 அதிபதியுடன் சேர்த்திருந்தால் தனலாபம் சத்துருநாசம் சௌபாக்கியம் பந்து கலியாணம் தர்சனம் [illegible]

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

புத்தினாதன் 2-7 ஸ்தானங்களில் பலவானாக பாப கிரஹ வீக்ஷிணையம் பெற்றால் சுபமிருது தோஷம் உண்டாகும் இதற்கு பரிகாரம் சுப்பிரமணியர் அபிஷேகம் ஜபம் சுவர்ண விருஷபதானம் செய்ய விலகும்.

### சூரிய திசையில் இராகு-புத்தி மீ 10 நாள் 24 இதற்கு பலன்

இலக்கினத்திற்கு கேந்திர கோணங்களில் இராகு இருந்தால் தனநாசம் சோரபீடை புத்திரோக பீடை ஏற்படும் பிற்பாடு இந்த இராகு லக்கினத்திற்கு கேந்திர திரி கோணங்களிலிருந்தாலும் அந்த ஸ்தானத்தில் சுபர் இருந்தாலும் பார்வை இருந்தாலும் தேக ஆரோக்கியம் மனச் சந்தோஷம் ராஜபிரீதி சுபங்களும் வீட்டில் உண்டாகும் புத்தினாதன் ஷஷ்டாஷ்டக வியத்தில் பாபயுக்தனாகயிருந்தால் சோர பயம். குன்மவியாதி அல்லது க்ஷயம் மரணபீடை விஷபயம் ஸ்தான சஞ்சலம் இவைகள் உண்டாகும். புத்தினாதன் துதிய சப்தமாதியுடன் கூடியாவது அந்த இடங்களில் இருந்து அவர்கள் வீக்ஷிண்யம் ஏற்பட்டாலும் சுபமித்துய தோஷம் ஏற்படும். இதற்கு பரிகாரம் ருத்திரஜபம் ஹோமம் அல்லது ஆடு அல்லது எருமை கிடாதானம் செய்ய விலகும்.

### சூரிய திசையில் குருபுத்தி மீ 9 நாள் 18 இதற்கு பலன்

இந்த குரு. தசானாதனுக்கு சுபாமஸ்ங்களிலாவது சுபஸ்தானங்களிலாவது கேந்திராதிபத்திய தோஷங்களில் லாமல், கேந்திர கோணங்களில் பலவனாகயிருந்தால் பாக்கியம்-சுகம் பரோபகார சிந்தனை தேவதா பக்தி பிதுர்வர்க்க ஜனபிரியம் வியாபார உத்தியோகங் களின் மூலம் கீர்த்தி [illegible]

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இந்த குரு தசானாதனுக்கு, 6, 8, 12 ஸ்தானங்களி லிருந்தாலும், நீச பகை ஸ்தானங்களில் சனி-செவ் ராகு இவர்களுடன் கூடினால் களத்திர புத்திர ஹானி தேக பீடை, மனக்கிலேசம், ராஜதண்டனை பந்து விரோதம் பிதுர்வர்க்க பீடை நாலுகால் ஜந்து நாசம் புத்திர விரோதம் உண்டாகும்.

இந்த குரு 2, 7ம் வீட்டுக்கு அதிபதியாக இருந்த போதிலும் பாபகிரஹங்களால் ப்பார்க்கப்பட்டால் தேக உபத்திரவம் தனம்விரயம் பந்துக்கள் பீடை உண்டாகும். இதற்கு பரிகாரம் ருத்திரஜபம் லக்ஷ்மி நாராயண பிரதிமை தானம் செய்ய விலகும்

சூரியதிசையில் சனிபுத்த மீ- 11 நாள் 12

இதற்கு பலன்

புத்தினாதன் திசானாதனுக்கு கேந்திர கோணங்களி லிருந்தால் பயம், புத்திரசோகம், பிதுர் அரிஷ்டம் உண் டாகும் திசானாதனுக்கு 6-8-12ல் இருந்தால் பாபயுக்தனா னால் புத்திரநாசம் இராஜபயம் மானபங்கம் காரியஹானி இராஜகோபம் அகாலபோஜனம் உண்டாகும் திசானாதனுக்கு லாபத்தில் உச்சமித்துருஸ் தானங்களிலிருந்து சுபனானால் கலியாணம் உண்டாகும் புத்தினாதன் 2-7க்கு உடையவனானால் அபமிருத்யுதோஷம் உண்டாகும்இதற்கு பரிகாரம் மிருத்துயு ஜபம் கருத்த எருமை தானம் கருப்பு கம்பளி தானம் செய்ய விலகும்.

சூரியதிசையில் புதன் புத்தி மீ- 10 நாள் 6க்கு பலன்

புத்தினாதன் இலக்கினத்திற்கு கேந்திரகோணங்களில் உச்சஸ்வக்ஷேத்திரங்களிலிருந்து சுபர்களுடன் கூடினால். இராச்சியலாபம் தனதான்ய விருத்தி வித்தியாலாபம் ... விருத்தி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வஸ்திர பூஷணம் லாபம் உண்டாகும். புத்திநாதன் 9-11 ஸ்தானாதிகளுடன் சேர்ந்திருக்கும் பக்ஷத்தில், வியாபார மூலியமாக தனலாபம் உண்டாகும். 9-5-10 ஸ்தானங்களில் சுபர்களுடன் கூடியிருக்கும் பக்ஷத்தில் பாக்கியலாபம், சுபகாரிய எத்தனம், பிரபு தரிசனம் ஏற்படும் புத்திநாதன் ஷஷ்டாஷ்டகவியஸ்தானங்களில் பாபகிரஹத்துடன் கூடியிருந்தாலும் பார்வை பெற்றாலும் வாத சிலேஷ்ம க்ஷயம் முதலிய ரோகங்களால் பீடையும், மனஸ்தாபம் புத்திரகளத்திர பீடை பந்தனம் இவைகள் உண்டாகும் 2-7க் குடையவனுடன் கூடினால் அல்லது அந்த ஸ்தானங்களிலிருந்தால் திரேக ஜாட்டியம் உண்டாகும் இதற்கு பரிகாரம் விஷ்ணு அர்ச்சனை, ஜபம் தீபம் செய்ய சௌக்கியம் ஏற்படும்.

சூரிய திசையில் கேதுபுத்தி மீ- 4 நாள் 6க்கு பலன்

தேகபீடை மனோவேதனை ராஜகோபம் அபவாதம் பந்து மித்துரு உபத்திரவம் உண்டாம் இந்த கேதுஷஷ்டாஷ்டக வியத்தில் பாபருடன் கூடினால் ஸ்தானபேதம் உடல் பல்வயிறு இந்த இடங்களில் பாதையும் சத்துரு பீடை பிதுர் வர்க்கபீடை ஏற்படும் இந்த கேதுலக்கனத்திற்கு புத்திர ஸ்தானத்தில் யோககாரகனுடன் சேர்ந்திருந்தாலும் சுபாம்சம் பெற்றாலும் வீட்டில் சுப காரியங்களும் களத்திர புத்திர சுகமும் உண்டாகும்.

இந்த கேது 2-7 ஸ்தானங்களில் மாரத கிரஹங்களுடன் சேர்ந்தாலும் பார்க்கப்பட்டிலும் மிருத்யு பயம் ஏற்படும் இதற்கு பரிகாரம் துர்க்கை ஜபம் தீபம் அர்ச்சனை செய்ய விலகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சூரிய திசையில் சுக்கிர புத்தி வருஷம் 1க்குபலன்

புத்திநாதன் கேந்திர கோணங்களில் இருந்தாலும் உச்ச ஸ்வக்ஷேத்திர மித்துரு க்ஷேத்திரங்களிலிருந்தாலும் பிரியமுள்ள ஸ்திரி சம்போக சுகம் கிராம பயணம் பிராமணர்கள் பிரியம் பெரியோர்கள் தரிசனம் பூமிலாபம் தனதான்ய விருத்தி வீட்டில் சுபகாரியம் இஷ்டான்ன போஜனத்துக்குறிய லாபம் வியாபார லாபம் பந்துக்கள் சிநேகம் இவைகள் உண்டாகும் இந்த சுக்கிரன் இலக்கினத்திற்கு ஷஷ்டாஷ்டக வியத்தில் பாபகிரஹம் சத்துரு கிரகங்களுடன் கூடினாலும் பார்வை பெற்றாலும் பந்து துவேஷம் இராஜகோபம் பூமி விக்கிரயம் அன்னிய கிரஹவாசம் இவைகள் உண்டாகும் 2-7 ஸ்தானங்களில் பலவானானல் மாரக கிரக பார்வை அடைந்தால் அம்மிருத்துயுதோஷம் ஏற்படும் இதற்கு பரிகாரம் மிருத்துயு ஜபம் வெள்ளாடு தானம் செய்ய விலகும்.

சந்திரதிசை 10 வருஷம்

பொதுபலன்-மாதுர் செளக்கியம் ஐஸ்வர்யம் சயன சுகம் நாற்கால் வாகனம் சுபகாரியம் உண்டாகும்.

## சந்திரதிசை 10 வருஷம்

### சந்திரபுத்தி மாசம் 10க்கு பலன்

இந்த சந்திரன் ஸ்வக்ஷேத்திரம் கேந்திர, கோணங்களில் சுயயுக்தனாய் சுபவீக்ஷண்யம் அடைந்தால் இராஜலாபம் பயிர் அபிவிருத்தி தேவதா குருபக்தி பூமிவிருத்தி தனதான்ய லாபம் உண்டாகும் இந்த சந்திரன் பாக்கிய ஸ்தானத்தில் பூர்ண பலத்துடன் இருந்தால் ஸ்திரி சயன சுகம் இராஜ ஸ்நேகம் ஏற்படும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இந்த சந்திரன் 6-8-12ல் இருந்தாலும் நீசனாக பாப யுக்தனாக இருந்தாலும் மனவியாகூலம் சரீரபீடை கோபம் ஸ்தான பரஷ்டம், தனபீடை. விரயம் பந்து பித்துரு மனஸ்தாபம் மாதுருநாசம் மானஹானி களத்திர கர்ப்பதோஷம் மாதுரு வம்ச சஞ்சலம் அரிஷ்டம் உண்டாகும்.

இந்த சந்திரன் 2,7ம் ஸ்தானாதிபாயும் பாபகிரஹங் களுடன் துர்பலத்தை அடைந்திருந்தால் தேக பீடை ருணபயம் சாஸ்தர பயம் ஏற்படும்.

## சந்திர திசையில் சந்திர புத்தி

இதற்கு பரிகாரம் மிருத்துயுஜபம்
வெள்ளைபசு தானம் செய்ய விலகும்

### சந்திர திசையில் அங்காரகபுத்தி
### மாசம் 7க்கு பலன்

இந்த அங்காரகன் இலக்கனத்திற்கு கேந்திர கோணங்களில் ஸ்வக்ஷேத்திரங்களிலிருந்தால் தேக ஆரோக்கியம் சௌபாக்கியம் வஸ்திர ஆபரணம் யத்தின காரியம் கத்தி வீடுவாசல் உண்டாகும் அங்காரகன் ஷஷ்டாஷ்டகவிரயங்களில் பாபயுக்தனாக இருந்தால் அல்லது நீசத்தில் சத்துரு க்ஷேத்திரத்திலிருந்தால் சத்துரு மங்கள் செய்தாலும் அபகீர்த்தியும் நிஷ்டூரமும் உண்டாகும் 2ம் இடத்தில் இருந்தால் தனவிரயம் ஏற்படும்.

அங்காரகன் தசானாதனுக்கு கேந்திர கோணங் களில் இலாபத்தில் பலவானாக இருப்பானானால் சௌபாக்கியம் ராஜசன்மானம் வஸ்தி ஆபரணம் லாபம் ஆரோக்கியம் யத்தினகாரியம் சித்திகரஹ நிர்மாணம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மித்துருவம்சம் விருத்தியும் வண்டி மாடு விர்த்தியும் உண்டாகும்.

இந்த அங்காரகன் சந்திரனுக்கு கேந்திர கோணங்களில் இருந்தாலும் உச்சம் சுபாம்சம் சுப சங்கமம் பெற்று பல வானாகயிருந்தால் சத்துருநாசம் வியாபாரலாபம் உத்தியோக சித்திசித்திரபுத்திரபந்து ஜெனக்கியம் ஏற்படும் அங்காரகன் 6,8,12ல் நீசனாகயிருந்தாலும் பாபகிரஹ சம்பந்தம் அல்லது வீக்ஷண்யம் அடைந்தாலும் கிரஹ பூமி நாசம் ராஜாக்கள் விரோதம் காரியகெடுதி பிராத்துருவர்க்க பீடை தனவிரயம் துஷ்ட சகவாசம் ஏற்படும்.

2.7ம் இடங்களிலிருந்தாலும் அல்லது அந்தஸ் தானாதி பதியாக மாரக கிரகத்தோடு கூடினாலும் காரிய விக்னம் மனோவியாதி துக்கம் உண்டாகும் இதற்கு பரிகாரம் சுப்பிரமணியருக்கு பூஜை அர்ச்சனை செய்ய விலகும்.

### சந்திர திசையில் குரு புத்தி
### மாசம் 16 (14)க்கு பலன்

இந்த குரு ஸ்வக்ஷேத்திர உச்ச கேந்திரகோணமித்துரு ஸ்தானங்களிலாவது சுப கிரஹங்களுடன் சேர்ந்து பல வானாக இருந்தால் வஸ்திர ஆபரணங்கள்விக்கிர்ய லாபம் சுபகாரியங்கள் நடப்பது கிரகபூமிபசு லாபங்களும் தேவாலய பிரதிஷ்டைகளும் தானதர்ம பரோபகாரமும் அபிவிர்த்தியும் தோட்டம் கிணறு திர்மாணம் பிரபு பிராமணமூலியமாக காரியசித்தியும் பந்து பிரிதியத்தன காரிய முடிவும் புத்திர உத்பத்தியும் பயிர் விருத்தியும் குருதரிசனமும் விஷ்ணு ஆலய தரிசனமும் உண்டாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இந்த குரு ஷஷ்டாஷ்டகளிய ஸ்தானங்களிலாவது சத்துரு சேஷத்திரத்திலாவது பாபகிரஹங்களுடன் கூடினவர் பலவீனனாக இருப்பானாகில் மனோ வியாதி பிதுர்வர்க்க பீடை புத்திர தோஷம் ஸ்தான சஞ்சலம் பந்து நாசம் அரசகோபம் மான பிராணஹானி அன்னிய இராம சஞ்சாரம் களத்திரதேக ஜாட்டியம் உண்டாகும்.

இந்த குரு தசாநாதனுக்கு 1, 4, 7, 10, 5, 6, 3, 11 பூர்ண பலவானாக இருந்தால் அந்த பாவாதிகளின்பலனை அடைவான். விட்டில்சுப காரியங்கள் தனசம்பத்துக்கள் தைரியம் சரீர சௌக்கியம் ராஜலாபம் வியாபார விருத்தி பந்துமித்துருக்கள் சிநேகம் வாஹன வஸ்திரலாபம் உண்டாகும்.

குரு பலவீனமாய் பாபிகளுடன் சேர்ந்து ராகுவினால் பார்க்கப்பட்டால் களத்திர தோஷம் வாதபித்த வியாதிபிதுர் கிலேசம் உண்டாகும்.

2-7 ஸ்தானங்களில் இருப்பானாகில் சுபமிருத்துயு தோஷம் உண்டாகும்.

இதற்கு பரிகாரம் சிவசகஸ்ரநாமம்பாராயணம் செய்ய விலகும்.

சந்திரதிசையில் ராகுபுத்தி
வருஷம் 1 மாதம் 6 பலன்

இந்த இராகு சுப சம்பந்தமாய் இலக்கினாதிபதியுடன் கூடியாவது கேந்திர கோணத்திலாவது உச்சத்தில் இருந்தால் புத்தி முதலில் சௌகரியமும் லாபமும் சத்துரு நாசமும் மத்தியில் சோரபயமும் உடனே மற்றராசிகளில் இருக்க தனதான்ய விருத்தியும் பிரபு விருத்தியும் மேற்கு திக்கில் ஜயமும் வாகன லாபமும் உண்டாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இந்த ராகு அங்காரகனுடன் கூடியிருந்தால் ஆயுதத்தினால் பிராண ஹானி உண்டாகும். அஷ்டமாதிபுடன் சம்பந்தம் உண்டானால் அரசுலாபம் கீர்த்தி தனலாபம் உண்டாகும்.

திசாநாதனுக்கு கேந்திரத்தில் இருந்தாலும் முன் சொன்னபடி நடக்கும் ஷஷ்டாஷ்டக வியத்தில் பாபயுக்தனாக இருந்தால் புத்திர களத்திர ஹானி கலகம் சுபமிருத்துயு வியாதி ஸ்தானபிரஷ்டம் விஷ சந்து திருடர்கள் பயம் உண்டாகும்.

2,7ம் ஸ்தானங்களில் இருந்தாலும் அந்த அதிபதிகளின் சம்பந்தம் இருந்தாலும் 'பார்த்தாலும் அஷ்டமாதிபுடன் சேர்ந்தாலும் சுபமிருத்துயு பீடை ஸ்வரம் இவைகள் உண் டாகும் இதற்கு பரிகாரம் ஆட்டு கிடாதானம் செய்யவிலகும்.

## சந்திர திசையில் சனிபுக்தி
## வருஷம் 1 மாசம் - 7க்கு பலன்

இந்த சனி லக்கினத்திற்கும் கேந்திர கோணங்களி லிருந்தாலும் ஸ்வ, க்ஷேத்திர, மித்துரு, உச்ச, லாப ராசியிலிருந்தாலும் அற்ப செனக்கியம் கொஞ்சலர்பம் பந்து துவேஷம், கிஞ்சித பயம் துக்கம், நாற்கால் பீடை, தேச சஞ்சாரம் வரும், இந்தசனி திசாநாதனுக்கு கேந்திர கோணங்களில் லாபத்துடன், உச்ச, ஸ்வ க்ஷேத்திரங்களில் 3, 6, 11ல் இருந்தால் பூமி லாபம், புத்திரலாபம் கிரஹகட்டுதலும் சுப சம்பந்தமான விஷயங்களும் இராஜசம்பாஷணையும் நினைத்த காரிய ஜயமும்கிராமாதிகாரம் பூமி சேர்க்கை ஏற்படும், ஷஷ்டாஷ்டகவியத்தில் நீச ராசியிலிருந்து சுபருடன் கூடினால் சுப பலனை கொடுப்பான், பாபருடன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கூடினால் நீச ஸ்திரி சேர்க்கை உண்டாகும், புத்திரதாரம், ரோகம், பிதா-மாதா ஹானி ஏற்படும் குன்ம வியாதியும் உண்டாகும் 2,7 அதிபதிகளுடன் கூடினால் வாதகரம் தேகத்திற்கு பிணியும் உண்டாகும் இதற்கு பரிகாரம் எருமைக்கிடா தானம் எண்ணெய் தீபம் போடவும் விலகும்.

சந்திர திசையில் புதன் பத்தி வருடம் 1 மீ 5 பலன்

இந்த புதன் கேந்திரகோணங்களில் ஸ்வஷேத்திரங்களில் தனலாப, சபஸ்தானங்களில் சுபர்களுடன் கூடியிருந்தால் வீட்டில் கலியாணங்களும் பந்து தரிசனம் வித்தியா விநோத சன்மானம் புத்திர உற்பத்தி கீர்த்தி வியாபாரமூலம் தனலாபம் ரத்தின பூஷண விக்கிரயம் லாபம் சத்துரு நாசம் காரியானு கூலம் புண்ணிய கதைகள் கேட்பதும் அன்னிய கிராம பிரயாணம் ஏற்படும். இந்த புதன் ஷஷ்டாஷ்க வியத்தில் இருந்தாலும் நீசத்திலிருந்தாலும் அஷ்டமத்தில் பாபர்களுடன் கூடினாலும் பார்த்தாலும் தேகபிணி இராஜபயம் பிராணசங்கடம் உண்டாகும். இலக்கினாதிபதியுடன் கூடினால் வந்தவுடன் சௌபாக்கியம் திரவியலாபம் இராஜபிரிதி ஏற்படும் திசானாதனுக்கு கேந்திரகோணங்களில் லாபத்தில் இருந்தால் தானதருமம் நடக்கும் ஷஷ்டாஷ்க வியத்திலிருந்தால் நோய் பிணியுண்டாகும். 2,7ம் அதிபதிகளுடன் கூடியிருந்தால் சுபமிருத்யுதோஷம் வரும். இதற்கு பரிகாரம் விஷ்ணுஜபம் தீபம் அர்ச்சனை செய்ய விலகும்.

சந்திர திசையில் கேதுபுத்தி மாசம் 7க்கு பலன்

இந்த கேது கேந்திரகோணங்களில் சுபருடன் கூடினால் அல்லது இலக்கினாதிபதியுடன் கூடி உச்சத்தில் சுப திருஷ்டி பெற்றிருந்தாலும் கலியாண சம்பத்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

விவசாயம் கூடும் இந்த ஸ்தானங்களில் பாபயுக்தனாக இருந்தால் க்ஷயரோகம் பீடை சண்டை விவ்விவகாரம் ஏற்படும். 2,7ம் அதிபதிகர்களுடன் சனியும் கூடினால் மரண முண்டாகும் இதற்கு பரிகாரம் வெள்ளி நாகர் செய்து தானம் செய்ய விலகும்.

சந்திர திசையில் சுக்கிரபுத்தி வரு 1 மீ க்கு பலன்

இந்த சுக்கிரன் இலக்கினத்திற்கு கேந்திர கோணங்களில் பலன் அடைந்து இருந்தால் இராஜ்யலாபம் கிடைக்கும் 2-4-7 லிருந்தாலும் அல்லது இவர்களுடன் கூடினாலும் பூஷணங்கள் உண்டாகும் புதையல்கள் வாகனங்கள் ஏற்படும். இஷ்டான போஜனம் நூதன வஸ்திரம் சுகந்த புஷ்பலங்கார தனமான பஞ்சணையின் பேரில் படுக்கை யும் மனதிறிஷ்டமான ஸ்திரிசங்கம் ஏற்படும். திசாநா தனுடன் கூடினால் இராச்சிய அதிகாரம் செய்வான். கிரஹத்தில் சுபகாரியங்கள் நடக்கும் மாதுர் பிதுர் சௌக்கியம் உண்டாகும் சுக்கிரன் நீசனாய் பாபயுக்தனாக யிருந்து அங்காரகன் பார்வை பெற்றால் பூமிநாசம், அலைச்சல் பெண்சாதி விசனம் இராஜதிஷ்டூரம் இவைகளுண்டாகும் சுக்கிரன் திசாதனுக்கு கேந்திர கோணங்களில் தனலாபத்திலிருப்பதால் இராஜபிரீதி தன்னுடைய ஸ்திரியால் அதிக கீர்த்தியும் சுகமும் வரும். வீடுவாசல் விருத்தி ஏற்படும் நாற்கால் ஜீவனம் விவசாயம் தனதான்ய விருத்தி பிராமண போஜனம் முதலான நற்காரியங்கள் உண்டாகும். சுக்கிரன் திசாநாதனுக்கு ஷஷ்டாஷ்டகவியத்தில் பாபயுக்தனாக இருந்தால் கலகம் பந்து துவேஷம் பரஸ்திரி போகம் சத்துருபயம் சத்துருவிருத்தி களத்திரபுத்திர ஹானி அன்னிய தேசவாசம் இராஜகோபம் உண்டாகும் 2-7 அதிபதியுடன் கூடினால் அபமிருத்துயு தோஷம் வரும் இதற்கு பரிகாரம்: ருத்திர ஜபம் வெள்ளி தானம் செய்ய [illegible]

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சந்திர திசையில் சூரியபுத்தி மீ 6-க்கு பலன்

இந்த சூரியன் கேந்திரகோண உச்சஸ்வக்ஷேத்திர மித்துரு ஸ்தானங்களில் சுப கிரகங்களுடன் கூடினாலும் இருந்தாலும் இராஜ்யபயம் பூமிலாபம் தனபிராப்தி வீட்டில் சுபகாரியம் புத்திர உற்பத்தி அதிகார விர்த்தி பந்து பிரீதி வியாபார உத்தியோகவிர்த்தி குரு தேவதா புண்ணிய க்ஷேத்திர தெரிசனம் களத்திர சௌக்கியம் உண்டாகும் இந்த சூரியன் 6-8-12 ஸ்தானங்களில் நீசனாக சத்துரு ராசியிலாவது பாப கிரஹ சம்பந்தம் ஏற்பட்டு இருந்தால் புத்திமாராட்டம் சத்துருபயம் காரியவிக்கினம் கடன்காரர்கள் உபாதியும் விக்கிரிய நஷ்டம் வெளியூர் பிரயாணங்களில் தனம் நஷ்டமும் உண்டாகும் 2, 7 ஸ்தானங்களுக்கு அதிபதிகளாக இருந்தாலும் மாரக கிரஹத்துடன் கூடினாலும் வாதபித்த ஜ்வரம் பீடை ஏற்படும் இதற்கு பரிகாரம் சிவபூஜை ஸ்வர்ண விக்கிரஹ தானம் செய்தால் ஆயுக ஆரோக்கியம் ஆயுள் விர்த்தி ஏற்படும்.

செவ்வாய் திசை 7 ௵ செவ்வாய் திசையில்
அங்காரகபுத்தி மீ 4 நாள் 27-க்கு பலன்

இந்த அங்காரகன் இலக்கினாதிபதியுடன் கூடிகேந்திர கோணத்தில் இருந்தால் கொஞ்சம் சௌக்கியம் சந்தோஷம் லக்ஷிமி கடாக்ஷம் புத்திர உற்பத்தியும் வீட்டில் சுப காரியம் பகவிருத்தி பந்துமித்துரு சிநேகம் உண்டாகும். ஸ்வக்ஷேத்திர உச்சனாக சுப புத்திராக சுபதிருஷ்டி பெற்றிருந்தால் அர்த்த லாபம் நஷ்டமான பூமி கிரகங்களும் பால் பசு தனதான்ய விருத்தியுண்டாகும். அங்காரகன் நீசன் ஷஷ்டாஷ்டக விராசிகளில் பாப கிரஹங்களுடன் கூடியிருப்பானாகில் பாபகாரியம் செய்வதிலும் ரணபாதை சோராக்கனி ஆயுதங்களால் [illegible]

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஏற்படும் அங்காரகன் 2-7 ஸ்தானங்களில் மாரகாதி பதியுடன் கூடியிருக்கும் பக்ஷத்தில் பிரணாப்பத்தான ராஜ தண்டனை பயமும் உண்டாகும் இதற்குப் பரிகாரம் சுப்பிரமணியர் பூஜை ஜபம் அர்ச்சனை உபவாசம் செய்ய விலகும்.

அங்காரக திசையில் இராகுபுத்தி
ஞ 1 நாள் 18 இதற்கு பலன்

இந்த ராகு சுப கிரஹங்களுடன் கூடி கேந்திரகோணங்களில் பலவனாக இருந்தபோதிலும் உச்சனாக இருந்த போதிலும்லாபம் களத்திரபிராப்தி புத்திர உற்பத்தி விவசாய விருத்தி கேது ஸ்தானபிராப்தி விவகாரஜயம் சத்துரு நாசம் பந்துமித்துரு பெரியோர்கள் தெரிசனம் சிநேகம் இவைகள் உண்டாகும். இதற்குப் பரிகாரம் ஷஷ்டாஷ்டகவியத்தில் நீச சத்துரு ராசியில் பாபகிரஙகளோடு சேர்த்து இருந்தாலும் பார்க்கப்பட்டாலும் ராஜுசோர நீச ஜனவிரோ தம்காரிய ஹானி விஷ சாஸ்திர பீடைகள் ஸ்திரி கலகம் காராக்கிரஹ வாசம் களத்திர விரோதம் இடமாறுதல் உண்டாகும் இந்த இராகு லக்கினத்திற்கு மாராகாதிபதி கூடினாலும்பார்க்கப் பட்டாலும் அபமிருத்துயு தோஷம் ஏற்படும் இதற்கு பரிகாரம் மிருத்துயு ஜபம் வெள்ளிநாகர் தானம் பூஜை செய்ய விலகும்.

அங்காரக திசையில் குரு புத்தி மீ- 11-நாள் 6க்குபலன்

இந்த குரு லக்கின கேந்திர கோண ஸ்தானங்களில் திசாதனாதனுடன் சேர்ந்தாவது அல்லது பார்வை பெற்றாவது இருந்தால் விவசாயம் பசு தனதான்ய சம்பத்துடன் இராஜாக்களால் பூசிக்கப்பட்டு நினைத்த காரியம் கைகூடுதலும் வீட்டில் கல்யாண வைபவங்களும் களத்திர புத்திர சௌக்கியம் உத்தியோக பிரயத்தனமும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கிரஹ நிர்மாணம் ஏற்படும் குரு ஷஷ்டாஷ்டக வியத்தில் பாபயுக்தனாக பாப திருஷ்டியுடன் இருந்தால் சத்துரு பயமும் ஸ்தான பிரஷ்டம் பந்துநாசம் சாவு வார்த்தை கேள்விஇவைகள் உண்டாகும் குரு 2-7 அதிபதிகளுடன் கூடினால் சுபமிருத்திய தோஷம் தனவிரயம் ஏற்படும். இதற்கு பரிகாரம் :- விஷ்ணு சஹஸ்ரநாமம் ஜபம் செய்ய விலகும்.

அங்காரக திசையில் சனிபுத்தி வருஷம் 1
மீ- 1 நாள் 9க்கு பலன்

இந்த சனி கேந்திர கோணங்களில் ஸ்வக்ஷேத்திரத்தில் அம்சையில் உச்சத்திலிருந்து சுபகிரஹங்களுடன் கூடினாலும் அல்லது பார்வை பெற்றாலும் களத்திர புத்திர சுகமும் வீட்டில் சுபகாரியமும் வியாபார உத்தியோக பிராப்தியும் தனலாபம் கீர்த்தி ராஜசன்மானம் தேக ஆரோக்கியம் சத்துரு ஜயம் கிரஹ நிர்மாணம் வண்டி மாடு ஆடு விக்கிரய லாபம் ஏற்படும். சனி திசையில் சனிவாரத்தில் இராஜபிரீதி சம்பத்துண்டாகும். இந்த சனி ஷஷ்டாஷ்டக விய ஸ்தானங்களிலாவது பாபகிரஹங்களுடன் சேர்ந்திருப்பானாகில் துலுக்கர் முதலிய நீச்ச சகவாசம் கலகம் உண்டாகும் வாத பித்தகரம் இடம் மாறுதல் சோரபய பீடை உண்டாகும் இந்த சனி 2,7ம் இடங்களில் பாபயுக்தனாக இருந்தால் ஜீவன ஹானி ரோகம் சத்துருநாசம் புத்திர பீடை, கைகால் நோய்கள் மாதுர்பீடை உண்டாகும் இதற்கு பரிகாரம் மிருத்யு ஜபம் என் எண்ணெய் சனிக்கு தீபம் போடவும்.

அங்காரக திசையில் புதன்புத்தி
மீ- 11 நாள் 27க்கு பலன்

இந்த [illegible] ல்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

தருமபுத்தி கீர்த்தி நீதி நன்னடத்தை இஷ்டான்ன போஜனம் வாகன பூஷணம் பகலாபம் உண்டாகும் புதன் திசானாதனுடன் கூடினால் சத்துரு விருத்தி பயம் கலகம் ஏற்படும் புதன் 2,7 அதிபதியுடன் கூடினால் வாதஸ்வேஷமாதி ரோகம் பீடை அபமிருத்துயு தோஷம் வரும் இதற்கு பரிகாரம். விஷ்ணு ஜபம் பண்ண நிவர்த்தியாகும்.

அங்காரக திசையில் கேது புத்தி

மீ- 4 நாள் 27க்கு பலன்

இந்த கேது கேந்திர கோணங்களில் சுய கேஷத்திர னால் சுபருடன் கூடினாலும் அல்லது லக்கினாதி பதியுடன் கூடினாலும் அற்ப சௌக்கியம் அற்ப பலன் லாபம் விதாவாஸ்திரி சங்கமம் களத்திர கலகம் அல்லது களத்திர வியாதி உண்டாகும் இந்த கேது 8, 12 ஸ்தானங்களில் பாப கிரகங்களோடு கூடினாலும் பார்க்கப்பட்டாலும் மாதா பிதாக்களுக்கு அரிஷ்டமும் தந்த ரோகங்களுக்கு பீடையும் சர்ப்பதோசம் விஷ சம்பந்தம் பயம் வெள்ளை குஷ்ட வியாதியும் களத்திரதோஷமாவது ராஜ ஜனவிரோதம் உண்டாகும் இந்த கேது 2,7 ஸ்தானங்களில் பாபகிரஹும் அல்லது மாரக கிரகங்களுடன் சேர்ந்தாவது பார்த்தாவது இருந்தால் அபமிருத்யு தோஷம் ஏற்படும் இதற்கு பரிகாரம் ஆட்டுக்கிடாதானம் செய்ய பரிகாரம் ஏற்படும்.

அங்காரக திசையில் சுக்கிரபுத்தி வரு 1 மீ- 2 பலன்

இந்த சுக்கிரன் கேந்திர கோண உச்சஸ்வ கேந்திர மித்துரு ஸ்தானங்களில் சுபகிரக சேர்க்கை பார்வை அடைந்து இருக்கில் பூமிலாபம் பந்து சன்மானம் தேவதா தெரிசனம் உண்டாகும் லக்கினாதிபதியோடு சேர்ந்து இருப்பானாகில் கலியாண காரியங்கள் களத்திர பிராப்தி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வியாபார லாபம் ஸ்திரி சௌக்கியம் உண்டாகும். சுக்கிரன் திசாநாதனுக்கு கேந்திர கோணங்களில் இருந்தாலும் இதே பலன் இந்த சுக்கிரன் ஷஷ்டாஷ்டக வியத்தில் இருந்தாலும் நீசனாக பாபகிரக சம்பந்தம் ஏற்பட்டாலும் ராஜதண்டனை காரியவிக்கினம் தனவிரயம் ஏற்படும் சுக்கிரன் 2,7ம் ஸ்தானங்களுக்கு அதிபதியாக மாரக கிரகத்துடன் இருக்கும் பக்ஷத்தில் தேக ஜாட்டியம் வியாதி உண்டாகும் இதற்கு பரிகாரம் துர்க்கை ஜபம் வெள்ளெருமை தானம் செய்ய விலகும்.

அங்காரகன் திசையில் சூரியபுத்தி மீ 4 நாள் 6 பலன்

இந்த சூரியன் கேந்திர கோண ஸ்வ க்ஷேத்திரங்களிலி ருந்தாலும் திசாநாதனுக்கு அப்படியேயிருந்தாலும் லக்கினாதிபதியுடன் கூடினாலும் தனதான்ய விருத்தி மனது சந்தோஷம் வஸ்திர பூஷண லாபம் முதலியது ஏற்படும் மத்தியில் சௌக்கியம் அந்தியில் விசனமும் ஏற்படும் சூரியன் திசாநாதனுக்கு கெட்ட ஸ்தானங்களில் பலஹீன கிரகங்களுடன் சேர்ந்து இருந்தாலும் அல்லது பார்வை பெற்றாலும் 2-7 ஸ்தானாதிகளுடன் கூடினாலும் எத்தனை காரியங்கள் கெடும் பயம் ரோகம் வரும் இதற்கு பரிகாரம் சூரிய ப்ரீதி நமஸ்காரம் ஜபம் செய்ய விலகும்.

அங்காரக திசையில் சந்திரபுத்தி மீ 7க்கு பலன்

இந்த சந்திரன் கேந்திர கோணம் மித்துரு ஸ்தானங்களில் இருந்தால் புண்ணிய தீர்த்த ஸ்னானம் தேவதா தெரிசனம் சௌபாக்கியம் விவாஹம் புத்திர சம்பந்து தருப சிந்தனை தடாகம் ஏற்படுத்தல் சத்தகரும்வான் செய்வான்; வீட்டில் லக்ஷ்மி கடாக்ஷம் ஏற்படும் சந்திரன் நீசம் சத்துரு ஷஷ்டாஷ்டக வியத்திலிருந்தாலும் இராஜ நிந்தனை தண்டனை பக தனதான்ய குறைவு உண்டாகும் இந்த சந்திரன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தசானாதனுக்கும் லக்கினத்திற்கும் ஷஷ்டாஷ்டகவிய நீச பாப ஸ்தானங்களில் பாபகிரஹங்களுடன் இருந்தால் சத்துரு பயம் பந்துமித்துரு கலகம் சோரஸ்திரி பீடை கலகம் வாத சிலேஷ்மாதி ரோகங்களும் உண்டாகும் சந்திரன் 2-7 அதிபதிகளுடன் கூடினால் அபமிருத்துய தோஷம் உண்டாகும். இதற்கு பரிகாரம் வெள்ளை பசு தானம் எருமை தானம் செய்ய ஆயுள் விருத்தி ஆரோக்கியம் ஏற்படும்.

இராகு திசை 18-வருஷம்
இராகு திசையில் இராகு புத்தி
ஞ 2 மீ 8 நாள் 12-க்கு பலன்

இந்த ராகு லக்கினத்திற்கு ஸ்வ சேஷத்திர உச்ச மூல திரிகோண லாப ஸ்தானங்களில் சுப பந்தனாயிருந்தால் வீடுவாசல் இலக்ஷிமி கடாக்ஷம் வீட்டில் கலியாணம் சம்பந்தம் சுப அகார விர்த்தியும் தென்மேற்கு பிரயாணங்களில் காரியானுகூலங்களும் ராஜ சன்மானம் ஜனபிரியம் உண்டாகும் மேலும் தைரியம் சுபகாரிய ஜயங்களும் ஏற்படும்.இந்த ராகு ஷஷ்டாஷ்டக விய ஸ்தானங்களில் பாப கிரகங்களுடன் சேர்ந்து பாபிகளினாலே பார்க்கப்பட்டு இருந்தாலும் நீசம் நீசராசியில் பாப கிரகங்களுடன் கூடியிருந்தாலும்சோரபாதை ருண தன பீடை இடம்விட்டு இடம் மாறுதலும் மனோ வியாகூலம் பந்தனாதி கஷ்டங்களும் மானபங்கம் களத்திர கலகமும் அல்லது களத்திரநாசம் வாத சிலேஷம் பீடை ரோகம் வியாபாரங்களில் தனவிரயம் அன்னிய தேசசஞ் சாரம் சகோதரகலகம் உண்டாகும். 2-7ம் ஸ்தானங்களில் ராகு இருந்தாலும் கேந்திர கோணங்களிலிருந்தாலும் சுபமிருத்துயு தோஷம் மாதுருநாசம் புத்திரவர்க்க ஜன அரிஷ்டம் ஸர்ப்பஜந்து பயம் ஏற்படும் இதற்கு பரிகாரம் :-

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வெள்ளிநாகர் தானம் பூஜை துர்க்காஜபம் செய்ய விலகும்.

### இராகு திசையில் குருபுத்தி ௵ 2 ௴ 4 நாள் 24

இந்த குருலக்கினத்திலிருந்து கேந்திர கோணங்களிலும் ஸ்வ க்ஷேத்திர உச்ச மித்துரு ஸ்வாம்சங்களில் சுபர்களுடன் கூடி பலவானாக இருந்தால் பூமி லாபம் விவாக சுபசோபனாதிகள் வீட்டில் நடக்கும் மேற்கு திசையில் பிரயாணமும் பந்து தெரிசனம் பிரயத்தனகாரியம் சித்தியும் புண்ணிய க்ஷேத்திரவாசம் களத்திர புத்திர சௌக்கியம் உண்டாகும். இந்த குரு திசாநாதனுக்கு துர் ஸ்தானங்களில் நீச சத்துரு ஸ்தானங்களில் இருந்தாலும் ஷஷ்டாஷ்டக வியத்தில் சத்துரு கிரகங்களுடன் கூடியிருந்தாலும் பார்வையடைந்தாலும் காரியவிக்கனம் அவமானம் களத்திர புத்திரதோஷம் மனோவியாதி ஜேஷ்ட பிராதுரு ஜனங்களுக்கு அரிஷ்டம் மாதுரு பித்துரு வியோதிக துக்கங்களும் தனவிரயம் உண்டாகும், இந்த குரு 2-7 ஸ்தானாதிபதியையும் பாப கிரகங்களுடன் சேர்ந்து பார்வை அடைந்தாலும் அபமிருத்யு தோஷமுண்டாகும். சுரம்வரும் இதற்கு பரிகாரம்:- சிவபூஜை சுவர்ண லிங்கதானம் செய்ய விலகும்.

### இராக திசையில் சனிபுத்தி ௵ 2 ௴ 10 நாள் ௬க்கு பலன்

இந்த சனிபகவான் கேந்திர கோண 11, 3ம் ஸ்தானங்களிலாவது சுபாம்ச சுபக்ஷேத்திரங்களிலாவது திசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலாவது இருப்பானாகில் வாகன பிராப்தி ராஜபிரீதி வியாபார லாபம் சுப காரியங்கள் மேற்கு தென் மேற்கு திசையில் பிர[illegible] வியாபாரம்

CC0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உண்டாகும் இந்த சனி ஷஷ்டாஷ்டக ஸ்தானங் களிலிருந்தாலும் திசாநாதனுக்கு 6,8,12ல் பாப கிரகங்களுடன் கூடியிருந்தாலும் பார்க்கப்பட்டி ருந்தாலும் களத்திர புத்திர தோஷம் விவகார காரியவிக்னம் தாயாதி ஜனங்கள் விரோதம் பயிர் நஷ்டம் மாதாபிதுரு ஜன அரிஷ்டம் ராஜகோபம் ஸ்தானபிரஷ்டம் அக்கினி ரணபீடையும் கேழ்க்காத கலகம் பிராணவார்த்தையுண்டாகும். இந்த சனி 2 7ம் ஸ்தானங்களில் மாரக கிரஹத்தோடு கூட ஆதிபத்தியம் அடைந்து பாப கிரஹங்களால் பார்க்கப்பட்டால் புத்திரஹானி அபமிருத்துயு தோஷம் உண்டாகும். இதற்கு பரிகாரம் :- விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணம் ஸ்வர்ணவிஷ்ணு பிரதிமை தானம் செய்ய சுகம் உண்டாகும்.

## இராகு திசையில் புதன்புத்தி வரு 2 மீ 6 நாள் 18க்கு பலன்

இந்த புதன் ஸ்வக்ஷேத்திர கோணம் கேந்திரங்களில் இருந்தால் வியாபார லாபம் வித்தியா லாபம் சுபசோ பனாதிகள் வீட்டில் நடக்கும், இந்த புதன் திசாநாதனுக்கு கேந்திர கோணங்களில் லாபத்தில் ஸ்வ க்ஷேத்திரத்திலும் இருந்தால் இஷ்டான்ன போஜனம் பூஷணாலிங்கம் வாகனம் விவசாய விருத்தி சுபசோபனம் சுபகிணறு ஏற் படுத்துவதும் கிராமம் பூமி வாங்குவதும் ஏற்படும். புதன் திசாநாதனுக்கு 6,8,12ல் பாபயுக்தனாக இருந்தாலும் சனி சூரியனுடன் கூடியிருந்தாலும் பார்க்கப்பட்டாலும் கலகம் துக்கம் சோர பயம் தேக ஜாட்டியம் உண்டாகும் புதன் 2-7ம் அதிபதியுடன் கூடி பாபயுக்த னாகயிருந்தால் அபமிருத்துயு தோஷம் உண்டாகும். இதற்கு பரிகாரம் :- விஷ்ணு ஜபம் அர்ச்சனை செய்தால் பரிகாரம் ஏற்படும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## இராகுதிசையில் கேதுபுத்தி ௵ 1 ௴ 0 நாள் 18-க்கு பலன்

இந்தகேது ஷஷ்டாஷ்டக வியத்தில் இருந்தால் மரணம் சம்பவிக்கும் இந்தகேது கேந்திர திரிகோணங்களில் அந்தந்த பாவாதிபதிகளோடு கூடினால் சுபமாகில் சுபமும் அசுபமானால் அசுபமும் ஏற்படும். இந்த கேது 2-7ம் ஸ்தானங்களில் மாரக கிரகத்துடன் கூடினால் சிரசு தந்த கர்ணபீடை ரோகம் உண்டாகும் இதற்கு பரிகாரம் மிருத்துயுஜபம் செய்ய உத்தமம்.

## இராகு திசையில் சுக்கிரபுத்தி வருஷம் 3 பலன்

இந்த சுக்கிரன் கேந்திர கோண லாபத்திலிருந்தால் பிராமணர் மூலமாக தனபிராப்தியும் புத்திர சௌக் கியம் இராஜயோக பலனும் உச்சனாக இருந்தாலும் ஸ்வ க்ஷேத்திரத்திலிருந்தாலும் வாகன லாபம் புத்திர களத்திர சௌக்கியம் உண்டாகும். சுக்கிரன் திசாநா தனுக்கு கேந்திர கோணத்தில் லாபத்தில் சுபருடன் கூடினால் நூதன கிரகலாபம் பந்துசிநேகிதர்கள் புத்திர லாபம் வாகன சௌக்கியம் களத்திர போக பாக்கியம் நினைத்தகாரியம் ஜயம் மேற்கு திசையில் பிரயாணம் ஏற்படும்.

இந்த சுக்கிரன் லக்கினத்துக்கும் திசாநாதனுக்கும், ஷஷ்டாஷ்டக வியத்தில், பாபயுக்தநாகயிருந்தாலும் பாப கிரகசேர்க்கை பார்வையிருந்தாலும் பிரபுக் களினால் கஷ்டம் இராஜபீடை விஷபீடை குன்ம வியாதி அகால போஜனம் தனச்சேதம்-பொருள் நஷ்டம் உண்டாகும்.

சுக்கிரன் 2, 7ம் அதிபதிகளுடன் கூடினால் சுபமிருத்துயு தோஷம் ஏற்படும் இதற்கு பரிகாரம் துர்க்கை அன்னதானம் அம்பிகை பூஜை செய்ய விலகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## இராகு திசையில் சூரியபுத்தி மீ 10 நாள் 24 இதற்கு பலன்

இந்த சூரியன் கேந்திர சுயக்ஷேத்திர உச்ச திருகோண லாபஸ்தானங்களில் சுபர்களுடன் கூடியிருந்தால் சுபாம் சம் சுபர்களுடன் கூடினாலும் திசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலிருந்தாலும் அல்பகிமாதிகாரம் தனதான்ய விருத்தியும் வாகன வஸ்திர பூஷணம் புத்திரகலியாணம் சத்துரு நாசம் பிதுர் சௌக்கியம் உண்டாகும்.

இந்த சூரியன் ஷஷ்டாஷ்டக வியஸ்தானங்களிலும் நீசஸ்தானங்களில் பாபர்களுடன் கூடினாலும் பார்வை அடைந்தாலும் ஜ்வர அதிசார ரோகம் ராஜசோரம் அக்கினிபீடை விரண ரோகம் மனோவியாதி பந்துநாசம் ராஜபீடை ஏற்படும்.

இந்த சூரியன் லக்கினத்திற்கு 2 7ம் ஸ்தானங்களில் பாபகிரஹங்களுடன் இருக்கும் பக்ஷத்தில்தேஹ சாட்டியும் உண்டாகும். இதற்கு பரிகாரம் சூரியநமஸ்காரம் ஜபம் செய்ய சுகம் உண்டாகும்.

## இராகு திசையில் சந்திரபுத்தி வ 1 மீ 6 இதற்கு பலன்

இந்த சந்திரன் கேந்திர கோணங்கள் ஸ்வக்ஷேத்திரம் மித்துரு க்ஷேத்திரம் லாபத்தில் சுபாம்சம், சுபவர்க்கம் பெற்று குருவுடன் கூடினாலும் பார்க்கப்பட்டாலும் பூர்ண சந்திரனாக இருந்தாலும் இராஜ சன்மானம் பூமிலாபம் லக்ஷ்மிகடாக்ஷம் கிரகங்களில் சுப காரியங்களும் வாகனவிக்கிரிய லாபம்யத்தன காரிய சித்தியும் தனதான்ய லாபம் விவசாய பலிதம் ரத்தின பூஷண விக்கிரிய லாபம்.

சத்கீர்த்தி சத்துரு ஜயம் பசு விருத்தி பந்து மித்துரு சகாயம் ஏற்படும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இந்த சந்திரன் ஷெஷ்டாஷ்டக வியத்தில் நீசத்தில் இருந்தாலும் திசானாதனுக்கு 6, 8, 12ல் பாபயுக்தனாக இருந்து பாபர்களால் பார்க்கப்பட்டாலும் எத்தன காரியவிக்கனம் சோரம் அக்கினி பயம் ஜ்வரம் அக்ஸ்மாத் கலகம் மனோதுக்கம் பந்து மித்துரு ஜனபீடை உண்டாகும்.

இந்த சந்திரன் 2, 7ம் ஸ்தானங்களில் மாரக கிரகத்துடன் இருந்தாலும் கூடினாலும் சிதஜ்வரம் அபமிருத்துயு தோஷம் உண்டாகும்.

இதற்கு பரிகாரம் துர்க்கை பூஜை அம்பிகை ஸ்தோத்திரம் சந்திரன் பூஜை செய்ய விலகும்.

### இராகு திசையில் அங்காரக புத்தி ௵ 1-0 நாள் 18 க்கு பலன்

இந்த அங்காரகன் கேந்திர கோணங்களில் ஸ்வக்ஷேத்திர லாபங்களில் சுபருடன் கூடினால் சுபசோபனம் களத்திரபுத்திரர் செனக்கியம் உண்டாகும் இந்த செவ்வாய் பாப யுக்தனாக 6,8,12ல் இருந்தாலும் திசானாதனுக்கு ஷெஷ்டாஷ்டக வியத்தில் நீசனாக பாபர்களுடன் கூடினாலும் பார்க்கப்பட்டாலும் தாரபுத்திரன் சகோதரன் இவர்களுக்கு ஹானியும் ஆயுதத்தினால் தேகத்திற்கு பீடையும் வரும் அங்காரகன் 2, 7ம் அதிபதியாக இருந்து பாபகிரஹங்களுடன் கூடினால் பந்துஜன மரணம் வாதஜ்வரம் எற்படும். இதற்கு பரிகாரம் சுப்பிரமணியனுக்கும் ராகுவுக்கும் பரிகாரம் தீபம் அர்ச்சனை செய்ய விலகும்.

### குருதிசை 16க்கு பலன் குருதிசையில் குருபுத்தி ௵ 2 மீ- 1 நாள் 18க்கு பலன்

இந்த குரு ஸ்வக்ஷேத்திரகோணத்திலிருந்தால் இராஜ்ய

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

லாபம் உண்டாகும். குரு லாபாதிகளுடன் கூடினால் தனதான்ய லாபம் பிராமண சகவாச முண்டாகும். குருதிசத் தில் ஷஷ்டாஷ்டக வியத்தில் இருந்தால் முதலில் ராஜபயம் சத்துருபயம் தாயாதி ஜனங்களுக்குள் துவேஷம் கலகம் வரும் குரு 2, 7 அதிபதிகளுடன் கூடினால் அபமிருத்துயு தோஷம் உண்டாகும். இதற்கு பரிகாரம் ருத்திரஜபம் குரு அர்ச்சனை செய்ய தீரும்.

குரு திசையில் சனிபுத்தி ௵ 2 ௴ 6 நாள் 12 பலன்

இந்த சனி ஸ்வக்ஷேத்திரத்தில் மித்துரு ஸ்தானங்களி லாவது கேந்திர கோணங்கிலாவது சுபவர்க்க சுபாம்சங் களிலாவது, சுபர்களுடன் கூடியிருக்கும் பக்ஷத்தில் ராஜ்ய லாபம் சௌக்கியம் தனதான்ய வஸ்திரலாபம் அன்னிய நீசஸ்திரிசிநேகம் நீசவியாபாரம் கிரஹ பகிலம் லாபமும் புத்திர உற்பத்தியும் கிரஹத்தில் சுபகாரியம் நீசஜன சிநேகம் மேற்கு திக்கில் பிரயாணம் போனவிடத்தில் இராஜ தெரிசனம் உண்டாகும்.

இந்த சனி லக்கினத்திற்காகிலும் திசாநாதனுக்காகி லும் ஷஷ்டாஷ்டக வியத்தில் பாபயுத்தனாக பாபகிரஹங் களுடன் சம்பந்தம் பெற்றால் சகல காரியங்களுக்கு ஹானியும் மாதுர் பிதுர்புத்திரர்கள் களத்திரன் இவர்கள் ஹானியும் தேஹ ஜாட்டியும் ராஜதண்டனையும் சோராக்கினிபீடையும் தனவிரயமும் மானஹானியும் சக காரிய விக்கினம் பந்து துவேசம் உண்டாகும்.

இந்த சனி 2, 7 ஸ்தானாதிபதியாக இருந்தாலும் கூடி னாலும் ஜ்வரம் அபமிருத்து துவேஷம் உண்டாகும். இதற்கு பரிகாரம்:- விஷ்ணு சகஸ்ரநாமம் பிரம்ம போஜனம் சனி தீபம் அர்ச்சனை செய்ய விலகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குருதிசையில் புதன்புத்தி வ௵ 2 மீ 3 நாள் 6
இதற்கு பலன்

இந்த புதன் ஸ்வக்ஷேத்திர கோண தன லாபத்திலிருந்தாலும் நிசாதிபதியோடு கூடினாலும் சுபவர்க்க சுபாம் சங்களிலிருக்கும் பக்ஷத்தில் வாஹன லாபம் பகவிருத்தி தன லாபம் இராஜ்ய லாபம் நினைத்ததை கூடுதலும் கலியாண பிராப்தி மாதுர் பிதுர்சௌக்கியம் இராஜாக்களால் உதவியும் மேற்கு திசையில் பிரயாணங்களும் எத்தன காரியம் கைகூடுதலும் ஏற்படும். இந்த புதன் லக்கினத்துக்கும் நிசாதனுக்கும் பாபயுக்தனாக ஷஷ்டாஷ்டக வியத்தில் சுப பார்வை இல்லாமல் நின்றால் கலகம் சோர பயம் மரணபயம் ஸ்தானபிரஷ்டம் பித்தகரம் உண்டாகும் புதன் 2-7ம் ஸ்தானங்களுக்கு அதிபதியாக இருந்தாலும் கூடினாலும் தேகத்துக்கு ஹானி வரும். இதற்கு பரிகாரம்:- விஷ்ணு ஜபம் பாராயணம் செய்ய உத்தமம்.

குரு திசையில் கேதுபுத்தி மீ 11 நாள் 6க்கு பலன்

இந்த கேது லக்கினத்துக்கு கேந்திர கோணங்களில் சுபருடன் கூடினாலும் அல்ப சௌக்கியம் ஏற்படும்இந்த கேது பாபருடன் கூடி பாபர் திருஷ்டி பெற்றிருந்தாலும் 6,8,12ல் இருந்தாலும் தாரம் புத்திர ஹானி சத்துரு பீடை இராஜகோபம் சேதம் பந்தனம் ரோகம் பீடை ஏற்படும் கேது 2,7 ஸ்தானங்களிலிருந்தால் தேகத்திற்கு ஜாட்டியம் உண்டாகும் அல்லது தாரத்திற்கு தோஷம் ஏற்படும் இதற்கு பரிகாரம் மிருத்தியு ஜபம் கேது பிரீதி செய்ய விலகும்.

குரு திசையில் சுக்கிர புத்தி வ௵ 2 மீ 8 பலன்

இந்த சுக்கிரன் ஸ்வக்ஷேத்திர கோண லாப உச்சத்திலிருந்தாலும் பாக்கிய கர்மாதிபதிகளோடு கூடினாலும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சுபர்களுடன் சேர்ந்து பார்க்கபட்டாலும் ஐஸ்வர்யம் இராஜ விஸ்வாசம் ஸ்திரி சம்போகம் கிரஹத்தில் கலி யாணை வைபவமும் வட திசையில் மித்துரு தெரிசனம் குருபக்தி சுப அதிகார விர்த்தி வித்வ ஜன ஸமகாமம் க்ஷீராக்ன போஜனம் கிரஹ கட நிர்மாணம் உண்டாகும்.

சுக்கிரன் 6, 8, 12-ல் நீசத்தில் சத்துரு கிரகங்களுடன் கூடியிருந்தால் விவாக விக்கனம் ஸ்திரி கலகம் பந்துவிரோதம் த்வி களத்திர பிராப்தி களத்திர தோஷம் புத்திர நஷ்டம் அன்னிய கிராமவாசம் மனோவியாகூலம் ருணபாதை ஏற்படும்.

சுக்கிரன் 2, 7 அதிபதியாய் ஷஷ்ஸ்தானங்களில் நிற்கில் அபமிருத்து தோஷம் இராஜ தண்டனை தேக ஜாட்டியம் உண்டாகும். இதற்கு பரிகாரம் துர்க்கை பூஜை லக்ஷ்மி பூஜை செய்ய பரிகாரம் ஏற்படும்.

குரு திசையில் சூரிய புத்தி

மீ- 9 நாள் 18

இதற்கு பலன்

இந்த சூரியன் ஸ்வக்ஷேத்திர ஸ்வாதிசையில் சுபருடன் கூடியிருந்தாலும் கேந்திர கோணங்களில் சுபர் பார்வை அடைந்தாலும் பலவானாகயிருந்தாலும் திசாநாதனுக்கும் அப்படியேயிருந்தாலும் கீர்த்தி விர்த்தியாலாபம் தத்வசாஸ்திரம் பிரசங்கம் உத்தியோக மேன்மை பிரமோஷம் தர்ம காரியம் ஏற்படுத்தல் இவைகள் ஏற்படும்.

சூரியன் ஷஷ்டாஷ்டக வியத்தில் நீசனாக சனியுடன் சேர்ந்திருந்தால் சிரசு தந்த ரோகம் அதிசாரம் பீடை ஜ்வரம் கர்மநாசம் பந்து தாயாதி விரோதம் பந்து ஜனகஷ்டம் அரிஷ்டம் ருண தனபாதை இராஜ நிர்பந்தம் களத்திர புத்திர பீடைகள் உண்டாகும். இந்த சூரியன் லக்கினத்திற்கு 2, 7ல் அதிபதியாக இருந்து பாப

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கிரகத்துடன் சேர்ந்து இருக்கும் பக்ஷத்தில் தேக ஜாட்டியம் பயம் உண்டாகும். இதற்கு பரிகாரம்:- சூரிய நமஸ்காரம் நவக்கிரக பூஜை செய்ய விலகும்.

### குருதிசையில் சந்திர புத்தி
### ஞ 1 மீ 4 இதற்கு பலன்

இந்த சந்திரன் கேந்திர கோணலாப ஸ்வக்ஷேத்திரனாய் பூர்ண பரிபூர்ணவனாக இருந்தால் இராஜ்ய லாபம் கீர்த்தி தாரபுத்திர சௌக்கியம் இராஜ்பிரீதி வீட்டில் சுப காரியங்கள் கலியாணம் ஆரோக்கியம் லாபம் உண்டாகும். சந்திரன் திசாநாதனுக்கும் 5, 6ம் இடங்களில் இருந்தால் கிரகத்தில் இலக்ஷ்மி கடாக்ஷம் சௌபாக்கியம் உண்டாகும் லக்கினத்திற்கும் திசாநாதனுக்கும் ஷஷ்டாஷ்டக வியத்தில் பாபருடன் கூடியிருந்தால் இராஜ நிந்தனை ரோகம் பீடை சீதகரம் ஏற்படும் அன்னிய தேச வாசமும் உண்டாகும். சந்திரன் 2 7ம் இடங்களில் அதிபதியுடன் கூடியிருந்தால் தேகபாதை பீடை துவேஷம் ஏற்படும் இதற்கு பரிகாரம் : லக்ஷ்மி பூஜை ஜபம் செய்ய விலகும்.

### குரு திசையில் அங்காரக புத்தி மீ 11 நாள் 6 பலன்

இந்த அங்காரகன் ஸ்வக்ஷேத்திர திரிகோணத்திலிருந்தால் திதியில் அல்ப லாபம் தனதான்ய விருத்தி உண்டாகும் சகோதரருக்கு ரண பணச்சிலவு பயம் ஏற்படும் பிதுர் வர்க்கத்தில் விவகாரங்கள் தான்னிய லாபம் பந்து ஜனதெரிசனம் வியாபார லாபம் உண்டாகும் அங்காரகன் குரூர கிரகத்தினுடன் கூடினாலும் அவனால் பார்த்தாலும் திசானாதனுக்கு ஷஷ்டாஷ்டக வியத்தில் பாபயுக்தனாகயிருந்தாலும் சகல காரியத்திற்கு ஹானி நேத்திர வியாதி அன்னிய தேசம் பயணம் உண்டாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அங்காரகன் 2, 7ம் இடத்தில் இருந்தால் தேக ஜாட்டி கை பயம் வரும் இதற்கு பரிகாரம் முருகன் ஜபம் பூஜை தீபம் போட விலகும்.

குரு திசையில் ராகு புத்தி
வரு 2 மீ 4 நாள் 24 இதற்கு பலன்

இந்த ராகு கேந்திர கோணத்தில் அந்த அதிபதிகளுடன் கூடியிருந்தாலும் உச்ச லாப ஸ்தானங்களில் சுப கிரகங்களுடன் கூடியிருந்தாலும் பிரபு தெரிசனம் கிரகத்தில் கலியாண வைபவங்களும் சேனாதிபதி அதிகாரமும் சேதுஸ்னானம் தனதான்ய லாபம் சத்துரு நாசம் இராஜ தெரிசனம் காரியானுகூலம் தென்மேற்கு தெற்கு திசையில் பிரயாணம் பந்து மித்துருக்கள் வருதலும் ஏற்படும்.

இந்த ராகு ஷெஷ்டாஷ்டக வியத்தில் நீச, பாப, ராசிகளில் இருப்பினும் திசாநாதனுக்கு துர்ஸ்தானங்களில் பாப கிரஹங்களுடன் கூடினாலும் பார்வை அடைந்தாலும் புண்ணிய கர்மநாசம் இராஜ சோராக்கினி பாதை, களத்திர புத்திர ஹானி பந்து மித்துரு விரோதம் மனோ வியாதி உண்டாகும்.

ராகு 2, 7ல் மாரக கிரஹத்துடன் கூடினால் அபமிருத்து தோஷம் உண்டாகும் இதற்கு பரிகாரம் மிருத்யு ஜபம் செய்ய விலகும் சுகம் உண்டாகும்.

சனி மகா திசை 19 வரு
சனி மகா திசையில் சனி புத்தி
வரு 30 நாள் 3 இதற்கு பலன்

குறிப்பு : சனி மகா திசை பூராவும் அர்ச்சனை-என்ளு தீபம் போட சௌக்கியம் ஏற்படும்.

இந்த சனி லக்கினத்திற்கு கேந்திர கோண உச்ச சுப

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வர்க்க சுப லாபஸ்தானங்களிலும் 3ம் இடத்தில் சுப கிரஹங்களுடன் இருக்கும் பக்ஷத்தில் இராஜ்யலாபம் ராஜ்ய அனுகூலம் ரத்தின பூஷண லாபம் சத்துரு ஜயம், பந்து மித்துருக்களால் இஷ்ட காரிய லாபம் சத்துரு ஜயம் மேற்கு திசை பிரயாணத்தினால் மித்துரு தெரிசனம் நீச வஸ்து வியாபாரத்தினால் லாபம் பந்துஜன விசுவாசம் சுபகாரியம் எத்தனம் உண்டாகும்.

இந்த சனி ஷஷ்டாஷ்டக வியத்தில் இருந்தாலும் பாப நீச ஸ்தானங்களில் பாப கிரஹங்களுடன் இருக்கும் பக்ஷத்தில் விஷ சாஸ்திர அக்கினி பாதைகளும் ருணபீடையும் களத்திர புத்திர தோஷம் ஸ்தான பிரஷ்டம் உண்டாகும்.

சனி 2,7ம் இடங்களில் இருந்தாலும் ஸ்தான ஆதிபத்தியம் உண்டாகும் தேஹ ஜாட்டியம் விரண ஜ்வரம் அபமிருத்துயு தோஷம் உண்டாகும் இதற்கு பரிகாரம் துர்கை பூஜை செய்ய உத்தமம் சௌக்கியம் ஏற்படும்.

சனி திசையில் புதன் புத்தி

௵ 2 மீ 8 நாள் 9

இதற்கு பலன்

இந்த புதன் கேந்திர கோண லாபத்தில் சுப கிரகங்களுடன் (லக்கினத்திற்கும் திசாநாதனுக்கும்) இருக்கும் பக்ஷத்தில் இராஜயோகம் கிரஹத்தில் கலியாணம் சேது ஸ்தானம் வியாபார மூலம் குரு லாபம் தேவதா தெரிசனம் தனதான்ய விருத்தி அன்னதானம் ஏற்படும் இந்த புதன் ஷஷ்டாஷ்டக விய நீசராசிகளிலும் பாப க்ஷேத்திரத்தில் பாப கிரகங்களுடன் கூடினால் களத்திர புத்திர பீடையும் காரிய விக்னம் தேகபீடை உண்டாகும். புதன் 2, 7 ஸ்தானாதிபதியுடன் கூடினால் இராஜ பயம் வாத சிலேஷ்மாதி ரோக பீடைகளும் இராஜ விவகாரங்களும் உண்டாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இதற்கு பரிகாரம் :- விஷ்ணு ஸகஸ்ரநாமம் பாராயணம் செய்ய விலகும். ஆயுர் ஆரோக்கியம் ஏற்படும்.

### சனி திசையில் கேது புத்தி ௵ 1 மீ 1 நாள் 9 பலன்

இந்த கேது சுபாம்சத்திலாவது சுபஸ்தானங்களிலாவது கேந்திரங்களிலாவது அந்த அதிபதியோடு கூடினாலும் கலியாண சுபகாரியமும் யத்தின காரியானுகூலமும் மித்திரனால் தனலாபமும் உண்டாகும். இந்த கேதுலக்கினத்திற்கும் திசாநாதனுக்கும் ஷஷ்டாஷ்டக வியத்தில் பாபருடன் இருக்கும் பக்ஷத்தில் களத்திர புத்திர பீடை ஜ்வர ரணபீடைகள் உண்டாகும். கேது 2, 7 ஸ்தானங்களில் நீச கிரஹங்களுடன் கூடினால் நாலாவித கஷ்டங்கள் ஏற்படும் இதற்கு பரிகாரம்:- மிருத்துயுஜபம் செய்ய உத்தமம்.

### சனி திசையில் சுக்கிர புத்தி ௵ 3 மீ 2 இதற்கு பலன்

இந்த சுக்கிரன் ஸ்வ க்ஷேத்திர கேந்திர உச்சத்திலிருந்தாலும் சுப கிரகங்களுடன் கூடினாலும் திசாநாதனுக்கு கேந்திர கோண லாபஸ்தானங்களில் பலவானாக இருந்தாலும் கர்மாதியுடன் கூடினாலும் கிரகத்தில் விவாகம் ராஜ்யலாபமும் வியாபார லாபமும் தனதான்ய விருத்தியும் தடாக நிர்மானமும் பந்து மித்துரு சிநேகமும் புத்திர உற்பத்தியும் சுய அதிகாரமும் வியாபார மூல லாபமும் சங்கீதமாசங்கம் ஸ்திரிசௌக்கியம் ஏற்படும். சுக்கிரனும் சனியும் கூடில் இராஜயோகம் தைரியம் உண்டாகும். சுக்கிரன்லக்கினத்திற்கு சத்துரு நீச பாப க்ஷேத்திரங்களில் இருந்தால் களத்திரதோஷம் தனவிரயம் ராஜவிவகாரங்களும் அநாசாரம் பிரதுர் வர்க்க விரோதம் ஸ்வ ஜனமரணம் வரும். சுக்கிரன் 2-7ம் ஸ்தானாதிபதியாகயிருந்து பாப கிரகத்துடன் கூடியிருந்தால் அந்த ஸ்தானங்களில் மாரக

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கிரகங்களுடன் கூடினாலும் அபமிருத்யு தோஷம் உண்டாகும் இதற்கு பரிகாரம்:- துர்க்கை பூஜை செய்ய ஆயுள் விருத்தி பாக்கியம் ஏற்படும்.

### சனி திசையில் சூரிய புத்தி மீ 11 நாள் 12க்க பலன்

இந்த சூரியன் கேந்திர கோண லாப ஸ்தானங்களில் பாக்கியாதிபதியுடன் கூடியிருந்தாலும் ஸ்வக்ஷேத்திர உச்ச மித்துரு ஸ்தானாதிபதியுடன் கூடியிருந்தால் சுபருடன் கூடினாலும் கிரகத்தில் கலியாணம் சுபகாரியங்களும் பசு தனதான்ய விர்த்தியும் வியாபார மூலியமாக தனலாபமும் புத்திரோத்ஸவமும் துர்ஜன நாசமும் ராஜ விகவாசமும் புண்ணிய தேசசஞ்சாரம் யோகி தெரிசனமும் பிதா சௌக்கியமும் உண்டாகும் சூரியன் ஷஷ்டாஷ்டக வியத்தில் நீச ஸ்தானத்திலாவது பாப கிரகத்துடன் கூடினாலும் பார்க்கப்பட்டாலும் மனோவியாதி ருண தன பீடை மார்வலி மானபங்கம் பிதுர் ஜனரிஷ்டம் பந்தனம் ராஜபயம் உண்டாகும் சூரியன் லக்கினத்திற்கு 2, 7ம் ஸ்தானங்களிலிருந்தாலும் அந்த அதிபதிகளுடன் கூடினாலும் தேக ஜாட்டிகை உஷ்ணரோகம் வரும். இதற்கு பரிகாரம்:- சூரிய நமஸ்காரம் சனி திபம் செய்ய விலகும்.

### சனி திசையில் சந்திர புத்தி
### வ 1 மீ 7 இதற்கு பலன்

இந்த சந்திரன் கேந்திர கோண உச்ச லாப ஸ்தானங்களில் சுப திருஷ்டி இருந்து சுபருடன் கூடினால் இராஜ்ய பிராப்திமாதுர்பிதுர் சௌக்கியம் தனம்பால் விருத்தி நினைத்த காரியம் ஜயம் உண்டாகும். இசானாதனுக்கு கேந்திர கோணத்தில் நின்றால் தன பிராப்தி தேக ஆரோக்கியம் சௌக்கியம் உண்டாகும் பூர்ண சந்திரனாய் [illegible] பாபர் பார்வை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பெற்றாலும் நீசத்திலிருந்தாலும் கஷ்டத்தை கொடுக்கும் சுகீனனாக சந்திரன் திசாநாதனுக்கு ஷஷ்டாஷ்டக வியத்தில் இருந்தால் மாதுரு பிதுரு அரிஷ்டம் களத்திரரிஷ்டம் தனவிரயம் ராஜ ஜன விரோதம் கலகம் வரும் சந்திரன் 2, 7 அதிபதிகளுடன் கூடினால் அபமிருத்து தோஷம் ஏற்படும் இதற்கு பரிகாரம்: துர்க்கைஜபம் (சந்திரன் அம்பிகை காளி) இவர்களுக்கு அர்ச்சனை செய்யவும்.

### சனிதிசையில் அங்காரபுத்தி ஞ 1 மீ 1 நாள் 9 இதற்கு பலன்

இந்த செவ்வாய் ஸ்வ க்ஷேத்திர திரிகோண ஸ்தானத்தில் திசாநாதனுடன் கூடினால் சுரம் கபம் வாத பித்தமும் இலக்கினாதிபதியுடன் கூடினாலும் ஸ்வ க்ஷேத்திரத்தில் அவருடன் இருந்தாலும் சேனாதிபத்தியம் சந்தோஷம் வாகனம் பூஷணம் இவைகள் ஏற்படும், செவ்வாய் அஷ்ட மாதிபதியுடன் கூடினாலும் 2 7ம் அதிபதியுடன் சனியுடனும் கூடினால் அபமிருத்துயு தோஷம் வரும் அங்காரகன் ஷஷ்டாஷ்டக வியத்தில் சனியுடன் கூடியிருந்தால் அபமிருத்துயு தோஷம் வரும் இதற்கு பரிகாரம்: சுப்பிரமணிய ஜபம், தீபம் சனிப்பிரிதி செய்ய விலகும். (சனியும் செவ்வாய்) பகை ஜபம் இருவருக்கும் முக்கியம் செய்ய வேண்டும்.

### சனி திசையில் இராகுபுத்தி ஞ 2 மீ 10 நாள் 6 இதற்கு பலன்

இந்த ராகு லக்கினத்திற்கு கேந்திர கோண உச்ச ஸ்தானங்களில் சுபர்களுடன் கூடினாலும் அல்லது அந்தந்த ஸ்தானாதிபதிகளோடு கூடியிருந்தாலும் பிரயத்தன காரியம் அனுகூலமும் வியாபார தனலாபம் சுபகாரியங்களும் இராஜ அனுக்கிரகத்தினால் இடம் காணி சித்தியும் உண்டாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## சனிதிசையில் இராகுபுத்தி

இந்த ராகு மேஷம் ரிஷபம் கடகம் கன்னிதனுக இந்த ராசிகளில் சுபகிரகங்களுடன் கூடில் ராஜபந்து மித்துரு சன்மானம் ஸ்திரி சம்போகம் ஏற்படும்.

இந்த ராகு முதலில் மனோவேதனையும் கலகமும் புத்திர துவேஷம் தனவிரயம் சத்துருபயம் ஏற்படுத்தும் தெற்கு தென்மேற்கு திசையில் பிரயாணமும் யத்தன காரியவிக்னமும் உண்டாகும்படி செய்யும் பிறகு சௌக்கியம் ஏற்படும். ராகு 2, 7ம் ஸ்தானங்களில் மாரக கிரகங்களுடன் கூடினாலும் பார்க்கப்பட்டாலும் தேக ஜாட்டிகை விஷபயம் ஏற்படும் இதற்கு பரிகாரம் மிருத்துயு ஜபம் செய்ய ஆயுர்விருத்தி உண்டாகும்.

## சனி திசையில் குருபுத்தி
## வ௫ 2 மீ 6 நாள் 12 இதற்கு பலன்

இந்த குரு கேந்திர கோணம் லாபத்தில் உச்ச ஸ்வ க்ஷேத்திரனாய் சுபர்களுடன் கூடி சுபாம்ச பெற்றிருந் தால் நற்கீர்த்தி தேவதா பூஜை லக்ஷிமிகடாக்ஷம் இராஜ தெரிசனம் எத்தன காரியம் ஜயம் பெரியோர்கள் சகவாசம் பிராமணாள் சகவாசம் உண்டாகும்.

குரு சஷ்டாஷ்டக வியத்தில் பாபருடன் கூடினால் துஷ்ட ஸ்திரிபாப கர்மங்கள் அல்ப சௌக்கியம் ஏற்படும்.

குரு திசாநாதனுக்கு கேந்திர கோணம் லாபத்தில் இருந்தால் தன சம்பத்தும் வாகன லாபம் பிரதாபம் கீர்த்தி பூஷணம் அலங்காரம் ஏற்படும்.

குரு திசாநாதனுக்கு 6-8-12ல் நீசத்தில் இருந்தாலும் கூடினாலும் கலகம் பந்தனம் தேகபிணியும் உண்டாகும்.

குரு 2-7ல் அதிபதிகளுடன் கூடியிருந்தால்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அபமிருத்யு தோஷம் வரும் இதற்கு பரிகாரம் விஷ்ணு ஜபம் செய்ய தீரும்.

புதன் திசை 17 வரு
புதன் புத்தி வரு 2 மீ 4
நாள் 27க்கு பலன்

இந்த புதன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களில் ஸ்வ உச்ச மித்துரு க்ஷேத்திரங்களிலாவது சுபா அம்சத்தில் சுபர்களுடன் கூடினாலும் பார்க்கப் பட்டாலும் திசாநாதனுக்கும் அப்படியேயிருந்தாலும் ஆரோக்கியம் புத்திர உற்பத்தி வித்தியாபிவிருத்தி ரத்ன பூஷணலாபம் கலியாணசுபகாரியம் வியாபார உத்தியோகம் பிராப்தியும் விவகார மூலம் லாபம் யத்தின காரியம் ஜயமும் சங்கீத வாத்திய கேள்விகளில் மகிழ்ச்சியும் பிராமண சத்சங்கமும் சித்தியும் உண்டாகும்.

புதன் ஷஷ்டாஷ்டம விய நீச பாப சத்துரு க்ஷேத்திரங் களில் பாப கிரகங்களுடன் கூடியிருக்கும் பக்ஷத்தில் தனதான்ய பசு அபிவிர்த்தியும் மித்துரு ஜன துவேஷம் யத்தினகாரியம் விக்கினம் காராகிரஹமும் வாசம் இராஜ துவேஷம் உண்டாகும் புதன் 2 7ம் ஸ்தானங்களில் நின்றாலும் அதிபதியானாலும் அந்த ஸ்தானங்களில் மாரக கிரகங்களுடன் கூடியிருக்கும் பக்ஷத்தில்பந்து மித்துரு களத்திர அரிஷ்டமும் வியாதி வாத சூலை பீடையும் ஏற்படும்.

புதன்திசை புதன் புத்தி இதற்கு பரிகாரம் :-

விஷ்ணு சஹஸ்ரநாமம் ஜபம் பாராயணம் லக்ஷ்மி பிரதிமைதானம் செய்ய ஆயுர் ஆரோக்கியம் பாக்கியம் உண்டாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

புதன் திசையில் கேது புத்தி
மீ 11 நாள் 27
இதற்கு பலன்

இந்த கேது லக்கினத்திற்கு கேந்திர கோணங்களில் சுபருடன் கூடி சுபபார்வை அடைந்தாலும் இலக்கினாதிபதியுடன் கூடினாலும் சொற்ப லாபம் பந்து சிநேகம் மேற்கு திசையில் பிரயாணம் லாபம் ஜீவனலாபம் வியாபார உத்தியோக பிராப்தியும் வித்தியா கீர்த்தியும் கலியாணம் சுப பிராப்தியும் உண்டாகும்.

இந்த கேது ஷஷ்டாஷ்டக வியத்தில் பாபருடன் கூடி பாபர் திருஷ்டிபெற்றிருந்தால் சோராக்கினி பயம், இராஜ்ய பயம் பாப கருமம் செய்கை வாகனத்திலிருந்து விழுதலும் உண்டாகும் தவிர ஸ்தான பிரஷ்டம் மாதுர் பீடை மனோவியாதி ராஜதண்டனை ஏற்படும்.

கேது 2-7ம் ஸ்தானங்களில் இருப்பாராகில் தேக ஜாட்டிகை காரியகேடு தனவிரயம் ஏற்படும் இதற்கு பரிகாரம் துர்க்கை ஜபம் தீபம் போட விலகும்.

புதன் திசையில் சுக்கிரபுத்தி
வரு 2 மீ 10
இதற்கு பலன்

இந்த சுக்கிரன் லக்கினத்திற்கு கேந்திர கோணலாப ஸ்வக்ஷேத்திரங்களில் சுப கிரஹங்களுடன் கூடியிருக்கில் சத்கதா சிரவணமும் தான தர்ம சம்பத்து பிரபுவின் சகாயம் நூதன கிரஹம் பிராப்தி உண்டாகும்.

சுக்கிரன் தர்ம கர்மாதிபதியுடன் கூடி பலவானாக கேந்திர கோணங்களில் இருப்பானாகில் இராஜ விசுவாசம் கூட தடாக நிர்மாணம் வியாபாரங்களில் தனலாபம் ரத்தின பூஷணாதி வாஹனாதி லாபமும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கிரகத்தில் கவியான வைபவங்களும் புத்திர உற்பத்தியும் சுக்கிரன் லக்கினத்திற்கு சஷ்டாஷ்டக விய, நீச, சத்துரு ராசிகளில் பாபகிரகங்களோடு கூடினாலும் பார்க்கப்பட்டாலும் மனோவியாதி மானஹானி புத்திமாறாட்டம் மாதுருஜன பீடையும் ஸ்தான பிரஷ்டம் களத்திர கலகம் ராஜதண்டனை ருண தனபீடையும் ஏற்படும். சுக்கிரன் 2 7ம் ஸ்தானங்களில் அதிபதியாக பாப கிரகங்களுடன் இருந்தால் அபமிருத்துயு தோஷம் ஏற்படும் இதற்கு பரிகாரம் :- துர்க்கை ஜபம் பூஜை செய்ய விலகும்.

புதன் திசையில் சந்திரபுத்தி மீ- 10 நாள் 6க்கு பலன்

இந்த சூரியன் லக்கினத்திற்கு கேந்திர கோணஸ்வ க்ஷேத்திரங்களிலாவது சுபர்களுடன் லக்கினாதிபதி யோடாவது கூடியிருக்கும் பக்ஷத்தில் கிராமாதிகாரி வியாபாரமூலம் தனலாபம் பந்துமித்துரு சன்மானம் சுபகாரியங்கள் நிர்ணயத்தில் உண்டாகும். சூரியன் லக்கினத்திற்கு ஷஷ்டாஷ்டக விய நீச சத்துரு ஸ்தானங்களில் பாபர்களுடன் கூடியிருக்கும் பக்ஷத்தில் இராஜ சோராக்னி விரண ஜ்வர சஸ்திரபீடைகளும் ஆத்மபந்துஜன அரிஷ்டம் பிதுரு அரிஷ்டம் உண்டாகும். சூரியன் 2 7ம் இடத்துக்கு அதிபதியாய் மாரகிரகங்களுடன் மாரகத்துவம் அடைந்து இருந்தால் அபமிருத்துயு தோஷம் ஏற்படும். இதற்கு பரிகாரம்:- சூரிய நமஸ்காரம் விஷ்ணுஜப பாராயணம் செய்ய ஆயுர்விருத்தி உண்டாகும்.

புதன் திசையில் சந்திரபுத்தி வ் 1 மீ- 5க்கு பலன்

இந்த சந்திரன் கேந்திர கோண உச்ச ஸ்வக்ஷேத்திர மூல திருகோணங்களில் குருபார்வை அடைந்தால் ஸ்திரிலாபம் புத்திரலாபம் ரத்தினமுத்து விக்கிரயலாபம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கிரஹ நிர்மாணம் சங்கீதவாத்திய கோஷ்டிகளுடன் போதல் சாஸ்திர பிரசங்களுக்கு சேர்தல் கிரகத்தில் சுபகாரியங் களும் தேவதா உச்சவ தெரிசனமும் வியாபார லாபமும் உண்டாகும். சந்திரன் ஷஷ்டாஷ்டக விய நீச சத்துரு பாபருடன் கூடி க்ஷீண சந்திரனாகயிருந்தாலும் பாபர்களால் பார்க்கப்பட்டாலும் பந்து விரோதம் தார புத்திரபீடை தனதான்ய விரயம் ராஜதுவேஷம் வாதசிலேஷம் தேக ஜாட்டிகை தன ஹானியும் உண்டாகும். சந்திரன் 2-7ம் இடத்துக்கு அதிபதியாக இருந்தால் அந்த ஸ்தானங்களிலிருந்தாலும் பாப கிரஹங்களுடன் கூடியிருப்பானாகில் சோரபயம் இராஜபயம் தேகபீடை துஷ்டஸ்திரி சங்கமம் பீடை உண்டாகும். இதற்கு பரிகாரம்:- துர்க்கை பூஜை ஜபம் செய்ய விலகும் உத்தமம்.

## புதன் திசையில் அங்காரக புத்தி மீ 11 நாள் 27க்கு பலன்

இந்த செவ்வாய் (அங்காரகன்) கேந்திர கோண உச்ச ஸ்வக்ஷேத்திரனாய் இலக்கினாதிபதியுடன் கூடினால் இராஜபிரீதி லாபம் நஷ்டமான பொருள் கைகூடுதல் நிசானாதனுக்கு கேந்திர கோண லாபத்தில் பாபருடன் கூடி பார்வை பெற்றிருந்தாலும் மாதுர் ஹானி மனோவியாகூலம் அபகீர்த்தி மானபங்கம் சர்வம் விரயம் உண்டாகும். ஷெ ஸ்தானங்களில் சுபர் திருஷ்டி பெற்றால் சொற்பலாபம் உண்டாகும் அங்காரகன் ஷஷ்டாஷ்டக வியத்தில் நீசனானால் தேகத்திற்கு கரம் வீட்டில் கலகம் பீடை ரோகம் ஸ்தான பிரஷ்டம் உண்டாகும் 2-7ம் இடத்துக்கு அதிபதியாய் இருந்தால் அபமிருத்துயு தோஷம் வரும் இதற்கு பரிகாரம்:- சுப்பிரமணியனுக்கு அர்ச்சனை ஜபம் விஷ்ணு ஜபம் பூஜை செய்ய விலகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

புதன் திசையில் இராகுபுத்தி வருஷம் 2 மாசம் 6 நாள் 18 இதற்கு பலன்

## கடக லக்கினத்திற் பிறந்தோர்களது பலா பலன்கள்

[illegible]

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஸ்தானமாகிய சிம்மத்தில் சூரியன் வஜீனஸ்தானத்தில் சனி இராகு சுக ஸ்தானத்தில் கேது ஜனனலக்கினத்தில் புதன் அமர்ந்துள்ள கடக லக்ன ஜாதகன் பலபாஷா கல்வி கற்று அரசாங்க உத்தியோகத்திலமர்ந்து சகலராலும் நன்கு மதிக்கப்பட்டு தனவந்தனாயிருப்பான்.

குடும்பத்தில் சனி குரு ரோகஸ்தானமாகிய தனுசில் சந்திரன் ஜனனலக்கினமாகிய கடகத்தில் செவ்வாய் நீசம் பெற்று இராகு சம்பந்தத்தை அடைந்து களத்திர ஸ்தானமாகிய மகரத்தில் கேது இருந்தால் அந்த ஜாதகன், வறுமைப் பிணியால் துயரம் அடைவான் மகரத்தில் புதனும் சூரியனும் இருந்து களத்திரஸ்தானத்தில் சுக்கிரன் இருக்கப் பெற்ற ஜாதகன் கல்வியில்லாதவனாய் கைத்தொழில் செய்து ஜீவித்தாலும் மனைவி சம்பந்தமில்லாமலே தாசி வேசி நேசனாய் பந்து மித்திரர்களால் வெறுக்கப்பட்டு பல்லோராலும் இகழ்ச்சி அடைவான்.

தனவாக்கு குடும்பஸ்தானத்தில் சூரியன் சகோதர ஸ்தானத்தில் புதன்-சந்திரன் சுக்கிரன் பாக்கியஸ்தானத்தில் குரு தனுசில்-சனி-ராகுவோடு சம்பந்தமாய் சத்துரு ஸ்தானத்தில் அமர்ந்து சுகஸ் தானத்தில் செவ்வாய் இருக்க அந்த ஜாதகன், எல்லாவிதத்திலும் சகலருக்கும் நல்லவனாய் தனது சகோதரிகளால் அடைந்து உத்தியோக விருத்தி வியாபார லாபம் இவற்றால் வெகுபொருள் சேகரித்து தனவந்தனாயிருப்பான்.

## சிம்ம லக்கினத்திற் பிறந்தோர்களது

## பலா பலன்கள்

சத்துரு ஸ்தானத்தில் சூரியன்-புதன்-கேது களத்திர ஸ்தானத்தில் செவ்வாய் சுக்கிரன் பாக்கிய ஸ்தானத்தில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சந்திரன், விரயஸ்தானத்தில் இராகு சுகஸ்தானத்தில் சனி அமைந்திருக்கும் ஜாதகன் பலவித துன்பங்களை அடைவான் பந்துமித்திரர்களது பகையால் சரீரம் மெலிவான், ஆயினும் பாக்கிய ஸ்தானத்தில் குருவும் சந்திரனும் இருப்பதால் சில சமயம் வறுமை அடைந்திருந்தாலும் குருபலத்தினால் தன தான்ய சம்பத்தோடும் மனைவி மைந்தர்களோடும் சுகஜீவியாய் வாழ்வான்.

சிம்ம லக்கினத்தில் சனி இராகு சகோதர ஸ்தான மாகிய துலாராசியில் புதன் சூரியன் வாக்கு ஸ்தான மாகிய கன்னியில் சுக்கிரன் (நீசம்) களத்திர ஸ்தானத்தில் கேதுசுகஸ்தானத்தில்சந்திரன்அமரப்பெற்றஜாதகன், சகலருக்கும் விரோதி அன்னவஸ்திரத்துக்குப் பஞ்சம் தனது சகோதரிகளின் வீட்டில் அடிமைத்தொழில் செய்து, வயிறுவளர்தல் முதலிய துன்பத்தை அடைவான்.

ஜனனலக்கினமாகிய சிம்மத்தில் சூரியன் (ஆக்ஷி) தனகுடும்ப வாக்கு ஸ்தானத்தில் சுக்கிரன் புதன்-சந்திரன் நீரஸ்தானமாகிய துலா ராசியில் சனி (உச்சம்) பஞ்சமஸ் தானத்தில் குரு சத்துரு ஸ்தானத்தில் இராகு விரயஸ் தானத்தில் கேது அமரப்பெற்றுள்ள ஜாதகன் வித்யா சாமர்த்தியம் வியாபார விருத்தி அதனால் உலகத்தில் பல்லோராலும் நன்மதிப்பு ஜோதிஷம்-சங்கீதம் இலக்கணம் இவற்றுள் வல்லமை சாஸ்திர ஆராய்ச்சி தேர்ச்சி அர சாங்க உத்தியோகம் மனைவி பந்துமித்தரர் கூட்டத் துறவு காண்போர் ஆச்சரியப்படும் விதமான பிரபுத்வம் தான தர்ம பரோபகாரசிந்தனை தர்மப்பிரபு வெனப்பல் லோராலும் புகழ்ப்பெற்று சீமானாய் விளங்குவான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# கன்னிகா லக்கினத்திற் பிறந்தோர்களது பலா பலன்கள்

ஜனன லக்கினமாகிய கன்னியாராசியில் சூரியன் புதன் சுக்கிரன் தனகுடும்ப வாக்குஸ்தானத்தில் குரு சந்திரன் அமர்ந்துள்ள ஜாதகன் அரசாங்கவித்தையில் தேர்ச்சி பூரணகியாபக சக்தி அதிமேன்மையான அரசாங்க உத்தியோகம் கீர்த்தி பெருமை சமர்த்து பிரபுவின் புத்திரியை மனைவியாகக்கொண்டு தன தான்ய சம்பத்தோடு பசு புத்திரன் காணிபூமி முதலிய பல வைப்பும் பொருந்திய சீமானாய் வாழ்வான்.

லக்கினத்தில் சனி-ராகு சுக்கிரன் விரயஸ்தானமாகிய சிம்மத்தில் சூரியன் திரஸ்தானமாகிய விருச்சிகத்தில் சந்திரன் (நீசம்) சப்தமஸ்தானமாகிய கும்பத்தில் கேது அமைந்துள்ள ஜாதகன் அதிக கஷ்டம் தீரா மனக்கவலை வித்தையின்மை மூடத்வம் பந்து மித்தரர்கள் பகை மனைவி மைந்தரில்லாமல் பித்து பிடித்தவன்போல் அலைவான் அன்ன வஸ்திரங்களுக்குப் பரிதவிப்பான்.

கன்னியா லக்கினத்துக்குச் சுகஸ்தானமாகிய தனுசில் சூரியன் சந்திரன் சுக்கிரன் புதன் குரு சத்துருஸ்தான மாகிய கும்பத்தில் சனி மகரத்தில் அங்காரகன் (உச்சம்) விரயஸ்தானத்தில் இராகு சத்துரு ஸ்தானத்தில் கேது அமைந்துள்ள ஜாதகன் கல்வி கேள்விகளில் சமர்த்துடை யவன் தொழிற் கல்வியில்தேர்ச்சியுடையவன் தொழிற் சாலை ஒன்று ஏற்படுத்தி அநேகம் தொழிலாளர்களை வைத்து வேலை வாங்கி அதனால் பெருந்திரவியம் சம்பாதிப்பான் வியாபார மேன்மையடையவான் மனைவி மைந்தர் பந்துமித்திரர்களோடு கூடித் தனதான் யசம்பத்து பொருந்தி லக்ஷாதி பிரபுவாய் வாழ்வான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## துலா லக்கினத்திற் பிறந்தோர்களது பலா பலன்கள்

ஜனன லக்கினமாகிய துலாத்தில் சுக்கிரன் தன குடும்ப வாக்கு ஸ்தானத்தில் சூரியன் புதன் செவ்வாய் திரஸ்தானத்தில் குரு சத்துருஸ்தானத்தில் சனி இராகு விரயஸ்தானத்தில் கேது லாபஸ்தானத்தில் சந்திரன் அமைந்துள்ள ஜாதகன் ஞாபக சக்தி வித்யாபிவிருத்தி தைரியம் பெருந்தன்மை சங்கீத வித்தையில் பாண்டித்தியம் பரதநாட்டியத்தில் ஆசை தனதான்ய சம்பத்து காணி பூமி நிலபுலம் உடையோனாம் மனைவி மைந்தர் சகோதரர்கள் பந்து மித்திரர் களோடு பிரபுவாய் தான தர்ம பரோபகாரம் செய்து இகத்தில் கீர்த்தியும் பரத்தில் மோக்ஷபதவியும் பெற்று ஆசார அநுஷ்டான விரத சீலனாய் வாழ்வான்.

ஜன்ம லக்கினத்தில் ராகு களத்திர ஸ்தானத்தில் கேது சத்துருஸ்தானத்தில் சுக்கிரன்-சூரியன் சந்திரன் புதன் களத்திர ஸ்தானத்தில் சனி கேதுவுடன் சம்பந்தப்பட்டு அமைந்துள்ள ஜாதகன், கல்வியறி வில்லாத மூடன் தனது வாய்ச்சொல்லே பிறரது பகைக்குக் காரணமாய் பல்லோராலும் நிந்திக்கப்பட்டு இகத்தில் துன்பமும், பரத்தில் பாப கர்மங்களுக்கேற்ற நரகவேதனையும் அடைவான், அன்னவஸ்திர மில்லாமல் திருட்டுத் தொழிலுக்கு அதிகாரியாய் விளங்குவான் கொலை களவு காமம் முதலான துர்விஷயங்களில் மனஞ்செலுத்தி அதனாலுண்டாகும் இராஜ தண்டனைக்குட்படுவான் இவனுக்கு மனைவி மைந்தர் அபாவம் பந்து மித்திரர்கள் தீர்க்க விரோதி.

துலா லக்கினத்துக்கு சுகஸ்பதானமாகிய மகரத்தில் செவ்வாய் சுக்கிரன் சூரியன் புதன் சந்திரன் ஜீவஸ்தான

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மாகிய லக்கத்தில் குரு விரயஸ்தானத்தில் ராகு சத்துருஸ்தானத்தில் ராகு சத்துருஸ்தானத்தில் கேது அமைந்துள்ள ஜாதகன் சுறுசுறுப் புள்ளவன் ஞாபக சக்தியுடையவன் பேச்சில் சாதுரிய விசனி தாய் வருக்கத்தாருடைய பொருள் உதவி பெறுவான் அரசாங்க உத்தியோக வருமானமுள்ளவன், மனைவி மக்கள் பந்து மித்திரர்களோடு கூடி சுக ஜீவியாய் தனவானாய் வாழ்வான்.

## விருச்சிக லக்கினத்திற் பிறந்தோர்களது பலா பலன்கள்

ஜனன லக்கினத்தில் சூரியன்-சந்திரன்-புதன் குரு-செவ்வாய், சத்துரு ஸ்தானத்தில் சனி-இராகு, தனவாகுஸ்தானத்தில் சுக்கிரன் அமைந்துள்ள ஜாதகன் வித்தையிற்சமர்த்தன் புராணபிரசங்கி, வாயாடி என்று பெயர் படைப்பான், வாக்கு சாதுரியத்தினால் சகலரையும் கட்டுப்படுத்துந் தன்மையன். அரசாங்க உத்தியோக அதிகாரத்தால் மிகுந்த பொருள் சேகரிப்பான், தனதான்ய சம்பத்தோடு காணி பூமி நிலம் வீடு மனை முதலிய பூஸ்தியோடு, மனைவிமைந்தர் பந்துமித்திரர்கள் சூழ்ந்திருக்க பெருந்தன்மையான கீர்த்தியோடு உலகத்தில் வாழ்வான்.

ஜனன லக்கினத்தில் சந்திரன்-குரு திரஸ்தானமாகிய மகரத்தில் கேது-சூரியன்-புதன், சுகஸ்தானமாகிய கும்பத்தில் அங்காரகன், விரயஸ்தானமாகிய கன்னியில் சனி-ராகு மேஷத்தில் கேதுவுமிருந்தால் அந்த ஜாதகன் கல்வி அறிவில்லாத கசடன், ஆயினும், கைத்தொழிலினால் பொருள்பெற்று, உலகத்தில் ஜீவிப்பான், மனைவிமைந்தர்களோடு கூடியிருந்தாலும், சதாகாலம் வறுமை பிணியோடே வாழ்வான்.

ஜனன லக்கினத்தில் செவ்வாய்-சூரியன்-புதன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சுக்கிரன் சந்திரன் விரயஸ்தானத்தில் கேது, சத்ரு ஸ்தானத்தில் சனி, பாக்கிய ஸ்தானத்தில் குரு அமைந்துள்ள ஜாதகன், வெகுசமர்த்தன், அரசாங்க உத்தியோகத்தில் அமர்வான், வியாபாரத் துறையில் பொருள் சேகரிப்பான், பூஸ்திதியுடையவன். மனைவி மக்கள் பந்துமித்திரர்களோடு கூடி வாழ்வான் சகல ராலும் போற்றத்தக்கவன்.

## தனுசு லக்கினத்திற் பிறந்தோர்களது பலா பலன்கள்

ஜனன லக்கினத்தில் குரு-புதன்-சூரியன்-சந்திரன், தனகுடும்ப வாக்குஸ்தானமாகிய மகரத்தில் அங்காரகன் (உச்சம்) சனி-(ஆட்சி) விறயஸ்தான மாகிய விருச்சிகத்தில் இராகு (உச்சம்) ரிஷபத்தில் கேது, அமைந்துள்ள ஜாதகன். கல்விகற்றவன், புராணப் பிரசங்கி, வித்யாசமர்த்தன், கல்விகேள்வி களில் பண்டிதனெனக் கீர்த்திபெற்றவன் பரத நாட்டியத் திலும் சங்கீதத்திலும் தேர்ச்சி பெற்றவன், அரசாங்க உத்தியோகத்திலும் வியாபாரத்திலம், பொருள் சேகரிப்பவன் காணியாட்சி யுடையவன், பூஸ்திதி பெற்றவன், மனைவி மக்கள் பந்து மித்திரர்களோடு பெரிய குடும்ப பாரத்தைச் சுமந்துவாழ்பவன்.

சத்துரு ஸ்தானத்தில் குரு, விறய ஸ்தானத்தில் சனி, இலக்கினத்தில் ராகு, சப்தமஸ்தானத்தில் கேது அஷ்டம ஸ்தானத்தில் சூரியன்-சுக்கிரன்-புதன் பாகியஸ் தானமாகிய சிம்மத்தில் சந்திரன், அமைந்த தனசுலக்கின ஜாதகன், பல விதமானகஷ்ட நஷ்டங் களை அடைவான், வறுமைப்பிணியால் வருந்துவான், மனக்கிலேசம், பொருந்தியவன், சோம்பல் அவனை விட்டு நீங்காது, தொழில் அகப்படாமல் வருந்துவான்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அன்னவஸ்திரத்துக்கே பஞ்சமாய் அலைவான்.

தனுசுலக்கினமே ஜனன லக்கினமாய், அதில் புதன்-சூரியன்-குரு-சந்திரன், புத்திரஸ்தானமாகிய மேஷத்தில் செவ்வாய், விரய ஸ்தானமாகிய விருச்சிகத்தில் கேது (உச்சம்) சத்துரு ஸ்தானமாகிய ரிஷபத் தில் சனி ராகு அமைந்துள்ள ஜாதகன், மஹாகீர்த்தி வான், உத்தமமான களத்திரத்தை அடைந்து, சத்புத்திரர்களைப்பெற்று செல்வந்தனாய், கீர்த்தி பெற்று வாழ்வான், வர்த்தகம் செய்வான், ஆள் அடிமை வாகனம் பூஸ்திதி பொருந்தி வாழ்வான்.

## மகர லக்கினத்தில் பிறந்தோர்களது பல பலன்கள்

ஜீவனஸ்தானத்தில் சனி (உச்சம்) ஜனன லக்கினத்தில் சூரியன், தனகுடும்ப வாக்குஸ்தானமாகிய கும்பத்தில் புதன்-சுக்கிரன்-சந்திரன், ஜனன லக்கினத்தில் அங்காரகன் (உச்சம்) விரயஸ்தானமாகிய தனுசில் கேது சத்துரு ஸ்தானமாகிய ரிஷபத்தில் ராகு அமைந்துள்ள ஜாதகன் வித்யா சமர்த்தன், சகல சாஸ்திர பண்டிதன், புராணப் பிரசங்கி சிற்ப சாஸ்திர வல்லவன்சகோதரவாஞ்சை பெற்றவன் மனைவீடு ஆலயம் கட்டும் சிற்பத்தொழிலில் சிறந்தவன் ராஜாங்க உத்தியோகம் செய்து பெரும் பொருள் சம்பாதிப்பவன் மாளிகைவீடுகளை முதலிய பூஸ்திதியுடையவன் கீர்த்தி பிரகாசம் பொருந்தியவன் பிரபுத் தன்மை யோடு வாழ்வான்.

தவிர மிதுனத்தில் சூரியன் சுக்கிரன் சந்திரன் ரிஷபத் தில் புதன் செவ்வாய் சிம்மத்தில் சனி ஜனன லக்கினமாகிய மகரத்தில் ராகு இரிஷபத்தில் கேது அமைந்துள்ள ஜாத

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கன் மனைவி மைந்தரில்லாமலும் பந்து மித்தரர்களிடம் பகைமை கொண்டு அன்ன வஸ்திரத்துக்கு ஆதரவில்லாமலும் வறுமைப்பிணியால் மஹாதுக்க சாகரத்தில் அழுந்துவான்.

ஜனன லக்கினமாகிய மகரத்தில் சனி கும்பத்தில் புதன் சுக்கிரன் மீனத்தில் சூரியன் மேஷத்தில் செவ்வாய் ரிஷபத்தில் சந்திரன் (உச்சம்) மிதுனத்தில் ராகு தனுசில் கேது கடகத்தில் குரு துலாத்தில் சனி (உச்சம்) இவ்வாறாக அமைந்த ஜாதகன் சுறுசுறுப்பு மனோ தைரியம் வித்யா பிவிருத்தி விவேகியென்று எல்லோராலும் புகழ்ந்து ரைக்குந் தன்மை சாஸ்திர ஆராய்ச்சி புராணாடன சமர்த்து சங்கீதம் ஜோதிஷம் முதலான வித்தையில் தேர்ச்சி அரசாங்க உத்தியோகம் மனைவி மைந்தர் பந்து மித்திரர்களோடு கூடி குலாவிச்சந்தோஷித்தல் தனதான்ய சம்பத்து வீடு மனைநிலம் முதலிய பூஸ்திதியோடு மேன்மையாக வாழ்வான்.

## கும்ப லக்கினத்திற் பிறந்தோர்களது பலா பலன்கள்

ஜனன லக்கினத்தில் சனி (ஆட்சி) மீனத்தில் குரு செவ்வாய் சந்திரன் மேஷத்தில் சூரியன் ரிஷபத்தில் சுக்கிரன் மகரத்தில் ராகு கடகத்தில் கேது அமைந்துள்ள ஜாதகன் மனோதைரியம் வித்யாபி விருத்தி விவேகம் ஞானம் பகவத் பத்திவியாபார விருத்தி உத்தியோக சம்பத்து சகோதரர்கள் சகாயம் செல்வந்தன் வீட்டுக்குத் தலைமைக் காரியம் பார்த்தல் மனைவி மக்கள் பந்து மித்திரர்களின் கூட்டுறவு பொன் பொருள் பூஸ்திதி முதலிய சகல சம்பத்தோடு சுகஜீவியாய் வாழ்வான்.

ஜெனன லக்கினத்தில் சூரியன் இராகு மகரத்தில் குரு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சுக்கிரன் புதன் மீனத்தில் செவ்வாய் சந்திரன் சிம்மத்தில் கேது அமைந்த ஜாதகன் சதா நுக்கி மனைவி மைந்தர் அபாவம் பந்து மித்திரர்பகை அடிக்கடி ஸ்தானப் பிரஷ்டம் மனோஅலைச்சல் சபலபுத்தி மனக்கலக்கம் சரீர மெலிவு அன்னவஸ்திர அபாவம் முதலிய பலவித கஷ்டங்களை அநுபவிப்பான்.

ஜெனன லக்கினத்தில் சனி மீனத்தில் குரு செவ்வாய் சூரியன் இரிஷபத்தில் சந்திரன் மகரத்தில் கேது கடகத்தில் ராகு அமர்ந்துள்ள ஜாதகன்வித்யா சமர்த்தன் எத் தொழிலி லும் சூக்ஷ்மபுத்தி அரசாங்க உத்தியோகம் வியாபாரப் பெருக்கு அதனால் திரவிய பொருள் சேகரம் பொன் பொருள் காணி பூமி முதலிய அந்தஸ்தோடு மனைவி மக்கள் பந்து மித்திரர்யாவரும் புகழத்தக்க பெருமை வாய்ந்து ஜீவிப்பான்.

## மீன லக்கினத்திற் பிறந்தோர்களது பால பலன்கள்

ஜெனன லக்கினத்தில் குரு சுக்கிரன் மேஷத்தில் சூரியன் புதன் ரிஷபத்தில் சந்திரன் மகரத்தில் சனி செவ்வாய் கும்பத்தில் ராகு சிம்மத்தில் கேது அமர்ந்துள்ள ஜாதகன் முகவசீகரம் தேக காந்தி கண்டோர் ஆனந்திக்கும் படியான அழகு கல்விப் பெருக்கு வியாபக சக்தி அறிவு விளக்கம் வித்யாசமர்த்து அரசாங்க உத்தியோகம் வியாபார தந்திரம் முதலிய குணங்களைப் பெற்று சற்புத்திரியை மணந்து நற்குண புத்திரர்களைப் பெற்று பந்து மித்திரர்களோடு கவுரவமாகவும் மனோல்லாசமாகவும் மனை வீடு நிலம் முதலிய பூஸ்திதியுடன் மேன்மையாய் வாழ்வான்.

**சோதிட மர்மம் இரண்டாம் பாகம் முற்றிற்று**

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## அகஸ்தியர் மாந்திரீக காவியம் ஆயிரம்

அகஸ்தியர் பன்னிராயிரம் என்னும் தமது பெருநூல் காவியத்தில் மறைந்து இருந்த மாந்திரீக காவியம் தங்களுக்காக சிறந்த முறையில் அச்சுக்கோர்த்து வழங்கியுள்ளோம். இன்றே உங்கள் பிரதிக்கு முந்துவீர்,

விலை ரூ.40

## நந்திவாக்கியம்

ஸ்ரீ திருநந்திகேசுவரர் பரிக்ஷித்து மகபதிக்கு திருவாய்மலர்ந்தருளிய நந்திவாக்கிய என்னும் இந்நூல் பாலக்காடு ஜோசியர். ஆர். அப்புசாமி பிள்ளை அவர்களால் எழுதியதை உங்களுக்காக பிரசுரித்துள்ளோம். விலை ரூ.50

## வைணவ பெருமக்கள் விரும்பும் வைஷ்ணவ நூல்கள்

| | |
|---|---|
| திருப்பாவை | ரூ.4.00 |
| திருப்பாவை, திருவெம்பாவை | ரூ. 3.00 |
| திருப்பாவை சித்திர படங்களுடன் உரையுடன் | ரூ. 10.00 |
| திருமாலை | ரூ. 3.00 |
| பிரபந்த தத்துவ திரட்டு | ரூ. 20.00 |
| ஸ்ரீ ரங்க மகத்துவம் | ரூ. 15.00 |
| துலாகாவேரி புராணம் | ரூ. 15.00 |
| 30 சில்லரை கோர்வை | ரூ. 15.00 |
| 20 சில்லரை கோர்வை | ரூ. 15.00 |
| கோல புத்தகம் | ரூ. 5.00 |
| எரிந்தகட்சி லாவணி | ரூ. 10.00 |
| எரியாகட்சி லாவணி | ரூ. 10.00 |

## எமது பழைய பிரசித்தி பெற்ற புதுப்பித்த நூல்கள்

| | |
|---|---|
| மலையாள மகமாயி அம்மன் புசாலிப்பாடல் | ரூ. 20.00 |
| குறவன் குறத்தி பாடல், காமிக் பபூன் பாடல், நாடக அளங்கார பாட்டு | (துலா) ரூ.5.00 |
| வீமகவி | ரூ. 16.00 |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கடவுள் துணை

# நந்தி தேவர் அருளிய

# சோதிட மர்மம்

(சோதிடர் உதவியின்றி கற்கும் முறை)

(மூன்றாம் பாகம்)

நூலாசிரியர்

**S. ரெங்கநாதராவ்**

ரிடையர்டு ரயில்வே கிளார்க்

181, மேலசித்திரை வீதி, ஸ்ரீரங்கம்

**சண்முகானந்தா புக் டிப்போ**

புதிய எண். 46, (பழைய எண். 67)

T.K. முதலி தெரு, சூளை,

சென்னை - 600 112.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## குரு சிஷ்ய சம்பாஷணை என்னும் ஹஸ்தரேகை சாஸ்திரம்

ஜோதிடக் கலைகளுள் உயர்ந்ததும், உண்மையானதும் கைரேகைக் கலையாகும். அதனுள் மறைந்து கிடக்கும் பல கிடைத்தற்கரிய மாபெரும் நுணுக்கங்களை. மிக எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம், பல நூற்றுக்கணக்கான படங்களுடன் விளக்கி வெளியிடப் பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக ஆசிரியர், மாணவரிடையே கேள்வி பதில் ரூபத்தில் வெளியிட்டுள்ளது. கைரேகை நூல்களிலே முதன் முறையாகும்.

அழகிய முகப்புடன் விலை ரூ. 40-00

---

## பரமசிவனால் பார்வதிக்கு உபதேசித்த சொர்பன பலன் என்னும் கனவு சாஸ்திரம்

நினைவே கனவு என்பது ஆன்றோர் அனுபவமும் சாஸ்திர வாக்குமாகும். கருதி, யுக்தி அனுபோகம் முதலியவற்றாலும் ஒருவர் நினைவில் உள்ளனவே அதிகமாக கனவில் தோன்றுகின்றன. கனவுகள் உண்டாதல் அவரவரின் விதிகளை அறிவிப்பதாகும். இவை போன்ற அனேக விஷயங்கள் நம் முன்னோர்களால் ஆராய்ந்து அனுபவித்தவை யாவும் இந்நூலில் அடங்கியிருக்கிறது.

விலை ரூ. 20-00

---

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

# முகவுரை

உலகில் சாக்ஷாத் (பிரம்மதேவர்) கடவுள் ஜீவ ராசிகளையும் மனிதர்களையும் உண்டு பண்ணி அதுவும் மனிதர்களுக்கு அறிவு புகட்டி. அவர்கள் வம்சம் விருத்தி அடைய ஆண் பெண் என்று இருபாலர்களை சிருஷ்டித்து இருக்கிறார். ஆயினும் மனிதர்களில் பெண்ணுக்குத்தான் மகிமை ஜாஸ்தி சக்தி இல்லையென்றால் சிவன் இல்லை. சிவன் இல்லை என்றால் சக்தி இல்லை. இதனால் ஓர் பெண் குழந்தை பிறந்தவுடன் உலகத்தில் பெண்ணா? என்கிறார்கள். ஏனென்றால் பெற்றோர்களுக்கு ஓர் பெண் குழந்தை பிறந்தவுடன் கடைசி வரையில் அவளை காப்பாற்ற வேண்டிய கடமை ஏற்பட்டு விடுகிறது. இதுவும் சில காலந்தான் பிறகு விவாஹம் ஆனவுடன் பெண்களுக்கு குடும்ப பொறுப்பு ஏற்பட்டு விடுகிறது. பெண்கள் புத்திசாலி ஆண்களை பெருமைப் படுத்துகிறவர்கள் குழந்தைகளையும் குடும்பத்தையும் சிக்கனமாக செலவு செய்து நன்கு கவனிக்கப் பட்டவர்கள். ஆனால் அவர்களை தக்க முறையில் ஆரம்பத்திலேயே திருத்தி ரக்ஷிக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுடைய கடமை.

ஓர் பெண் குழந்தை பிறந்தவுடன் 5 வயதுவரையில் தாயார் காப்பாற்றி வருவதுடன் தவிர முக்கியமாக 13 வயதுக்கு மேல் 18 வயது வரையில் பெற்றோர் இருவரும் அவர்களை நல்ல முறையில் அதாவது அன்பு அடக்கம் பழக்கவழக்கம் பக்தி படிப்பு தையல் வீட்டுவேலை இவைகளில் நன்றாககற்பித்து கொடுத்து தக்க வயதில் அதாவது 21 வயதுக்கு மேல் அவர்கள் மனதுக்கு இசைந்த நல்ல குணம் வம்சம் கோத்திரம் (மனைவியை) ரக்ஷிக்க கூடிய திடகாத்திர சம்பாத்திய முன்னவனும் வறுமையுமில்லாதவனுமான 25 வயது [illegible]

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

விவாஹம் செய்து கொடுத்து விட்டால் பெண்களை விட சாமார்த்தியம் பெருமை பொறுப்புள்ளவர்கள் வேறு ஒருவரும் இல்லை.

இதற்குதான் கோத்திரம் அறிந்து பெண் கொடு என்று தொன்று தொட்டு பெரியோர்கள் வசனம் இருந்து வருகிறது. இதை பெற்றோர்கள் அலக்ஷியம் செய்து வருகிறார்கள் நடுவில் வறுமையும் ஏற்பட்டு விடுகிறது. பிறகு கஷ்டப்படுகிறார்கள்.

## பெண்களின் முதற்கடமை

பெண்கள் தங்கள் நித்திரையை விட்டு எழுந்தவுடன் தம் கணவரின் ஆயுள் விருத்திக்காக கடவுளை பிரார்த்திக்க வேண்டும். கோலம் இட்ட பின்பே தம் கணவனை எழுப்ப வேண்டும். ஒரு போதும் சூரிய உதயமான பின்பும் எஜமானர் புருஷர் வெளியே போன பின்பும் முற்றத்தில் சாணம் தெளுத்தல் கோலம் போடுதல் கூடாது. இது தரித்திரம் உண்டாகும்.

பிறகு ஸ்நான பானாதிகள் முடித்து விநாயகர் அல்லது லக்ஷிமி அல்லது துளசி அல்லது கௌரி அல்லது அவரவர்களுக்கு இஷ்ட அம்பிகைக்கு விளக்கு ஏற்றி வைத்து பூஜை செய்து ஸ்தோத்தரம் முடித்து கொண்டு பிறகு சமையல் வேலை அல்லது மற்ற வேலைகளையும், குழந்தைகள், புருஷனையும் பெரியோர்களையும் கவனித்து வரவேண்டும். இது லக்ஷிமி கடாக்ஷம் உண்டாகும்.

மிகவும் ஏழைகளாக இருந்தால் மேல் சொல்லிய படி செய்ய முடியாமல் நேரிட்டால் காலையில் எழுந்தவுடன் பல் துலக்கிவிட்டு முகம் கழுவிவிட்டு தன் கணவனை நினைத்து பாதம் தொட்டு ஸ்மரணை செய்து விட்டு கடவுளை பிரார்த்தனை செய்து பிறகு வீட்டு வேலை செய்யவும் அல்லது வெளியில் வேலைக்குபோக உத்தமம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# பீடிகை

## விவாஹ விஷயம்

விவாஹம் என்பது எளிதானவிஷயமன்று. இது மானிட ஜன்மத்தின் ஆணாகிலும் சரி பெண்ணாகிலும் சரி பிற்காலத்தில் விவாஹம் ஆனபிறகு அனுபவிக்க வேண்டிய சுக துக்கங்களை இருவரும் கூடி வாழுங்காலத்தில் ஆணுக்கு நேரும் சுக துக்கங்களை பெண்ணும் சேர்ந்து அனுபவிக்க வேண்டி வருகின்றது. ஆகையால் இருவரும் ஒரே அம்சமானதால் ஆண் சாகதத்தினால் பெண் சாதகத்துக்கும் பெண்சாதகத்தினால் ஆணுக்கும் ஒருவிதமான மாறுதல்கள் ஏற்படுவதால் இருவருடைய சாதகங்களை நன்றாக பரிசோதித்தறிந்து அவர்களின் பலா பலன்களை யூகிப்பது நல்லது. ஆகையால் ஆண் பெண் சாதகங்கள் மிக்க அவசியம்.

முதலில் விவாஹம் செய்வதற்கு முன்பு ஆண்பெண் இருவருடைய மனம் பொருத்தம் அறிந்து பிறகு தான் சாதகம் பொருத்தம் பார்க்க முயல வேண்டும்.

ஆண் சாதகம் பார்ப்பது போல் பெண் சாதகமும் பார்க்க வேண்டும். ஆண் சாதகத்தில் என்ன பலன்கள் சொல்லப்படுகின்றதோ அதே பலன்கள் தான் பெண் சாதகத்திலும் சொல்லப்படுகின்றது இயற்கை அமைப்பில் ஆண்பெண் இருவருக்கும்சில முக்கியமான வித்தியாசங்கள் இருப்பது நமக்கு எல்லோருக்கும் தெரிந்த விஷயம் பெண்கள் பிரசவிக்கிறார்கள். இவர்களுக்கு குழந்தை உற்பத்தி செய்து வளர்வதற்கு கடவுள் கற்ப பையை பெண்ணுக்கு ஏற்படுத்தியிருக்கிறார். இவ்விதமான கற்ப பை ஆண்களுக்கு கிடையாது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இவ்வித கற்ப பைகளின் நல்ல ஸ்திதி கெட்ட

ஸ்திதி இவைகளை அறிய வேண்டுமானால் ஆண்சாதகத்துக்கு பொருந்தாத பிரத்தியேகமான விதிகளை பெண் சாதகங்களுக்கு உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது பொருந்தாத மாங்கல்ய ஸ்தானம் என்று மற்றொரு பிரத்தியேகமான ஸ்தானம் பெண்கள் சாதகத்தில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகையால் சில விஷயங்கள் ஆண்சாதகத்தினாலும் பொருந்திவரும். சிலது பொருந்திவராது ஆண்களுக்கு சொல்லப்படாத விஷயங்களை பெண் சாதகத்தினாலும் பெண்களுக்கு சொல்லப்படாத விஷயங்களை ஆண்சாதகத்தினாலும் அறிய வேண்டியிருக்கிறபடியால் இருவருடைய சாதகங்கள் மிகவும் அவசியம் மேற்படி ஆண் பெண் இருசாதகங்களை ஓர் நன்கு அறிந்த சோதிடரிடம் காண்பித்து பரிசோதித்து பலன்களை அறிந்து பிறகு விவாஹம் செய்வது உத்தமம்.

ஷை விஷயங்களை எல்லாம் நான் அநேக புஸ்தகங்களில் படித்து அதில் சொல்லப்பட்ட விஷயங்களை நன்கு அறிந்து சுலபமாக யாவரும் படித்து அறிந்து கொள்ள இந்த புஸ்தகத்தை எழுதியிருக்கிறேன் இந்த புஸ்தகம் யாவருக்கும் உபயோகமுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன். ஆதலால் யாவரும் இந்த புஸ்தகத்தை வாங்கி படித்து அதிலுள்ள விஷயங்களை நன்கு உணர்ந்து அதன்படி நடத்திவர மிகவும் கேட்டு கொள்ளுகிறேன். இதில் ஏதாவது குற்றம் குறைகள் இருந்தால் எனக்கு தெரிவிக்க கேட்டுக்கொள்கிறேன்.

ஷை புத்தகம் அச்சிட்டு யாவருக்கும் பயன்பட செய்த சென்னை "சண்முகானந்தா புக் டிப்போ" K.A. மதுரை முதலியார் அவர்களுக்கும் அவர் குமாரர் சிரஞ்சீவி K.M. பாலசுந்தர முதலியாருக்கும் என் மனமார்ந்த அன்பை செலுத்துகிறேன்.

அன்பன்,

**S. ரெங்கநாதராவ்,**

ரிடையர்டு, ரயில்வே கிளார்க்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

[illegible] வீதி,

ஸ்ரீரங்கம்

உ

விநாயகர் துணை

## நந்தி தேவர் அருளிய

# சோதிட மர்மம்

## (மூன்றாம் பாகம்)



## கணபதி ஸ்தோத்திரம்

ஓம் சிவா

குரு வாழ்க
குருநாதன் வாழ்க
எந்தன் வாழ்க
எவ்வானை மறந்தாலும்
விக்கினேஸ்வரனை நான் மறவேன்
ஓம் கணபதி-மஹா கணபதி
வல்ல மனோகரா
நான் நினைத்த காரியம்
அனுகூலசித்தியாக வேணும்.
ஓம்-கணேஸ்வராய நம:
ஓம்-கணேஸ்வராய நம:
ஓம்-கணேஸ்வராய நம:

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஸ்ரீ

# லக்ஷ்மி ஸ்தோத்திரம்

ஹரி : ஓம்

லக்ஷ்மி நம :

மஹாலக்ஷ்மி
தனலக்ஷ்மி
தான்யலக்ஷ்மி
ஸெள்பாக்கிய லக்ஷ்மி
சந்தான லக்ஷ்மி
கஜலக்ஷ்மி
வரலக்ஷ்மி
வீரலக்ஷ்மி

தாயே, உன்னை நான், துதிக்கின்றேன் என் கோரிக்கையை சீக்கிரம் நிறைவேற்றி கொடுக்க பிரார்த்திக்கின்றேன்.

இந்த லக்ஷ்மிஸ்தோத்திரம் கன்னி பெண்களுக்கு மிகவும் முக்கியம் சீக்கிரம் விவாஹம் ஆகும்.

ஆரம்ப தினம் ஓர் வெள்ளிக்கிழமை காலையில் குளித்துவிட்டு லக்ஷ்மிவிக்கிரஹம் அல்லது படத்தை வைத்து விளக்கேற்றி அதற்கு வெள்ளை மல்லிகை அல்லது அறளி அல்லது தாமரை புஷ்பத்தாலும் மஞ்சள் குங்குமம் வைத்து அர்ச்சித்து பால்பழம் பொங்கல் நைவேத்தியம் செய்து ஷெ லக்ஷ்மி ஸ்தோத்திரத்தை 108 தரம் ஜபம் செய்துவர சர்வகாரியம் கைகூடும் சீக்கிரம் விவாஹ பிராப்தி ஏற்படும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# ருது சாஸ்திரம்

## ருது மாதபலன்

சித்திரை-புருஷனுக்காகாது
வைகாசி-பதிவிரதை
ஆனி-சம்பத்துடையவள்
ஆடி-விபசார குணமுள்ளவள்
ஆவணி-சற்புத்திர பேறு
புரட்டாசி-தன முள்ளவள்
ஐப்பசி-புத்திர ஏற்பட்டு (விதவை)
கார்த்திகை-பலரை நேசிப்பவள்
மார்கழி-கெட்ட நடத்தை
தை-பதிவிரதை
மாசி-பொருள் நஷ்டம்
பங்குனி-வெகுபுத்திரவதி

## ருது திதி பலன்

பிரதமை-கன்னி
த்விதியை-அழகுள்ளவள்
திருதியை-சுகவதி
சதுர்த்தி-சத்துருடையவள்
பஞ்சமி-பாக்கியவதி (புத்திரபேறு)
ஷஷ்டி-ஆசாரமுடையவள்
சப்தமி புத்திரபேறு
அஷ்டமி-பெற்றிடிப்பாள்
நவமி-தரித்திரி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நசமி-தர்மிஷ்டி
ஏகாதசி-துக்கமுள்ளவள்
துவாதசி-பலமுள்ளவள்
திரயோதசி-கோபி
சதுர்தசி-சோரம்போவாள்
பௌர்ணமி-குணவதி
அமாவாசை குலத்தை கெடுப்பவள் தரித்திரம்

## ருது வாரபலன்

ஞாயிறு-புத்திர தோஷமுள்ளவள்
திங்கள்-பதிவிரதை
செவ்வாய்-விதவை
புதன்-சற்புத்திரபேறு
வியாழன்-தனமுள்ளவள்
வெள்ளி-சுகமுள்ளவள்
சனி-தரித்திரம்

## ருது லக்கின பலன்

மேஷம்-விபசாரி
ரிஷபம்-சுகபோகி(கன்னி)
மிதுனம்-சம்பத்துஉடையவள்
கடகம்-விபசாரி
சிம்மம்-புத்திர பேறு
கன்னி-சுகபோகி
துலாம்-புத்திரவதி
விருச்சிகம்-பிற ஸ்திரி
தனுசு-பதிவிரதை (கன்னி)
மகரம்-கற்புடையவள்
கும்பம்-பொருளுடையவள்
மீனம்-புத்தியுடையவள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# ருது நக்ஷத்திர பலன்

அஸ்வதி-விதவை
பரணி-புத்திரவதி
கிருத்திகை-மலடி
ரோஹிணி-நன்மை
மிருகசிரம்-இனியவள்
திருவாதிரை-வெறுப்புள்ளவள்
புனர்வசு-சுகியுடையவள்
பூசம்-தனமுள்ளவள்
ஆயில்யம்-கபடி
மகம்-பர்த்தா பிரியம்
பூரம்-மலடி
உத்திரம்-சுகமுடையவள்
ஹஸ்தம்-நல்லவள்
சித்திரை-அறிவுள்ளவள்
ஸ்வாதி-குடும்பி
விசாகம்-விதவை
அனுஷம்-ரோகி
கேட்டை-பரஸ்திரி
மூலம்-பாலுடையவள்
பூராடம்-அடிமை
உத்திராடம்-தர்மிஷ்டி
திருவோணம்-பாக்கியமுள்ளவள்
அவிட்டம்-சம்பத்து
சதயம்-தரித்திரி
பூரட்டாதி-நல்ல நடையுள்ளவள்
உத்திரட்டாதி-ஸ்ரீமதி
ரேவதி-போகி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குறிப்பு : துஷ்ட நக்ஷத்திரங்களில் ருதுவானால் ஆகாத மாதங்கள்

| | |
|---|---|
| பூரம்<br>பூராடம்<br>பூரட்டாதி<br>பரணி<br>ஆயில்யம் | 6 மாதம் தோஷம்<br>இந்த நக்ஷத்திரங்களுடன்<br>ஞாயிறு செவ்வாய் சனி வாரங்கள்<br>கூடினால் ஒரு வருஷம் வரையில்<br>தோஷம் |
| கிருத்திகை<br>திருவாதிரை<br>புனர்வசு<br>மகம்<br>கேட்டை | 3 மாதம் தோஷம்<br>இந்த நக்ஷத்திரங்களுடன்<br>ஞாயிறு செவ்வாய் சனி வாரங்கள்<br>கூடினால் 5 மாதம் வரையில்<br>தோஷம் |

ஷெ குறித்த காலங்கள் வரை தம்பதிகள் ஒருவரை ஒருவர் விலகியிருத்தல் உத்தமம்.

# நாம நக்ஷத்திர விபரம்

ஏற்கனவே முதல் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது ஜன்ம நக்ஷத்திரம் தெரியாதவர்கள் தங்கள் பெயர் எழுத்தின் "முதல்" எழுத்தைக் கொண்டு நக்ஷத்திரம் அறிய விபரம் அட்டவணை.

அதாவது சுப்பிரமணியன் சூரியா லீலாவதி லீலா அல்லது சு(அ) சூ-லீ என்று வைத்துக்கொண்டு கீழ்க்கண்டபடி நக்ஷத்திரம் குறிக்கவும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# நாம நக்ஷத்திரங்கள்

| நக்ஷத்திரம் | பாதங்கள் 1 | 2 | 3 | 4 | நூதன எழுத்துக்கள் |
|---|---|---|---|---|---|
| அஸ்வினி | சு | சே | சோ | ல | சு-சூ-செ-சே |
| பரணி | லி | லு | லே | லோ | லொ லோ லௌ |
| கிருத்திகை | ஆ | ஈ | ஊ | ஏ | அ ஆ இ ஈ |
| ரோகிணி | ஓ | வா | வி | வு | வ வா வி வீ |
| மிருகசீரிஷம் | வே | வோ | கா | கி | வெ வே வை |
| திருவாதிரை | கூ | ங்க | ஞு | ச | கு கூ கௌ |
| புனர்பூசம் | கே | கோ | ஹ | ஹி | கெ கே கை |
| பூசம் | ஹு | ஹே | ஹோ | ட | கொ கோ கௌ |
| ஆயில்யம் | டீ | டு | டே | டோ | டெ டே டை |
| மகம் | மா | மீ | மு | மே | ம மா மி மீ மு மூ |
| பூரம் | மோ | டா | டி | டு | மொ மோ மௌ |
| உத்திரம் | டே | டோ | பா | பி | ப பா பி பீ |
| ஹஸ்தம் | பூ | ஷ | ந | ட்டா | ப பூ |
| சித்திரை | பே | போ | ரா | ரி | பெ பே பொ போ |
| ஸ்வாதி | ரு | ரே | ரோ | த | த தா தே |
| விசாகம் | தீ | து | தே | தோ | தி தீ து தூ தெ |
| அனுஷம் | நா | நீ | நு | நே | ந நா நி நீ நு நூ |
| கேட்டை | நோ | யா | இ | யூ | நெ நே நை |
| மூலம் | ஏ | யோ | ப்பா | ப்பீ | யு யூ |
| பூராடம் | பூ | தா | பா | ட | உ ஊ எ ஏ ஐ |
| உத்திராடம் | பெ | பே | ஜ | ஜீ | ஒ ஓ ஔ |
| திருவோணம் | ஜு | ஜெ | ஜோ | க | க கா கி கீ |
| அவிட்டம் | க | கி | கு | கே | ஞு ஞா ஞீ |
| சதயம் | கோ | ஸா | ஸீ | ஸு | தொ தோ தௌ |
| பூரட்டாதி | ஸே | ஸோ | தா | தி | தொ தோ தௌ |
| உத்திரட்டாதி | து | ஸ | த்தா | தி | யா க |
| ரேவதி | தே | தோ | ச்சா | ச்சி | ச சா சி சீ |

குறிப்பு:- ஆண்-பெண் இருவருக்கும் ஜன்ம நக்ஷத்திரம் தெரியாது போனால் முதல் எழுத்தைக் கொண்டு சாதகம் பொருத்தம் பார்க்கவும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# விவாஹ பொருத்தம்

முக்கிய கவனிப்பு:-

விவாஹ பொருத்தங்களுக்கு முதலில் ஸ்திரி புருஷர் களுடைய ஜன்ம நட்சத்திரம் தெரிய வேண்டும் இது தெரியாதவர்களுக்கு அவரவர்களுடைய பெயரின் "முதல்" எழுத்திற்குறிய நாம நக்ஷத்திற்குறிய நக்ஷத்திர்த்தை கொண்டும் பொருத்தம் பார்க்கலாம் (இதற்கு நாமநக்ஷத்திர அட்டவணையை பார்க்க.

இருவருடைய சாதக குறிப்பு இருந்தால் ஜன்ம நக்ஷத்திரத்தை கொண்டு பொருத்தம் பார்ப்பது மிகவும் விசேஷம் பலன்கள் நன்கு அறியலாம்.

சாதகம் குறிப்பு இல்லாவிடில் புருஷருடைய ஜன்ம நக்ஷத்திரத்துக்கும் ஸ்திரியினுடைய நாம நக்ஷத்திரத்துக் கும் பொருந்தினால் போதுமானது ஆனால் ஸ்திரியி னுடைய நாம நக்ஷத்திரத்துக்கும் புருஷருடைய ஜன்ம நக்ஷத்திரத்துக்கும் ஒரு காலமும் பொருத்தம் பார்க்கலாகாது.

மேலும் இருவருக்கும் நாம நக்ஷத்திரத்தை கொண்டு பார்ப்பது மிகவும் சிலாக்கியம், தம்பதிகள் சுகமாக வாழ்வார்கள் இன்னும் ஜன்ம நக்ஷத்திரம் தெரியாவிடில் ஸ்திரீயின் பெயர் மாற்றி அதற்குள்ள நக்ஷத்திரம் பொருத்தம் சரியாக இருந்தால் விவாஹம் செய்யலாம் அப்படி இல்லாவிடில் சொந்த பாத்தியம் விடாமல் அம்மான் அத்தை இவர்கள் சந்ததியாக நேர்ந்தால் தனாதி சுபா சுப பொருத்தங்கள் விசாரியாமல் சகுனாதிகளை மட்டும் கவனித்து விவாஹம் செய்யலாம் என்று பெரியோர்களால் சொல்லப்படுகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எல்லாவற்றிற்கும் மனம் பொருத்தம் முக்கியம் பிறகு சாதகம் பொருத்தம்.

ஸ்திரி புருஷர்களுடைய சாத்க ரீதியாக இருவருடைய ஜன்ம நக்ஷத்திரம் தெரிந்தால் (தசவிதம் 10 பொருத்தங்களும் பார்த்து இருந்துவிட்டால் மிக்க உத்தமம் சுபத்தைத் தரும்.

# தசவித (10) பொருத்தங்களின் விபரம் அதன் பலன்களும்

பொருத்தங்கள்:-

தினம்-சௌபாக்கியம் மங்களம் உண்டாக்கும்.

கணம்-ஐஸ்வர்யம் கொடுக்கும்.

மாகேந்திரம்-விசுவாசம் உண்டாக்கும்.

ஸ்திரி தீர்க்கம்-சௌபாக்கியத்தையும் ஆயுளையும் கொடுக்கும்.

யோனி-வெகுபுத்திரர்களை உண்டாக்கும் லாபம் தரும்.

ராசி-குல விருத்தியை உண்டாக்கும்.

ராசியாதிபதி நான்ய விருத்தியை ஏற்படுத்தும்.

வசியம்-வம்சவிருத்தி புத்திரர்கள் யோகத்தை கொடுக்கும்

ரஜ்ஜு-மாங்கல்ய விருத்தியை நீடிக்கும்.

வேதை-வெகு புத்திரர்கள் லாபம்.

நாடிபொருத்தம் அநேகர் பார்க்கிறது இல்லை,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குறிப்பு :-

| | | |
|---|---|---|
| பிராமணர்களுக்கு தினம் | | ராசியாதிபதி |
| க்ஷத்திரியர்களுக்கு கணம் | | அவசியம் |
| வைசியர்களுக்கு ராசி | | வேண்டும் |
| சூத்திரர்களுக்கு யோனி பொருத்தம் | | |

மேலே சொல்லப்பட்ட 10 பொருத்தங்களில் யாவருக்கும் தினம் கணம் யோனி ராசி ரஜ்ஜு முக்கியம்.

இதிலும் பிராமணர்களுக்கு தினமும் ராசி யாதிபதி கணம் ரஜ்ஜு முக்கியம் க்ஷத்திரியர்களுக்கு 8 பொருத்தங்களும் வைசியர்களுக்கு 6 பொருத்தங்களும் சூத்திரர்களுக்கு 4 பொருத்தங்களும் பொருந்தினால் போதுமானது விவாஹம் செய்யலாம் ரஜ்ஜு தட்டினால் செய்ய கூடாது என்று சாஸ்திரம் அறிந்த பெரியோர்கள் கூறுகிறார்கள் (ரஜ்ஜு விஷயம் விபரமாக பின்னால் பார்க்கவும்.)

இந்த 10 பொருத்தங்களும் சரிவராத போனால் சில நக்ஷத்திரங்களில் சுவாதி மிருகசிரம் மகம் அனுஷம் இந்த நக்ஷத்திரங்களில் புருக நக்ஷத்திரமாவது அல்லது ஸ்திரி நக்ஷத்திரமாவது ஒன்றாக இருந்தால் மிகவும் சிலாக்கியமானது என்று சாஸ்திரம் அறிந்த பெரியோர்கள் சொல்லி வருகிறார்கள் பலன் அளிக்கும் அதி உத்தமம் மிகவும் சிலாக்கியம்.

ஷ பொருத்தங்களில் பாதிக்கு மேல் பொருத்தங்கள் இருந்தாலும் யோக பலன்கள் ஆயுர் பாவம் மாங்கல்ய பாவம் புத்திர பாவம் செவ்வாய் தோஷம் பலன் களையும் நன்குபார்த்துசரியாக இருந்தால் விவாஹம் நடத்திடலாம் தம்பதிகள் சுகமாக வாழ்வார்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# தினப் பொருத்தங்கள்

சிலர் புருஷ நக்ஷத்திரமுதல் எண்ணவேண்டும், என்கிறார்கள் இதில் சில பலன்கள் சரிவராது ஆதலால் ஸ்திரி நக்ஷத்திரமுதல்தான் எண்ணவேண்டும்.

ஸ்திரி ஜன்ம நக்ஷத்திரம் முதல் புருஷஜன்ம நக்ஷத்திரம் 2 4 6 8 9 11 13 15 17 18 20 24 26வது ஆனால் உத்தமம் (12வது நக்ஷத்திரத்தில் 1ம் பாதமும், 14ம் நக்ஷத்திரத்தில் 4ம் பாதமும் 16ம் நக்ஷத்திரத்தில் 3ம் பாதமும் நீக்கி) மற்ற பாதங்கள் மத்தியமும் இதில் சொல்லாததும் அஷ்டம் ராசி நக்ஷத்திரங்களும் பொருந்தாது (இரட்டை பட்ட நக்ஷத்திரங்கள் விசேஷ சுபத்தை தரும்)

# தாரா பலன்

ஒவ்வொருவரும் தாம் பிறந்த நக்ஷத்திரத்திற்கு ஜன்ம நக்ஷத்திரமென்றும் அது முதலாக 9 நக்ஷத்திரங் கள் வரையில், முதல்பரியாயம் மெனவும், 10வது அநு ஜன்ம நக்ஷத்திர மென்றும், மறுபடியும் 9வது வரையில் இரண்டாம் பரியாயம் எனவும், 9வது த்ருஜன்ம நக்ஷத்திரமென்றும், 9வது வரையில் மூன்றாம் பரியாயம் என்றும், இந்த பரியாயம் மூன்றுக்கும்.

(1) அஸ்வதி-பரணி-கிருத்திகை-ரோகிணி மிருகசிரம் திருவாதிரை-புனர்வசு-பூசம்-ஆயில்யம் முதல் பரியாயம்.

(2) மகம்-பூரம்-உத்திரம்-ஹஸ்தம்-சித்திரை ஸ்வாதி விசாகம்-அனுஷம்-கேட்டை இரண்டாவது பரியாயம்.

(3) மூலம்-பூராடம்-உத்திராடம்-திருவோணம்- அவிட்டம்-சதயம் பூரட்டாதி-உத்திரட்டாதி-ரேவதி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மூன்றாம் பரியாயம்.

ஷெ பரியாயம் மூன்றுக்கும் 1-10-19 அதாவது அஸ்வதி-மகம்-மூலம் என்றபடி. பரணி முதலாக ஒவ்வொரு நக்ஷத்திரத்துக்கும் ஜன்மம் அனுஜன்மம் த்ரிஜன்மம் என்று அறியவும்.

இந்த மூன்று பரியாயங்களிலும் 9 நக்ஷத்திரங்களுக்கும் 1வது நக்ஷத்திரபலன் விபரம் (ஜன்மம்) தேகநாசம் 2வது நக்ஷத்திரம், ஸம்பத்து ஸம்பத்துண்டாகும் 3வது நக்ஷத்திரம் விபத்து ஆபத்துண்டாகும், 4வது நக்ஷத்திரம் க்ஷேம முண்டாகும் 5வது ப்ரத்தியரம் தனநாசம் 6வது ஸாதகம் காரியானுகூலம் 7வது வதம் நாச முண்டாகும் 8வது மைத்திரம் சிநேக முண்டாகும் 9வது பரம மைத்திரம் லாபம் தரும் இதன்படி ஒவ்வொருவரும் தம்முடைய ஜன்ம நக்ஷத்திர முதல் 1 3 5 7 10 12 வதில் முதல் பாதமும் 14 வதில் 4ம் பாதமும் 16 வதில் 3 ம் பாதமும் 19-22ல் 4ம் பாதமும் அதாவது ஜனனமான பாதமுதல் 88வது பாதம் 23வது நக்ஷத்திரம் ஆகும் 25-27 ஏக ராசியானால் கூடும்பின்ன ராசியானால் கூடாது. இதில் கண்டவைகளும் எட்டாவது ராசியையுடைய நக்ஷத்திரங்களும் தவிர மற்ற நக்ஷத்திரமுடைய தினத்தில் சகலவிதமான காரியங்களும் விவாஹமும் செய்யதகும்.

குறிப்பு :

மேற்கூறிய ஒன்பது நக்ஷத்திரங்களுள் தாரா பலன்களில் 3-5-7 ஆவது நக்ஷத்திரங்கள் தோஷ நக்ஷத்திரங்கள் என்றும் 2-1-8 ஆவது நக்ஷத்திரங்கள் மத்தியமம் என்றும் 6-4-9 என்றும் சொல்லப்படுகின்றது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இதிலும் 3-5-7 நக்ஷத்திரங்கள் புருஷநக்ஷத்திரமாக இருந்து மூன்றாம் பரியாயத்தில் வந்தால் தினப்பொருத் தம் உண்டு என்றும் இரண்டாம் பரியாயத்தில் வரும் போது 12வது நக்ஷத்திரத்தில் முதல்பாதமும் 14வது நக்ஷத்திரத்தில் நாலாம் பாதமும் 16வது நக்ஷத்திரத்தில் மூன்றாம் பாதமும் கூடாது மற்ற நக்ஷத்திர பாதங்கள் மத்தியமம் இந்தப்படி பார்த்து தினம் பொருத்தம் கூட்டவும்.

## 27-வது நக்ஷத்திரப் (பொருத்தம்)

புருஷ நக்ஷத்திரம் பெண்ணின் நக்ஷத்திரத்திலிருந்து எண்ணும் போது இவருடைய நக்ஷத்திரமும் ஒரே ராசி யில் இருந்தால் தினப் பொருத்தம் உண்டு. பின்ன ராசி யாக இருந்தால் விவாஹ பொருத்தமில்லை.

## ஏகதினப் பொருத்தம்

ரோகிணி திருவாதிரை பூசம் மகம் விசாகம் ஹஸ்தம் உத்திரம் திருவோணம் ரேவதி இவை 9 நக்ஷத்திரங்களும் ஸ்திரி புருஷர்களுக்கு ஒரே நக்ஷத்திரமானால் உத்தமம் 2 அசுபதி கிருத்திகை மிருகசிரம் புனர்வசு உத்திரம் சித்திரை அனுஷம் பூராடம் உத்திராடம் இவை 9 நக்ஷத்திரங்களும் மத்தியமம் மற்ற 9 நக்ஷத்திரங்கள் பொருந்தாது ஸ்திரி புருஷர்களுக்கு ஒரே ராசியானால் புருஷ நக்ஷத்திரம் முந்தினதும் மேற்படி ஒரே நக்ஷத்திர மானால் பாதம் முந்தினதும் சுபம் மற்றது பொருந்தாது.

## வேதனை நாசிக நக்ஷத்திர விபரம்

ஸ்திரி நக்ஷத்திரத்திற்கு புருஷ நக்ஷத்திரம் 7-வதும் புருஷ நக்ஷத்திரத்துக்கு ஸ்திரி நக்ஷத்திரம் 22வதாக வருவதை வதனை நாசிகம் என்றும் அப்படிக்கேற்படும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நக்ஷத்திரங்களுள் விவாஹம் செய்யக் கூடாதென்றும் சில நக்ஷத்திரங்கள் செய்யலாம் என்றும் சில நக்ஷத்திரங்கள் கூடாதென்பதற்கு பலனுடன் சொல்லப்படுகிறது.

அதன் விபரம்:-

**பெண்-ஆண்**

கிருத்திகை-ஆயில்யம்
ஆயில்யம்-ஸ்வாதி - இந்த நக்ஷத்திரங்களுக்கு
சித்திரை-பூராடம் - ஏற்படும் வதவை நாசி
அனுஷம்-அவிட்டம் - கம் மரணம் சம்பவிக்கும்
அவிட்டம்-பரணி - கூடாவே கூடாது
சதயம்-கிருத்திகை

கேட்டை-சதயம்
மிருகசிரம்-பூரம் - தரித்திரம், கூடாது
ஹஸ்தம்-மூலம் -

ரேவதி திருவாதிரை - வைரம் உண்டாகும்
உத்திரம்-கேட்டை - கூடாது

மகம்-விசாகம் கட்டபிள்ளை உண்டாகும் மத்தியமம் விசாகம்-திருவோணம் விரோதம் மத்தியமம் திருவோணம்-அசுபதி ஸ்திரி புருஷர் சண்டை விலகல் கூடாது.

உத்திரட்டாதி-மிருகசிரம் வைதவ்யம் ஏற்படும் கூடாது
உத்திராடத்திற்கு-ரேவதி போகம் உண்டாகும் மத்திய்மம்

அசுபதி-புனர்வசு | ஸ்திரி பிரஜை உண்டாகும் மத்
சுவாதி-உத்தமம் | தியமம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# வதலை நாசிக நக்ஷத்திரம்

பெண் ஆண்

திருவாதிரை-உத்திரம் | சுகத்தை தரும் சேர்க்க

பூரம்-அனுஷம் | லாம் உத்தமம்

பூசம்-சித்திரை |

புனர்பூசம்-ஹஸ்தம் வம்சவிருத்தி உத்தமம்.

ரோஹிணி-மகம் | புத்திரலாபம் உத்தமம் சம்

பூரட்டாதி-ரோஹிணி | பத்து உண்டாகும் உத்தமம்

மூலம்-பூரட்டாதி |

பூராடம்-உத்திரட்டாதி விசுவாசம் விருத்தி உத்தமம் பரணி-பூசம் சௌக்கியம் உத்தமம்.

குறிப்பு :-

முன் சொன்ன நக்ஷத்திரம் ஸ்திரி நஷத்திரமும் பின் சொன்ன நஷத்திரம் ஆண் நக்ஷத்திரமாக கணக்கிடவும் இதன்படி சுபா-சுப பலனை அறிந்து விவாஹம் செய்விக்கலாம் மேலும் தினம் பொருத்தம் பார்க்கும் விசயத்தில் சில நஷத்திரங்கள் கூடும் என்றும் சில நஷத்திரங்கள் கூடாது என்றும் அநேகர் சொல்லி விவாஹத்தை கெடுத்து விடுகிறார்கள் அதாவது பரணி உத்திராடம் அவிட்டம் மூலம் விசாகம் ஆயில்யம் கேட்டை இவைகளில் (பெண் நக்ஷத்திரங்களில்) பரணியில் பிறந்தவள் தரணியாள்வாள் உத்திராடத்திற் பிறந்தவள் சிரேஷ்டமானவள் அவிட்டத்தில் பிறந்தவள் தவிட்டை தொட்டாலும் பொன் மற்ற நக்ஷத்திரங்களில் பெண்மூலம் முதல் பாதமானால்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மாமனாருக்கும் ஆயில்யம் முதல் பாதமானால் மாமியாருக்கும் கேட்டை முதல் பாதமானால் மூத்த சகோதரனுக்கும் விசாகம் 4ம் பாதமானால் இளைய சகோதரனுக்கும் தோஷம் கூடாது ஷெ நக்ஷத்திரங்கள் புருச நக்ஷத்திர மானால் தோஷமில்லை விவாஹம் செய்யலாம். ஆண் மூலம் அரசு ஆளும் ஒரு பெண் மூலம் நக்ஷத்திரத்தில் பிறந்தால் அவளுடைய தகப்பன் சீக்கிரம் இறப்பான்.

குறிப்பு :-

மேல் சொல்லிய நக்ஷத்திரங்களில் தினப் பொருத்தத்தில் பெண் சாதகப்படி தோஷம் இருந்தாலும் மற்ற இருவருடைய சாதகப்படி யோகபாவம் ஆயுர்பாவம் மாங்கல்ய பாவம் இவைகள் சரியாக இருந்தால் இந்த நக்ஷத்திர அபவாதம் விலகிவிடும் பார்த்து கூட்டவும்.

# கணம்-பொருத்தம்

அசுபதி-மிருகசிரம்-புனர்வசு-பூசம்-ஹஸ்தம், சுவாதி-அனுஷம்-திருவோணம்-ரேவதி இந்த 9 நக்ஷத்திரங்களும் = தேவகணம்.

பரணி-ரோகிணி-திருவாதிரை-பூரம்-உத்திரம்-பூராடம்-உத்திராடம்-பூரட்டாதி-உத்திரட்டாதி இந்த 9 நக்ஷத்திரங்களும் = மனுஷயகணம்.

கிருத்திகை-ஆயில்யம்-மகம்-சித்திரை-விசாகம் கேட்டை -மூலம் -அவிட்டம்- சதயம் இந்த 9 நக்ஷத்திரங்களும் = ராக்ஷசகணம்.

ஸ்திரி புருஷர்களுக்கு ஒரே கணமானால் உத்தமம் பெண்மனுஷ கணமானாலும் புருஷன் தேவ

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கணமானால் உத்தமம் சேர்க்கலாம்.

ஸ்திரி தேவகணம் புருஷன் மனுஷகணம் மத்யமம் ஸ்திரி மனுஷகணம் புருஷன் ராக்ஷசகணம் ஆனால் அதமம் ஸ்திரிராக்ஷசகணம் புருஷன்மனுஷ கணமானால் உத்தமம் கூடாது.

ஸ்திரி ராக்ஷசகணம் புருஷன் மனுஷகணமாக இருக்கும் போது புருஷ நக்ஷத்திரம் 14க்கு மேல் ஸ்திரி நக்ஷத்திரம் வருமாகில் ஸ்திரி ராக்ஷசம் இல்லை விவாஹம் செய்யலாம் பலன் சோபனாகரம்.

## மாகேந்திரம்

ஸ்திரி ஜன்ம நக்ஷத்திரம் முதல் புருஷ ஜன்ம நக்ஷத்திரம் வரை எண்ண 4-7-10-13-16-19-22-25வது ஆக வந்தால் பொருந்தும் இல்லாவிடில் பொருந்தாது. பலன் புத்திர விருத்தி ஆயுள் ஆரோக்கியம் உண்டாகும்.

### ஸ்திரிதீர்க்கம்

ஸ்திரி ஜன்மநக்ஷத்திரமுதல் புருஷ ஜன்ம நக்ஷத்திரம் வரை எண்ண 13க்கு மேல்புருஷ நக்ஷத்திரம் வந்தால் உத்தமம் 7க்கு மேல் மத்தியமும் மற்றவை பொருந்தாது பலன் இது சகல சம்பத்தை தரும்.

## யோனி பொருத்தம்

ஆண் பெண்

அஸ்வதி-சதயம்-குதிரை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பரணி-ரேவதி-யானை
பூசம்-கிருத்திகை-ஆடு
ரோகிணி-மிருகசிரம்-பாம்பு
திருவாதிரை-மூலம்-நாய்
ஆயில்யம்-புனர்வசு-பூனை
மகம்-பூரம்-எலி
உத்திரம்-உத்திரட்டாதி-எருது-பசு
ஸ்வாதி-அஸ்தம்-கிடா-எருமை
சித்திரை-விசாகம்-புலி
கேட்டை-அனுஷம்-மான்
பூராடம்-திருவோணம்-குரங்கு
அபிஜித்-உத்திராடம்-கீரி
உத்திராடம்-மலட்டுப்பசு
பூரட்டாதி-அவிட்டம்-சிம்மம்

மேல் கண்ட நக்ஷத்திரங்களில் முன் சொன்னது ஆண் நக்ஷத்திரமும் பின் சொன்னது பெண் நக்ஷத்திரம் இவற்றில்,

## சத்துரு

பசுவுக்கு-புலி
குதிரைக்கு-ஆடு
ஆட்டுக்கு } புலி
மாட்டுக்கு }
பூனைக்கு-எலி-நாய்
எலிக்கு-பாம்பு-பூனை
யானைக்கு-சிம்மம்
பாம்புக்கு-பூனை கீரி
இவைகள் வைரமாம் (சத்துரு சேர்க்கக்கூடாது)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மானுக்கு-பசு
ஆட்டுக்கு-குதிரை
நாய்க்கு-மனுஷன்
} நட்பு சமத்துவம் சேர்க்கலாம்

குரங்குக்கு எல்லா யோனிகளும் நட்பு

இதுகளில் சத்துருமித்துரு, யோனி அறிந்து சேர்க்க உத்தமம்.

ஸ்திரி புருஷ நக்ஷத்திரங்களுக்கு ஒரே யோனியானாலும் மித்திர யோனியானாலும் சமத்துவமானாலும் உத்தமம் சேர்க்கலாம் சத்துரு யோனி பொருந்தாது இரண்டும் புருஷ யோனியானாலும் உத்தமம் இரண்டும் ஸ்திரி யோனியாகில் மத்தியமம் புருஷன் புருஷயோனியும் ஸ்திரி ஸ்திரியோனியுமாக இருந்தால் சிலாக்கியம் ஸ்திரி புருச யோனியும் புருசன் ஸ்திரியுமாக மாறிவந்தால் விட்டில் சர்வதா கலகம் கூடாது.

# ராசி பொருத்தம்

ராசிப்பொருத்தம் என்பது ராசிசக்கரத்தில்(சாதக குறிப்பில்) அவரவர்களுடைய நக்ஷத்திரத்திற்குறிய சந்திரன் நின்ற ராசிக்கு பெயர் இதுமுதல் என்ண ஸ்திரி ராசிக்கு புருஷராசி 2-12 ஆனால் மிருத்யுகூடாது 12-2 ஆனால் ஆயுள்விருத்தி உத்தமம் 3-11 ஆனால் துக்கம் கூடாது 11-3 ஆனால் சுகம் உத்தமம் 4-10 ஆனால் தனவிருத்தி உத்தமம் 10-4 ஆனால் தனவிருத்தி உத்தமம் 6-8 ஆனால் புத்திரநாசம் கூடாது 8-6 ஆனால் புத்திரலாபம் உத்தமம் 7-7 ஆனால்சம சப்தமம் மாங்கல்யமும் ஆயுளும் விருத்தி உத்தமம் ஸ்திரி ராசிக்கு புருசராசி 2-12வதாகவருவதில் மீனம் முதல் சமராசியாகிலும் உத்தமம் மேஷாதி சமராசி னாகில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கூடாது அதாவது ஸ்திரிராசிக்கு புருஷராசி மேஷம் மிதுனம் சிம்மம் துலாம் தனுசு கும்பராசியாகில் இரண்டாவதாகவரில் தோஷமில்லை விவாஹம் செய்ய லாம் உத்தமம் சஷ்டாஷ்டகத்தில் மேஷத்திற்கு கன்னியும் தனுசுக்குவிருஷபமும் துலாத்திற்கு மீனமும் கும்பத்திற்கு கடகமும் சிம்மத்திற்கு மகரமும் மிதுனத்திற்கு விருச்சிகமும் இதுகளில் ஸ்திரிராசிக்கு புருஷராசி விருஷபம் கடகம் கன்னி விருச்சிகம் மகம் மீனம் இந்த ராசி ஆறாவது ராசியாகில் சுப ஷஷ்டாஷ்டகம் சுபத்தை தரும் விவாஹம் செய்யலாம்.

கடகத்துக்கு கும்பமும் மகரத்துக்கு சிம்மமும் மீனத் திற்கு துலாம் விருச்சிகத்துக்கு மிதுனம் விருஷபத்திற்கு தனுசும் கன்னிக்கு மேஷம் இதுகளில் ஸ்திரி ராசிக்கு புருஷராசி மேஷம் மிதுனம் சிம்மம் துலாம் தனுசு கும்பம் இந்த ராசிகள் 8 (எட்டாவதாகில்) ஆனால் சுகாஷ்டகம் சுகத்தை தரும்.சேர்க்கலாம் உத்தமம் கடகத்துக்கு தனுஷம் விருச்சிகத்துக்கு மேஷம் கன்னிக்கு கும்பம் விருஷபத்திற்கு துலாம். மகரத்துக்கு மிதுனம் இந்த ஷஷ்டாஷ்டகத்தில் ஸர்வ நாசம் சேர்க்கக்கூடாது அசுபத்தை தரும்.

இந்தபடி ஸ்திரி புருஷராசியாகிய 2-5-6-8-9-12 ஆகிலும் ஸ்திரிராக்ஷசகணமானாலும் இரண்டு ராசிக்கு ஒரே கிரஹாதிபதியானாலும் (சிநேகம்) நட்பு ஆனாலும் உச்சகிரஹ பார்வை அடைந்தாலும் இருந்தால் விவாஹம் செய்யலாம் உத்தமம் ஏகாதிபதி யானாலும் மித்திரராகிலும் ஸமசப்தமாகிலும் ரஜ்ஜு- வேதை கணம் இதுகளன்னியில் விவாஹம் செய்யக்கூடாது மகரம் கடகம் கும்பம் சிம்மம் இந்த ராசிகள் ஸமசப்தமா

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

யிருந்தால் விவாஹத்தில் வைதவ்யம் (அமங்கல்யம்) என்று சொல்லுவதால் சேர்க்கக்கூடாது மேஷத்திற்கும் சிம்மத்திற்கும் கடகத்துக்கும் விருச்சிகத்துக்கும் 5-9 என்ற தோஷமில்லை. விவாஹம் செய்யலாம் (பலன் ராசிபொருத்தம்) வம்ச விருத்தியை தரும்.

## ராசியாதிபதி பொருத்தம்:-

ஸ்திரி புருஷராசியாதிபதிகள் ஒருவருக்கொருவர் மித்திரர்களானால் அதமம்உத்தமம் சமமானால் மத்தியமம் சத்துரு மித்திரர்களானால் அதமம் இருவரும் சத்துருவானால் மிகவும் தோஷம் இந்த பலன் சுபமாக இருந்தால் புத்திரர்கள் சுகமாகவும் தீர்க்காயுளாகவும் இருப்பார்கள் இந்த பொருத்தம் முக்கியமாக பிராமணர்களுக்கு தேவை.

## ராசிகளின் அதிபதிகள் :-

மேஷத்துக்கு-விருச்சிகத்துக்கு செவ்வாய்

விருஷபம்-துலாத்துக்கு சுக்கிரன்

மிதுனம்-கன்னிக்கு புதன்

கடகத்துக்கு-சந்திரன்

சிம்மத்துக்கு-சூரியன்

தனுசுக்கு-மீனத்துக்கு குரு.

மகரத்துக்கு-கும்பத்துக்கு சனி

இவர்களின் சத்துருசமம் மித்துரு கீழ்கண்ட படிபார்க்க

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# நவக்கிரகங்களின் சத்துரு மித்துரு சமம் அட்டவணை

| கிரஹம் | | | |
|---|---|---|---|
| ↓ | மித்துரு | சத்துரு | சமம் |
| சூரியன் | சந்தி-செவ் குரு | சனி-சுக்கிரன் | புதன் |
| சந்திரன் | சூரி-புதன் | ----- | செவ்-குரு சுக்கிரன்-சனி |
| செவ்வாய் | சூரிய-குரு சந்திரன் | புதன் | சனி-சுக்கிரன் |
| புதன் | சூரிய சுக்கி | சந்திரன் | குரு-சனி புதன் |
| குரு | சூரிய-சந்தி செவ்வாய் | புதன்-சுக்கிர | சனி |
| சுக்கிரன் | புதன்-சனி | சூரிய-சந்திர | செவ்வா குரு |
| சனி | புத-சுக்கிர | சூரிய-செவ் சந்திரன் | குரு |

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# வசிய பொருத்தம்

| | | | |
|---|---|---|---|
| மேஷத்திற்கு | - சிம்மம் | - விருச்சிகம் | - வஸ்யம் |
| விருஷபத்திற்கு | - கடகம் | - துலாம் | - வஸ்யம் |
| மிதுனத்துக்கு | - கன்னி | - - | - ஷை |
| கடகத்துக்கு | - தனுசு | - விருச்சிகம் | - ஷை |
| சிம்மத்துக்கு | - துலாம் | - - | - ஷை |
| கன்னிக்கு | - மீனம் | - மிதுனம் | - ஷை |
| துலாத்திற்கு | - மகரம் | - - | - ஷை |
| விருச்சிகத்திற்கு | - கன்னி | - கடகம் | - ஷை |
| தனுசுக்கு | - மீனம் | - - | - ஷை |
| மகரத்திற்கு | - மேஷம் | - கும்பம் | - ஷை |
| கும்பத்திற்கு | - மேஷம் | - - - | - ஷை |
| மீனத்திற்கு | - மகரம் | - - - | - ஷை |

குறிப்பு:-

ஸ்திரி ராசிக்கு புருஷராசி வஸ்யம் ஆனால் உத்தமம். புருஷராசிக்கு ஸ்திரிராசிவஸ்யமானால் மத்தியமம் இருவருடைய ராசி சரியாக இருந்தால் போகம் மிகும் பலன் சுபம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# ரஜ்ஜு பொருத்தம்

ஸ்திரிபுருஷ நக்ஷத்திரங்கள் ஒரே ரஜ்ஜுவாகில் பொருந்தாது. பின்னர் ரஜ்ஜுவாக இருந்தால் பொருந்தும் அதிலும் இரண்டும் ஏறுமுகமாக இருக்க வேண்டும். இரண்டும் இறங்கு முகத்திலிருந்தால் ஸ்திரி நாசம் கூடாது. ஒன்று ஏர் முகத்திலும் மற்றொன்று இறங்கு முகத்திலிருந்தாலும் ஒரே ரஜ்ஜு வானாலும் பொருத்தம் உண்டு. விவாஹம் செய்யலாம் சிலர் சிரோரஜ்ஜு கண்ட ரஜ்ஜு தவிர மற்ற ரஜ்ஜுகள் ஒரே வரியில் இருந்தாலும் ஏறும் இறங்குமுகமாக இருந்தாலும் மற்ற பொருத்தங்கள் சரியாக இருந்தால் விவாஹம் செய்கிறார்கள் சௌக்கிய மாகவும் வாழ்கிறார்கள் சிர-கண்டரஜ்ஜு உதவவே உதவாவது இருவருக்கும் நாசத்தை கொடுக்கும் சிரோ ரஜ்ஜுவானால் புருஷனுக்கு கண்டம் கண்ட ரஜ்ஜுவானால் ஸ்திரிக்கு ஆகாது சிரோரஜ்ஜு உதவவே உதவாது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# ரஜ்ஜு பொருத்தம் அட்டவணை

| ஆரோகணம் அவரோகணம் ஆரோகணம் அவரோகணம் (ஆரோ ரஜ்ஜு அவரோகணை) | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மிருகசிரம் | | சித்திரை | | அவிட்டம் | | சிரசு |
| ஆரோ கணம் ரோகிணி | அவரோ கணம் திருவாதிரை | ஆரோ கணம் ஹஸ்தம் | அவரோ கணம் சுவாதி | ஆரோ கணம் திருவோணம் | அவரோ கணம் சதயம் | கண்டம் |
| \| \| கிருத்திகை | \| ✱ \| புனர்பூசம் | \| \| உத்திரம் | \| ✱ \| விசாகம் | \| \| உத்திராடம் | \| ✱ \| பூரட்டாதி | ரஜ்ஜு (கழுத்து) நாபி |
| \| \| பரணி | \| ✱ \| பூசம் | \| \| பூரம் | \| ✱ \| அனுஷம் | \| \| பூராடம் | \| ✱ \| உத்திரட்டாதி | தொப்புள் உரு |
| \| \| அசுபதி | \| ✱ \| ஆயில்யம் | \| \| மகம் | \| ✱ \| கேட்டை | \| \| மூலம் | \| ✱ \| ரேவதி | தொடை பாதம் ரஜ்ஜு |

குறிப்பு: | - ஏறுமுகம் | இரண்டு நக்ஷத்திரங்களில் ஒன்று ஏறுமுகம்

✱ - இறங்குமுகம் | ஒன்று இறங்குமுகம் ஒரே வரிசையில் இருக்கிறது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## ரஜ்ஜு பொருத்தம் பலன்

இரண்டு ஊரு (துடை) ரஜ்ஜுவானால் தன நாசம் நாபி (தொப்புளு) ரஜ்ஜுவானால் புத்திர தோஷம் பாதரஜ்ஜுவானால் தம்பதிகள் வெளி தேச சஞ்சாரம் (வாசம்) ஆகையால் ஏகரஜ்ஜுவானால் விவாஹம் செய்யக்கூடாது பின்ன ரஜ்ஜுவானால் மங்களகரம் மாங்கல்ய விருத்தியை கொடுக்கும் ஒன்பது பொருத்தங்கள் சரியாக இருந்தாலும் ரஜ்ஜு பொருத்தம் சரியில்லாவிட்டால் விவாஹம் செய்யக்கூடாது இது முக்கியம் கூடுமானவரை பார்த்து விவாஹம் செய்யவும்.

### வேதை பொருத்தம்:-

அஸ்வினி-கேட்டை
பரணி-அனுஷம்
கிருத்திகை-விசாகம்
ரோகிணி-சுவாதி
திருவாதிரை-திருவோணம்
புனர்வசு-உத்திராடம்
பூசம்-பூராடம்
ஆயில்யம்-மூலம்
மகம்-ரேவதி
பூரம் பூரட்டாதி

மேற்கூறிய இரண்டு இரண்டு நக்ஷத்திரங்களுக்குள் ஒன்றுக்கொன்று வேதையாம் மிருகசிரம் சித்திரை சுவாதி இவைகளும் ஒன்றொன்றுக்குள் வேதை எனப்படும்.

மேல் சொல்லிய இரண்டு இரண்டு நக்ஷத்திரங்களுக்குள் ஸ்திரிபுருஷ நக்ஷத்திரமாகில் பொருந்தாது மாறிவரில் பொருந்தும் தம்பதிகளுடைய நக்ஷத்திரங்கள் வேதை நக்ஷத்திரங்களில் சேர்ந்திருக்கக் கூடாது பரஸ்பரம் வேதையுண்டாயிருந்தால் ஸ்திரி துக்கத்தையும் அமங்கல்யத்துவமும் அடைவான் வேதை பொருத்தம் அனுகூலமாகயிருக் கில் சகலவிதமான தோஷங்களும் நிவர்த்தியாகும் தம்பதிகள் சதாகாலத்திலும் சுகிலும் சிகிகளாகவும் மனசு சந்துஷ்டியாகவும் வாழ்வார்கள் தினம் மகேந்திரம் கிரஹ பொருத்தம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ரஜ்ஜு" நாடி இந்த ஐந்து பொருத்தங்களும் பொருந்திருந் தால் இந்த வேதை பொருத்தம் குற்றமாக இருந்தால் தோஷமில்லை.

(நாடிப் பொருத்தம் தென்தேசத்தில் கவனிக்கிறதில்லை)

## கிரஹப் பொருத்தம்

ஸ்திரீ புருஷர்களுடைய ஜன்ம நக்ஷத்திரத்துக்கு 1-7-8ல் பாபகிரகங்கள் அதாவது செவ்வாய் ராகு கேது சனி இவர்கள் சத்துரு நீசமாகயிருந்தால் முழு பலம் மித்துருவீடாகில் முக்கால் பலம் ஸ்வக்ஷேத்திரமானால் அரைபலம் உச்சமானால் கால்பலம் 2-4-12ல் சத்துரு கிரஹம் நீசனாகயிருந்தால் அரைபலம் மித்திர வீடாகில் காலே அரைக்கால் பலம் ஸ்வக்ஷேத்திரமாகில் கால்பலம் உச்ச வீடாகில் அரைக்கால் பலம் சந்திர ராசியை தொட்டு மேற்சொன்ன பாபத்தில் பாதியும் சுக்கிரன் நின்ற ராசியை தொட்டுகால் பங்குமாம் பெண் சாதக பாபத்திற்கு புருஷசாதக பாபம் குறைந்தால் பொருந்தாது சமமாவது அதிகமாவது இருந்தால் பொருந்தும் மேற் சொல்லிய பாபங்களுக்கு சுபகிரஹ பார்வை ஏற்பட்டால் தோஷமில்லை.

குறிப்பு:- லக்கினத்திலிருந்து எண்ணி கணக்கிட முழு பலத்திற்கு ஒன்று என்று வைத்துக் சொன்னவும் மற்றபடி கணக்கிடவேண்டும்.

## ஆயுள் பொருத்தம்

பெண்ணினுடைய நக்ஷத்திர முதல் புருஷனுடைய நக்ஷத்திரம் வரையில் எண்ணின தொகையையும் புருஷனுடைய நக்ஷத்திரமுதல் பெண்ணினுடைய

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நக்ஷத்திர வரையில் எண்ணின தொகையையும் தனி தனி ஏழில் பெருக்கி 27ல் வகுக்க மிச்சம் பெண்ணினுடைய நக்ஷத்திரத்தினின்றும் எண்ணப்பட்ட தொகை குறையில் ஆயுட்பொருத்தம் பொருந்தும் புருஷனுடைய நாளினின்றும் எண்ணப்பட்ட தொகை குறையிற் பொருந்தாது. இந்தப்படி மேலேசொல் லப்பட்ட பொருத்தங்களை நன்கு பார்த்து விவாஹம் செய்யவிக்கலாம் மேலும் இன்னும் சிலபொருத்தங்கள் இருக்கின்றன. அதாவது விருக்ஷங்கள் பொருத்தம் பட்சி புத்திரவருண பொருத்தம் என்று இருக்கின்றன அவைகளை அநேகர் அனுசரிப்பதில்லை ஸ்திரிஜாதக கத்திற்கு முற்கூறியவாறே 7ம் இடத்தை கவனிப்பதுடன் 8ம் இடத்தை பன்முறைபார்க்க வேண்டும் அந்த இடத்திற்கு சுப திருஷ்டிமிக நன்று பாபதிருஷ்டிமிக்க தோஷம் அத்தலங்களில் சூரியன் குரு செவ்வாய் கேது இவர்களிருந்தாலும் நோக்குதலும் கூடாது அதனின்றும் செவ்வாயை மிகவும் கவனிக்க வேண்டும் செவ்வாய் சூரியன் சேர்ந்து இருக்க கூடாது சனிபார்வை மிகவும் தோஷத்தைதரும் ஸ்திரி புருஷர்களின் ஜாதகத்தை யொத்து பார்க்குங்கால் குணதோஷம் சமமாயின் நன்று ஸ்திரி தோஷம் கொஞ்சம் மிகுதியாயினும் கூடாது புருஷ சாதகம் அது போலாயினும் செய்யலாம்.

## செவ்வாய் தோஷம் விபரம்

ஸ்திரி புருஷசாதகத்தில் விவாஹம்காலத்தில் இருவருக்கும் செவ்வாய் தோஷமும் கவனிக்க வேண்டும்.

இனி செவ்வாய் தோஷம் விபரம் ஆராய்வோம்.

செவ்வாய் தோஷம் என்பது ஸ்திரி புருஷர்கள் ஜாதகத்தில் அங்காரகன் (செவ்வாய்) லக்கினத்திற்கு 2-4-7-8-12 ஆகிய இடங்களில் இருவருக்கும் இருப்பின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தோஷம் உண்டு ஒருவருக்கு இருந்து மற்றொருவருக்கு இல்லாமலிருந்தால் விவாஹம் செய்யலாகாது இருவருக்கும் சமமாக இருந்தால் விவாஹம் செய்யலாம் உத்தமம் அதிலும் புருஷர்களுக்கு 2-7லும் ஸ்திரிகளுக்கு 4-12லும் இருவர்கட்கும் 8லும் அங்காரகனிருந்தால் தோஷம் உண்டு மேலும் ஜன்ம லக்கினம் சுக்கிரலக்கினம் இம்மூன்றுக்கும் 2 4 7 8 12 இந்தஸ்தானங்களில் செவ்வாய் புருஷனுடைய ஜாதகத்திலிருக்கில் புருஷ னிறந்து விதவையாவாள் ஷெ செவ்வாய் தோஷம் அவர் களின் ஜாதகப்படி செவ்வாய் திசை வரும்போது அவரவர்களுக்கு கண்டமோ வியாதியோ அல்லது மரணமோ உண்டாக்கும் ஆதலால் இருவருடைய ஜாதகத்தை சோதித்து இருவருக்கும் செவ்வாய் திசை சென்றுவிட்டதா என்று பார்த்தும் சேர்க்கவேண்டும் செவ்வாய் தோஷத்திற்கு சில பரிகாரங்கள் கூறப்பட்டி ருக்கிறபடியால் அதன்படி பார்த்து தம்பதிகளின் விவாஹத்தை கூட்டினால் அவரவர்களுடைய இதர யோக பலத்தினால் இந்த செவ்வாய் தோஷம் பாதிக்காது.

அவையாவன:-

1. இருதிரத்தாருக்கும் மிதுனம் கன்னி 2ம் இடமாகி அதில் அங்காரகன் இருந்தால் தோஷம் இல்லை.
2. விருஷபம் துலாம் ஆகிய இவற்றில் ஒன்று 12ம் இடமாகி அதில் அங்காரகன் இருந்தால் தோஷம் இல்லை.
3. மேஷம் விருச்சிகம் ஆகிய இவற்றில் ஒன்று 4ம் இடமாகி அதில் அங்காரகன் இருந்தால் தோஷமில்லை.
4. மகரம் கடகம் ஆகிய இவற்றில் 7ம் இடமாகி அதில்

 CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அங்காரகன் இருந்தால் தோஷமில்லை.

5. தனுசு மீனம் ஆகிய இவற்றில் ஒன்று 8ம் இடமாகி அதில் அங்காரகன் இருந்தால் தோஷமில்லை.

6. கும்பம் சிம்மம் இதில் அங்காரகன் இருந்தால் தோஷம் இல்லை.

7. அங்காரகன் சந்திரனுடனும் அல்லது குரு புதனுடன் சேர்ந்தாவது பார்த்தாலும் தோஷமில்லை.

8. அங்காரகன் சுயக்ஷேத்திரமாகிய மேஷம் விருச்சிகத்தில் இருந்தாலும் சுய நவாம்சங்களிலிருந்தாலும் புதன் சந்திரன் சுக்கிரன் குரு இவர்களுடன் ஒருவருடன் கூடியாவது அல்லது பார்வை பெற்று (இருந்தாலும்) தோஷமில்லை.

9. சூரிய சந்திரன் இராசியாகிய சிம்மம் கடகம் லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு அங்காரகன் தோசமில்லை.

10. ஸ்திர சர இராசிகளாகிய கடகம் சிம்மம் மேஷம் விருச்சிகம் மகரம் ராசிகளை அடைந்த செவ்வாய்க்கு தோஷம் நிவர்த்தி இல்லை.

11. செவ்வாய் இருக்கும் ராசிநாதன் தன் செவ்வாய்க்கு கேந்திர கோணங்களிலிருந்தால் செவ்வாய் தோஷ பரிகாரம் இந்தப்படி பார்த்து விவாஹம் செய்வது உத்தமம்.

## ஸ்திரி ஜாதகம்

இனி ஸ்திரி ஜாதக பலனை அவர்கள் குறிப்பு வைத்து கொண்டு வாழ்நாளில் பிற்காலத்தில் நடக்கும் பலனை ஆரோய்வோம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

முக்கிய அறிவிப்பு

ஸ்திரி சாதகத்தில் ஆண்களுக்கு சொன்ன பலன்கள் யாவும் ஸ்திரிகளுக்கும் சொல்லப்படுகிறது இருந்தாலும் முக்கியமாக விவாஹ காலத்தில் ஜோடி சேர்ப்பதில் இருவருடைய சாதகத்தில் 7ம் இடம் 8ம் இடம் முக்கியமாக கவனிக்க வேண்டும் ஷ ஸ்தானங்கள் சுத்தமாக இருப்பது நல்லது ஷ ஸ்தானங்களில் சுபகிரஹ சேர்க்கை சுப திருஷ்டியுள்ள சாதகமாககூடுமானவரையில் பார்த்து விவாஹம் செய்யவும் ஷ ஸ்தானங்களில் பாப கிரஹங்களாகிய செவ்வாய் சனி குரு கேது இவர்கள் சேர்ந்தாவது இருந்தல் கூடாது அதிலும் சூரியன் செவ்வாய் அல்லது செவ்வாய் சனி கூடியிருக்ககூடாது சூரியன் மட்டும் இருக்கலாம்.

அப்படி பாப கிரஹங்கள் இருவருடைய சாதகத்தில் சமத்துவமாக இருந்து சுப திருஷ்டி இருந்தால் விவாஹம் செய்யலாம் பாபகிரஹங்கள் ஷ 7ம் 8ம் இடங்களில் இருந்து தம்பதிகள் ஜோடி சேர்ந்தால் அந்தந்த பாப கிரஹ திசா புத்திகாலங்களில் கண்டம் விதவை தன்மை வியாதி தரித்திரம் இத்தியாதிகளை தம்பதிகள் அடைவார்கள்நான்இந்தபுஸ்தகத்தில் சுருக்கமாக முக்கியமான விஷயங்களை மட்டும் எழுதியிருக்கிறேன் யாவரும் படித்து பார்த்து கூடுமான வரையில் விவாஹ காலத்தில் பாப கிரஹம் சம்பந்த மன்னியில் ஜோடி சேர்க்கவும்.

# ஸ்திரி ஜாதகம் (பொது விஷயம்)

ஒரு புருஷ சாதகத்திற்கு என்ன பலன்கள் சொல்லப்படு கிறதோ அதே பலன்கள் தான் பெண் சாதகத்திலும் சொல் லப்படுகிறது ஆண்களுக்கு ஆண் சாதகத்தை அனுசரித்து சொல்லியுள்ள பலாபலன்கள் யாவும் பெண் சாதகத்தை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அநுசரித்து சொல்லினால் பெண்களுக்கு பொருந்தக்கூடிய விஷயங்கள் மாத்திரம் தான் பெண்களுக்குபலிக்கும் மற்றவை அதாவது பெண்களுக்கு பொருந்தாதவை அவர்களுடைய புருஷர்கள் சேர்ந்து அனுபவிப்பார்கள்

இலக்கினம் சந்திரலக்கினம் இவ்விரண்டில் எதுவலுவாக இருக்கின்றதோ அதை அநுசரித்து ஸ்திரிகளுக்கு நேரிடும் நல்ல பலன்கள் அல்லது இரண்டு கலந்து இருந்ததை அறிய வேண்டும் ஸ்திரிகளுக்கு அவர்களுடைய சாதகத்தில் ஜென்ம லக்கினம் வலுவாக இருந்தால் ஜன்ம லக்கினத்தைக் கொண்டும் சந்திர லக்கினம் வலுவாக இருந்தால் சந்திரலக்கினத்தைக் கொண்டும் அவர்களுடைய சௌந்தர்யம் பலம் குணம் அதிர்ஷ்டம் இவைகளை அறியவேண்டும் முக்கியமாக 2ம் இடம் 4ம் இடத்தால் சங்கம் குடும்பம் வாழ்வையும் 5ம் இடத்தை கொண்டு குழந்தைகள் எத்தனை என்றும் அவைகளில் ஆண் முன்பா பெண் முன்பது என்பதும் 7ம் இடத்தை கொண்டு பர்த்தாவின் குணம் சௌக்கியம் பர்த்தாவினால் ஸ்திரி அடையும் செளபாக்கியம் சுகமும் பர்த்தாவை ஸ்திரிவிடுவதும் 8ம் இடத்தை கொண்டு விதவையாகும் யோகமும் 9ம் இடத்தால் புத்திரபேறும் கூறுவர் இவைகளில் 7ம் 8ம் இடம் இவ்விரண்டும் சுத்தமாக இருந்தால் மிக நல்லது.

ஆதலால் ஆண் பெண் சாதகங்களை விவாஹத்தில் ஒன்று பார்த்து ஜோடி சேர்க்க வேண்டியிருப்பதால் ஸ்திரி சாதகமும் அவசியமாக இருக்கிறது.

## பாவ பலன்கள்

புருஷ சாதகப்படி எந்த பலன்கள் சொல்லப்படுகிறதோ அவையாவும் ஸ்திரிக்கும் பார்க்கவேண்டும் அதிலும் லக்கி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

னம் சந்திரலக்கினம் இரண்டும் இரட்டை ராசியாக இருந்தால் பெண் கருபமாகவும் ஒற்றை ராசியாக இருந்தால் ஆண் கருபமாகவும் ஒன்று இரட்டை ஒன்று ஒற்றை ராசியாக இருந்தால் கலந்தால் ஸ்வாபமாக ஜாதகி இருப்பதால் மேலும் :-

1. லக்கின பாவத்தால் சாதகியின் தேகம் குணம் பலமும் சந்திர லக்கின பாவத்தால் சௌந்தர்யம் ரூபம் அழகு இவைகளை அறியலாம்.
2. இரண்டாம் பாவம்-குடும்பம்
3. மூன்றாம் பாவம் சகோதரர்கள்
4. நான்காம் பாவம்-சுகம் கற்பு சங்கமம்
5. ஐந்தாம் பாவம்-புத்திரன்
6. ஆறாவது பாவம்-சத்துரு
7. ஏழாவது பாவம்-பர்த்தா பாக்கியம் வாழ்வு சுகம் கணவனின் பலம் உத்தியோகம் ஸ்ரேஷ்டம்
8. எட்டாவது பாவம்-மாங்கல்யஸ்தானம் ஆயுள் பர்த்தான் ஆயுள் பலம்.
9. ஒன்பதாவது பாவம், புத்திரர் (பர்த்தா ஸ்ரேஷ்டம்
10. பத்தாவது பாவம்-ஆயுர்பலம்.
11. பதினொன்றாவது பாவம்-லாபஸ்தானம்
12. பனிரெண்டாவது-விரயம் சுகம் சயனஸ்தானம்.

மேல் சொல்லப்பட்ட பாவாதிபதிகள் மேல்கண்ட பலன்களை அளிப்பார்கள் தவிர மேல் பாவாதிபதிகள் நிற்கும் நிலையை அறிந்து பலன்களை கூறவேண்டும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

## காரகர்கள்

குருபர்த்தா காரகன்

சுக்கிரன் :- நளகரன் களத்திரகாரகன்

சுக்கிரன் நளகரனும் களத்திரகாரகனும் ஆவான் முக்கியமாக 2 4 5 7 8 9 10 இந்த இடங்கள் சுத்த மாகவாவது சுப இடங்களாவது சுப பார்வையாவது அல்லது சுபசேர்க்கை உச்சம் கேந்திரம் திருகோணம் ஸ்தானங்களாவது இருத்தல் வேண்டும் லக்கினாதிபதியும் சுபதிருஷ்டி அடைந்து இருக்க நல்லது ஷை கண்ட இடங்களில் சுபகிர ஹசம்பந்தம் இருக்கில் சுப மென்றும் அசுப கிரஹமிருப்பின் அசுபம் என்றும் அறிக.

## லக்கினபாவம்

ஒரு பெண்ணின் ஜன்மலக்கினம் சந்திரலக்கினம் இரண்டும் இரட்டை ராசியாகி அதில் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் இவர்கள் வலுவுள்ளவர்களாக இருந்தால் ஜாதகி நல்ல குணமுள்ளவளும் பதிவிரதையாகவும் சகல விஷயங்களையும் தன் சுயபுத்தியால் தானே கிரகித்து பிரசித்துமுடையவளாயும் சகல சம்பத்து நவம் ஆபரணக் உடையவளாகவும் தவிர சகல சாஸ்திரங்களையும் கற்றறிந்தவளாகவும் இருப்பாள் ஷை இரண்டு ராசிகளும் ஒற்றை ராசியாக இருந்தால் புருஷ ரூபம் சுபாவமும் பாபியாகவும் கெட்ட நடவடிக்கை உள்ளவளாகவும் இருப்பாள் ஷை ராசியில் பாபர்கள் பார்வை அடைந்தாலும் ஜாதகி துர்மார்க்கியாகவும் விபசார குணமுள்ளவளாகவும் ஆவாள்.

ஷை இரண்டுகளில் ஒன்று ஒற்றை மற்றொன்று இரட்டையாகவும் அல்லது சுப கிரகங்களும் அசுப

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கிரகங்களும் கலந்து இருந்து சுபர்கள் பார்வை அடையாமல் இருந்தால் ஜாதகியின் குணாதிசயங்கள் நடையுடை பாவனைகள் பலன்கள் கலந்து அதாவது நல்லது கெட்டது (மிஸ்ரமாக) கலந்து இருக்கும் ஜன்ம லக்கினத்தில் புதன் குரு சுக்கிரன் இவர்கள் மூவரும் இருந்தாலும் அல்லது இவர்களில் யாராவது ஒருவர் இருந்தாலும் அல்லது பார்த்தாலும் ஜாதகி படிப்பு சர்வ குணமுள்ளவளாகவும் பத்திர சம்பத்து முதலியவைகளுடன் சுகபோகியுள்ளவளாக இருப்பாள்.

லக்கினத்தில் புதனும் சந்திரனும் இருந்தால் ஜாதகி அதிக புத்திசாலியாகவும் தத்துவம் பேசுபவளாகவும் படிப்பு அறிவுள்ளவளாகவும் இருப்பாள் புதனும் சுக்கிரனும் இருந்தால் சங்கீத ஞானமும் அடைந்து இருப்பாள் மேலும் புருஷனும் பிரியமுள்ளவளாக கூடி இருப்பாள் சௌந்தர்ய முள்ளவளாகவும் இருப்பாள் சுக்கிரனும் சந்திரனும் கூடி இருந்தால் அழகு சுகபோகியாகவும் இருப்பாள் ஜன்மலக் கினத்திலும் 2ம் இடத்தில் 3ம் இடத்தில் சுபர்கள் இருந்தால் தனம் சுகம் அழகுள்ளவர்களாகவும் இருப்பாள் ஜன்ம லக்கினம் செவ்வாயினுடைய அல்லது சனியினுடைய ராசியாகி அதில் சந்திரனும் சுக்கிரனும் கூடி ஒரு பாப கிரகத்தால் பார்க்கப்பட்டால் தானும் தாயும் விபச்சாரம் செய்வார்கள்.

ஜன்மலக்கினம் செவ்வாயினுடைய ராசியாகி அதில் சந்திரனும் சுக்கிரனும் கூடியிருந்தால் தன் கணவனை வெறுப்பாள்.

## இரண்டாம் பாவம்

ஸ்திரி ஜன்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சந்திரன் புதன் குரு சுக்கிரன் இவர்கள் சேர்ந்து இருந்தாலும் அல்லது இவர்களில்யாராவது ஒருவர் இருந்தாலும் அல்லது ஷெ ஸ்தானத்தை யாரவது ஒருவர் பார்த்தாலும் தனம் சம்பத்து புத்திரர்களுடன் ஜாதகி சுகத்துடன் குடும்பத்தை நடத்துவதால் ஷெ இடத்தில் சனி செவ்வாய் அல்லது ராகு இருந்தாலும் பார்த்தாலும் ஜாதகி தரித்திரம் உள்ளவளாக ஆவாள்.

## மூன்றாம் பாவம்

ஸ்திரி ஜன்ம லக்கினத்துக்கு 3ம் இடத்தில் சந்திரன் புதன் குரு சுக்கிரன் இவர்கள் இருந்தாலும் பார்த்தாலும் அல்லது இவர்களில் யாராவது ஒருவர் இருந்தாலும் பார்த்தாலும் சந்தானம் தனதான்யவிருத்தி ஏற்படும் பாபகிரஹமிருந்தால் பாபம் சம்பவிக்கும் ஜன்ம லக்கினத்துக்கு 3ம் இடத்தில் செவ்வாய் சனி அல்லது ராகு இருந்தால் ஜாதகிக்கு சகோதரர்கள் இருக்கமாட்டார்கள்.

## நான்காம் பாவம்

ஸ்திரி ஜன்ம லக்கினத்துக்கு 4ம் இடத்தில் சூரியன் இருந்தால் அர்பசுகம் செவ்வாய் இருந்தால் தாயாருக்கும் புத்திரருக்கும் தோஷம் சம்பவிக்கும் இராகு இருந்தால் கண்டம் சம்பவிக்கும்.

## ஐந்தாம் பாவம்

ஸ்திரி ஜன்ம லக்கினத்துக்கு 5ம் இடத்தில் புதன் இருந்தால் புத்திரர்தனம் உண்டாகும் சந்திரன் இருந்தால் பெண் சந்ததி விருத்தி ஆகும் சனி ராகு இருந்தால் மலடி ஆவாள் (தோஷபரிகாரம் செய்யவேணும்) ஜாதகியின் ஜனனசாதகத்தில் ஆண் கிர[illegible]

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அடைந்து இருந்தால் ஜாதகி புத்திர சம்பத்தும் தனமும் உடையவளாக ஆவாள். ஜாதகியின் ஜன்ம லக்கினத்துக்கு 10ம் பாவாதி குரு சுக்கிரனாகி இவர்கள் 5ம் இடத்தில் இருந்தால் ஜாதகியின் புருஷன் 100 வயதுடன் ஜீவித்து இருப்பான்.

புத்திர ஸ்தானாதிபன் குரு செவ்வாய் சூரியன் இவர்கள் எவ்விடத்திலாயினும் புருஷ ராசி அல்லது அம்சத்தில் இருந்தால் வெகு புத்திரர்களை ஜாதகி பெறுவாள்.

புருஷர்களுக்கு சூரியன் சுக்கிரன் ஆகிய இவர்கள் ஸ்வ க்ஷேத்திரம் ஸ்வ நவாம்சம் இவற்றிலும் 6-10, 11-3 இந்த இடங்களிலும் ஸ்திரிகளுக்கு செவ்வாய் சந்திரன் ஆகியவர்கள் ஷை சொல்லிய இடங்களில் இருப்பினும் கர்ப்பம் பிராப்தி உண்டு.

சாதகியின் ஜன்ம லக்கினம் ஸ்திரி ராசியாகி 5 அல்லது 7ம் பாவத்தில் எத்தனை கிரகங்கள் இருக்கின்றனவோ அத்தனை குழந்தைகளை பெறுவாள் அவைகளில் ஆண் கிரகங்களாகில் ஆண் என்றும் பெண் கிரகங்களாகில் பெண் என்று கூறுக.

ஸ்திரி ஜன்மலக்கினத்துக்கு 5ம் இடமாகிய புத்திர ஸ்தானத்தில் சத்துரு நீசம் பாபகிரஹங்களற்ற கிரஹங்களை கொண்டாவது புத்திர ஸ்தானாதியோடு கூடியிருக்கும் கிரஹங்கள் பகை நீசம் இல்லாமலிருப்பின் அவர்களை கொண்டாவது புத்திர சங்கை சொல்லுக (பலதீபிகை) குருவுக்கும் இலகினத்திற்கும் அல்லது புத்திரஸ்தானத்துக்கும் • அல்லது புத்திரஸ்தானத்திலிருக்கும் கிரஹங்களை கொண்டு புத்திரசங்கை சொல்லுக (பலதீபிகை) புத்திரஸ்தானாதிநீச்சத்துரு க்ஷேத்தரபாபம் அடைந்தாலும் 6, 8, 12ம் இடங்கள் அதிபதிகளுடன் கூடினாலும் புத்திரஸ்தானத்தை சுப கிரஹ பார்வை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பெறாமலிருந்தாலும் புத்திரநாசம் உண்டாகும் (பலதிபிகை).

## ஆறாவது பாவம்

ஸ்திரி ஜன்ம லக்கினத்துக்கு 6ம் இடத்தில் பாப கிரஹங் களிருந்தால் தனக்கு பிறக்கும் குழந்தைகள் தனக்கு சத்துரு வாக ஆவார்கள் 6ம் இடத்தில் சுபகிரஹங்கள் இருக்கலாம்.

## ஏழாவது பாவம்

ஸ்திரி ஜன்ம லக்கினத்துக்கு 7ம் இடத்தைக் கொண்டு கணவனுடைய குணாதிசயங்கள் போகபலம் முதலியன அறியவேணும் ஆதலால் 7ம் இடம் சுத்தமாக இருந்தால் நல்லது சுபர்கள் இருக்கலாம் பாபர்கள் இருக்கலாகாது 1) ஸ்திரிக்கு 8ம் இடம் மாங்கல்யஸ் தானம் மேலும் 7ம் இடம் சுபக்ஷேத்திரமாகவும் சுப அம்சமாயின் சுப சம்பந்தமிருப்பின் அவளது புருஷன் சௌந்தரியம் கீர்த்தி வித்தை சம்பத்து இவைகளையும் யுடையவனாக இருப்பான் (2) 7ம் இடம் சுபக்ஷேத்திரம் சுபாம்சம் சுப கிரகங்களின் சேர்க்கை அல்லது பார்வை கூடியதாக இருந்தால் அந்த ஜாதகி அழகு, வித்தை, கீர்த்தி சம்பத்து இவைகளுடைய புருஷனை பர்த்தாவாக வாய்ப்பாள் (3) 7ம் இடத்தில் புதன் இருக்ககூடாது புருஷன் நட்டம் சுகதன்மை அடைவான் ஆனால் வித்வானாகவும் தனவானாகவும் நல்ல குணமுள்ளவனாகவும் ஆவான் சனி ராகு இருந்தால் சாதகியின் கேது புருஷன் கிழவனாகவும் தாழ்ந்த புத்தியுள்ளவனாக இருப்பான் ஷை இடத்தில் செவ்வாய் சந்திரன் இருப்பது நன்மை இல்லை 7ல் மூன்று பாபகிரஹங்கள் இருக்க கூடாது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சுபர்கள் இருக்கலாம் (4) சந்திர லக்கினத்துக்கு 7ல் ஒரு சுபகிரஹம் இருந்தால் ஜாதகி ராஜ்ஜிய பதவியை அடைவாள் (5) ஜன்மலக்கினத்துக்கு 7வது பாவத்தில் செவ்வாய் இருந்து பாபர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகி சீக்கிரம் விதவை ஆவாள் அல்லது கணவனை வெறுப்பாள் (6) ஜன்ம லக்கினத்துக்கு 7ல் சனி இருந்து ஒரு பாபரால் பார்க்கப்பட்டால் ஜாதகி கிழவியாகவும் விவாகமாகாதவளாகவும் இருப்பாள் (7) 7ம் இடம் பாபக்ஷேத்திரமாகி அதில் சனி இருந்தால் ஜாதகி விதவையாவாள் (8) 7ம் இடத்தில் சனி இருந்தால் ஜாதகியினுடைய புருஷன் கிழவனாகவும் குரூர தன்மையுள்ளவனாகவும் இருப்பான் (9) ஏழாம் பாவாதிபதியும் லக்கினாதிபதியும் கூடி ஒரே ராசியில் இருந்தால் ஜாதகியும் அவளுடைய புருஷனும் ஒரே காலத்தில் மரணமடைவார்கள் (10) 7வது பாவத்தில் பாபர்கள் இருந்தால் சாதகி வாலிபத்திலேயே விதவை யாவாள் 9ம் பாவாதி சூரியனுடன் கூடி 7ல் இருந்தால் விதவை தன்மை அடைவாள் 7வது பாவத்தில் செவ்வாய் சனியும் கூடியிருந்தாலும் சாதகி வாலிபத்திலேயே விதவையாவாள் பாபரும் சுபரும் கலந்து இருந்தால் ஜாதகி அன்னிய சம்பந்த முள்ளவளாக இருப்பாள் (11) 7ம் இடம் குரூரக்ஷேத்திரம் அம்சம் பாபர்சேர்க்கை அல்லது பாபர்பார்வை அடைந்தால் அறிவில்லாத புருஷனும் மூடதன்மை கபடம் பணம் இல்லாத புருஷனை மணந்து தரித்திர தன்மை ஆவாள் அல்லது இருவருக்கும் கலகம் ஏற்பட்டு பிரிவு உண்டாகும் அல்லது பர்த்துரு நாசம் அல்லது விதவை ஆவாள் (12) 7ல் சூரியன் செவ்வாய் அல்லது செவ்வாய் சனி கூடி இருக்கலாகாது 8ம் பாவத்தில் பாபர்களிருந்து 2ம் பாவத்தில் சுபர்களிருந்து 7ம் இடம் சுக்கிரனுடைய ராசியாகிய ரிஷபம் துலாம் ராசியானால் சாதகி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

விபசாரம் செய்யும் குணம் உள்ளவளாகி மாங்கல்யத்துடன் இருப்பாள்

## எட்டாவது பாவம்

(1) ஸ்திரிக்கு மாங்கல்ய ஸ்தானம் ஸ்திரி லக்கினத்துக்கு 8 இடம் சுத்தமாக இருத்தல் நல்லது சுபர்களின் சேர்க்கை அல்லது சுபர்களின் பார்வை பெற்றால் பர்த்தாவுக்கு பாரியையாயும் கற்புயுவதியாயும் நல்லவளாகவும் சுமங்கலியாகவும் ஆவாள். (2) 8ம் இடம் உச்சம் ஆட்சி நட்பு பெற்று லக்கினாதியும் 7ம் அதிபதியும் கேந்திரத்திலிருக்க அவர்களை சுபர்கள் பார்க்க தீர்க்கசுமங்கலியும் தீர்க்காயுச உள்ளவளாகவும் வாழ்வாள் (3) சுபர்கள் 7 8 6ம் இடத்திலிருக்க 3 11ம் இடத்தை சுபர்கள் பார்க்க தீர்க்காயுசு. (4) 8ம்பாவாதி சனிசேர்ந்து 11ல் இருந்தால் நூறுவயது (5) 8ம் பாவாதி அஸ்தங்கிதனாக இருந்தால் அற்பாயுள், (6) 8ம் இடத்தில் சந்திரன் இருந்தாலும் சாதகி விதவையாவாள் மேலும் விதவை என்ற பெயருடன் எங்கும் திரிவாள் (7) சூரியனும் செவ்வாயும் கூடி இருக்ககூடாது எந்த பாவத்திலும் இருந்தாலும் விதவையாவாள் அதிலும் 1 2 4 7 8 9ல் இருக்க கூடாது. மற்ற இடங்களாகிய 3 5 6 11 12ம் இடங்களில் இருந்தால் அதிகம் தோஷம் ஏற்படுவதில்லை சூரியன் மட்டும் இருக்கலாம். (8) 8ம் இடத்தில் சுப கிரஹங்கள் இருப்பது நல்லது சுமங்கலியாக மதிப்பாள் (9) 8ம்இடம் 4ம் இடத்தில் பாப கிரஹங்கள் இருந்தால் ஜாதகி தரித்திர முள்ளவளாகவும் துக்கமுள்ளவளாகவும் இருப்பாள்.

## ஒன்பதாவது பாவம்

(1) ஜன்ம லக்கினத்துக்கு 9ல் சூரியன் அல்லது செவ்வாய் அல்லது புதன் அல்லது சுக்கிரன் அல்லது குரு

CC-0.4in Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இருந்தால் ஜாதகி சுகம் தனம் உள்ளவளாக இருப்பாள். (2) 9ம் பாவாதியும் குருவும் சேர்ந்து கேந்திரம் திருகோணங் களிலிருந்தாலும் அல்லது 4வது பாவாதியுடன் அல்லது புதனுடன் சேர்ந்து இருந்தாலும் ஜாதகியினு டைய புருஷன் தீர்க்காயுசுடன் தனம் தான்யம் வித்தை இவைகளை உடையவனாக ஆவான். மேலும் 6வது பாவாதியுடன் சேர்ந்து இருந்தாலும் தீர்க்காயுள்ளவனாக இருப்பான் (3) ஜன்மலக்கினத்துக்கு 9ம் பாவாதி சுக்கிரனாகி 9ல் இருந்தும் 9ம் பாவாதி 11ல் இருந்தாலும் ஜாதகி தன் தகப்பன் சொத்து தனக்கு வந்து சேரும் (4) 9ம் பாவாதி 6 8 12ம் இடத்தில் இருந்தால் ஜாதகி விதவையாவாள். சூரியன் 9வது பாவாதியுடன் கூடி 7ல் இருந்தாலும் விதவையாவாள் (5) 9ம் இடத்தில் சூரியனும் செவ்வாயும் இருந்தால் புத்திரர்களுக்கும் தனக்கும் தோஷம் (6) 9ம் இடத்தில் சுபகிரஹங்களும் இருந்து 7ம் இடம் 8ம் இடம் இவ்விடங்களில் பாப கிரஹங்களிருந்தாலும் கூட ஜாதகி அநேக புத்திரர்களை பெற்று சுகமாக புருஷனும் தானும் அநேக காலம் ஜீவித்து இருப்பார்கள்.

## பத்தாவது பாவம்

ஜன்ம லக்கினத்துக்கு பத்தாவது இடத்தில் சந்திரச் செவ்வாய் குரு சேர்ந்து இருந்தாலும் அல்லது யாராவர் ஒருவர் மட்டும் இருந்தாலும் ஜாதகிக்கு தனம் புத்திர் உண்டாகும் விருத்திக்கும் இராகு இருந்தால் படிபபு ஏற்படும்.

## பதினோராவது பாவம்

ஜன்ம லக்கினத்துக்கு 11ம் இடத்தில் (லாபத்தில்)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

செவ்வாய் புதன் குரு சுக்கிரன் சேர்ந்து இருந்தாலும் ஜாதகிக்கு ஆயுள் செல்வம் ஏற்படும்.

## பனிரெண்டாவது பாவம்

ஜன்ம லக்கினத்துக்கு 12-ம் இடமாகில் இராகு கேது இருக்க கூடாது விபசார தன்மை ஏற்படும் ஆனால் புதன் இருந்தால் அநேக புத்திரர்கள் ஏற்படும். குரு சுக்கிரன் இருந்தால் தனம் பாக்கியம் ஏற்படும்.

குறிப்பு- இதுவரையில் ஸ்திரிக்குள்ள சாதகப்படி 12 பாவ பலன்களை சொல்லப்பட்டது நிசாபுத்திர பலன்கள் ஆண் சாதகத்துக்கு ஏற்பட்ட பலன்களே இவர்களுக்கும் சொல்லப்படுகிறது.

விவாஹ காலத்தில் ஜோடி சேர்ப்பதில் ஆண் பெண் இரு சாதகங்களில் முக்கியமாக மேலே சொல்லப்பட்ட 12-பாவங்களில் பலன் 7-ம் இடம் 8-ம் இடம் முக்கியமாக கவனிக்க வேண்டும் என்று இருந்தபோதிலும் ஷை இரண்டு இடங்களில் சுப கிரக சேர்க்கை சுப திருஷ்டியுள்ள சாதகங்களாக பார்த்து விவாஹம் செய்யவும் அப்படியில்லாமல் ஆண்பெண் இருசாதகங்களில் ஷை இரண்டு ஸ்தானங்களில் பாப கிரகங்களாகிய சனி இராகு அல்லது செவ்வாய் கூடியும் அல்லது தனித்தும் இருக்கில் ஷை இருசாதகமும் சம பாப திருஷ்டி அடைந்து சுப பார்வை அடைந்தும் மற்ற பாவங்கள் நன்றாக இருந்தால் ஜோடி சேர்த்து விவாஹம் செய்து விடலாம் என்பது என் கருத்து மற்ற யோக பலன் ஆயுள்பலம் இருந்தால் சுபத்தை தரும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# விவாஹ விக்கினம் அதற்கு பரிகாரமும்

ஸ்திரி புருஷ ஜாதகங்களில் ஜன்ம லக்கினத்திற்கு 3-7-9 இந்த இடங்களில் பாப கிரகங்களாகிய செவ்வாய் சனி-இராகு-கேது (சூரியன் தவிர) இவர்களிருந்தால் ஷ சாதகர்களுக்கு விவாஹ தடைபட்டு அதாவது தக்கவயதுகடந்து நடக்கும் மேலும் ஷ ஸ்தானங்களில் பாபகிரஹங்களிருந்து அக்காலம் லக்கினத்திற்கு 6-8-12 வது ஆதிபத்தியம் அடைந்தால் அந்திசை புத்தி காலங்களில் விவாஹமானது வெகுவாகவே கடந்து நடக்கும் அல்லது பல தடங்கல்களுடன் முடிவு அடைந்து விடும்

## இதற்கு பரிகாரம்

ஒரு வெள்ளிக்கிழமை நல்ல நாளாகப்பார்த்து மஹாலக்ஷ்மி அல்லது கௌரி விக்கிரஹம் அல்லது படத்துக்கு மஞ்சள் நீர் பால் அபிஷேகம் பூஜை செய்து பரமான்னம் (பொங்கல்) விளக்கேற்றி நைவேத்தியம் வைத்து பிறகு ஓர் சுமங்கலியை வரவைத்து அவளுக்கு ஸ்நானாதிகள் செய்வித்து ஷ பரமான்னம் (பொங்கல்) புசிக்க செய்து ஓர் வஸ்திரம் தானம் கொடுத்து திருப்திபடுத்தி அவளிடம் அக்ஷதை ஆசிர்வாதம் பெற்றால் சீக்கிரம் விவாஹபிராப்தி ஏற்படும். தவிர இந்த புஸ்தகத்தில் முன்பக்கம் சொல்லியிருக்கிறபடி விநாயக ஸ்தோத்திரம் லக்ஷ்மி ஸ்தோத்திரமும் பாராயணம் செய்துவரில் சர்வகாரியம் ஜயமும் விவாஹ பிராப்தியும் உண்டாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

# விவாஹ காலம்

*(1) ஜன்ம லக்கினத்திற்கு சப்தமாதி (7க்குடையவன்) அல்லது சுக்கிரன் இவர்கள் லக்கினாதிபதி இருக்கும் ராசியில் அல்லது திருகோண ராசிகளில் வரும் போது குருபலவானாக இருக்கும்போது விவாஹ பிராப்தி யுண்டாகும்.*

*(2) களத்திரஸ்தானத்தில் (7ம் இடத்தில்) இருப்பவர் அல்லது அந்தஸ்தானாதிபதியிருக்கும் ராசினாதனுடைய திசைபுத்தி காலங்களில் அல்லது கோசாரரீதியாக லக்கினாதிபதி களத்திரஸ்தானத்திற்கு வரும்போது விவாஹம் ஏற்படும். மேலும் ஜன்ம ராசியை குரு பார்த்தாலும் விவாஹ காலம் ஏற்படும்.*

சுபம்!

நந்திதேவர் அருளிய சோதிட மர்மம்

**மூன்றாம் பாகம் முற்றியது**

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நந்திதேவர் அருளிய

# சோதிட மர்மம்



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy